வடக்கின் முதல் நாளிதழ் – Estd 1959

விலை ரூ. 20/=

# ஈழநாடு

Eelanadu




Email : news@eelanadu.lk | மலர் : 01 | 30.10.2021 சனிக்கிழமை | இதழ் : 329 | பக்கங்கள் : 16




# ஜனாதிபதி கோட்டாபயவுக்கு எதிராக ஸ்கொட்லாந்தில் மிகத்தீவிர பரப்புரை

## பிரபல ஊடகங்களில் எச்சரிக்கை ஆக்கங்கள்

லண்டன், ஒக். 30

அடுத்த வாரம் பிரிட்டனுக்கு பயணம் மேற்கொள்ளும் இலங்கை ஜனாதிபதி கோட்டாபய ராஜ பக்ஷவுக்கு எதிராக ஸ்கொட்லாந்தில் என்றுமில்லாத வகையில் பரப்புரைகள் தீவிரப்படுத்தப்பட்டுள்ளன.

அவரின் பயணத்துக்கு கடும் எதிர்ப்பை வெளியிடும் நடவடிக்கைகளை லண்டன் வாழ் தமிழர்கள் முடுக்கிவிட்டுள்ளனர். 15

# தடுப்பூசி பெறாதவர்கள்மீது சட்ட நடவடிக்கைக்கு தயார்!

## ஜனாதிபதியிடம் சுகாதார பிரிவு தெரிவிப்பு

கொழும்பு, ஒக்ரோபர் 30

தடுப்பூசி பெறாதவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுப்பது தொடர்பில் சட்ட மா அதிபரின் ஆலோசனை பெறப்படவுள்ளது என்று சுகாதார பிரிவு அதிகாரிகள் ஜனாதிபதியிடம் கூறியுள்ளனர். 15

# நில ஆக்கிரமிப்பை எதிர்த்து வவுனியாவில் போராட்டம்!

## தமிழ் தேசிய மக்கள் முன்னணி ஏற்பாட்டில்

வவுனியா, ஒக். 30

அநுராதபுர மாவட்டத்தின் வடக்கு பகுதியை சேர்ந்த சிங்கள மக்கள் வாழும் கிராமங்கள் சிலவற்றை வவுனியா வடக்கு பிரதேச செயலர் பிரிவுடன் எல்லை நிர்ணயத்தின் ஊடாக இணைக்க மேற்கொள்ளப்படும் செயற்பாட்டை கண்டித்து நேற்று வவுனியா பழைய பஸ் நிலையத்துக்கு முன்பாக ஆர்ப்பாட்டமொன்று இடம் பெற்றது.

தமிழ் தேசிய மக்கள் 15

# எல்லை நிர்ணயம் என்ற பெயரில் வவுனியாவில் சிங்கள ஆதிக்கம்!

## கஜேந்திரகுமார் எம். பி. குற்றச்சாட்டு

வவுனியா, ஒக். 30

அநுராதபுரத்தின் எல்லைப் பகுதியில் இருக்கக் கூடிய கிராமங்களை வவுனியா வடக்கு பிரதேச சபைகளுடன் இணைத்து எல்லை நிர்ணயம் என்ற பெயரில் சிங்கள மக்களை வவுனியா மாவட்டத்தில் கூட்டி இந்த மாவட்டத்தின் இன விகிதாசாரத்தை மாற்றியமைக்க இலங்கை அரசாங்கத்தால் சதி முயற்சிகள் எடுக்கப்பட்டுள்ளன என்று தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் 15

# பல்கலைக்கழக வெட்டுப்புள்ளி வெளியானது!

கொழும்பு, ஒக். 30

பல்கலைக்கழகங்களுக்கான வெட்டுப்புள்ளி நேற்று வெளியிடப்பட்டது.

2020ஆம் ஆண்டு நடைபெற்ற க.பொ.த. உயர்தரப் பரீட்சையின் 15

# 'வாழ்வகம்' ரவீந்திரனுக்கு யாழ் விருது!

யாழ்ப்பாணம், ஒக். 30

யாழ். மாநகர சபையால் வழங்கப்படும் யாழ் விருது இந்த ஆண்டு வாழ்வக நிறுவனத்தின் தலைவர் ஆ. ரவீந்திரனுக்கு வழங்கப்படவுள்ளது.

நல்லைக்குமரன் மலர் வெளியீடு, யாழ் விருது வழங்கல் குறித்து யாழ். மாநகர ஆணையாளரும், சைவ சமய 15





# சம்பந்தனுடன் இந்திய தூதர் நேற்று மாலை திடீர் சந்திப்பு

கொழும்பு, ஒக். 30

இலங்கைக்கான இந்தியத் தூதுவர் கோபால் பாக்லேவுக்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தனுக்கும் இடையில் நேற்று முக்கிய சந்திப்பு இடம்பெற்றது.

சம்பந்தனின் கொழும்பு இல்லத்தில் நேற்று மாலை 4 மணியளவில் இருவரும் சந்தித்து உரையாடினர்.

இந்தச் சந்திப்பில் தூதரகத்தின் முதலாவது 15

# யாழில் அத்தியாவசிய பொருட்கள் தட்டுப்பாடின்றி கிடைக்க ஏற்பாடு

## மாவட்ட செயலர் அறிவிப்பு

யாழ்ப்பாணம், ஒக். 30

யாழ்ப்பாண மாவட்டத்தில் அத்தியாவசியப் பொருட்கள் தட்டுப்பாடின்றி கிடைப்பதற்குரிய ஏற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டுள்ளதாக யாழ். மாவட்ட செயலர் க. மகேசன் தெரிவித்தார்.

யாழ். மாவட்ட செயலகத்தில் நேற்று நடத்திய ஊடகவியலாளர் சந்திப்பின்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

யாழ். மாவட்டத்தில் தற்போது கோவிட் 15






உண்மைகள் புனிதமானவை; கருத்துக்கள் சுதந்திரமானவை

# சர்வதேச நிறுவனங்களை விமர்சிப்பதை தவிருங்கள்!

கொழும்பு, ஒக். 30

சர்வதேச நிறுவனங்களை விமர்சிப்பதை விட்டுவிட்டு, அரசாங்கம் எதிர்வரும் வரவு-செலவுத் திட்டத்தை முறையாக பயன்படுத்திக்கொள்ள வேண்டும் என முன்னாள் சபாநாயகர் வழியுறுத்தியுள்ளார்.

இது தொடர்பில் விளக்கமளித்து அவர் நேற்று வெளியிட்டுள்ள ருவிட்டர்பதிவிலேயே இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

மூடிஸ் நிறுவனத்தின் கடன் தரப்படுத்தல் பட்டியலில் அடிமட்ட தரப்படுத்தலான Caa2 வரையில் இலங்கையை தரமிறக்கியுள்ளது. இருந்த போதிலும், தற்போது நிலவும் நெருக்கடி நிலையை வெளிப்படுத்தியுள்ள சர்வதேச தரப்படுத்தல் நிறுவனங்களை விமர்சிக்கும் வகையில் அரசாங்கம் செயற்படக் கூடாது.

மாறாக, அடுத்த வரவு - செலவுத் திட்டத்தை சிறந்த சந்தர்ப்பமாக பயன்படுத்திக் கொண்டு தேவையான மாற்றங்களை கொண்டு வரவேண்டும் என்று அவர் வலியுறுத்தியுள்ளார்.

# சாதாரணதர, உயர்தர வகுப்புகளை மீண்டும் ஆரம்பிப்பதற்கு தீர்மானம்

கொழும்பு, ஒக். 30

**பாடசாலைகளில் க.பொ.த சாதாரண தரம், உயர் தரங்களுக்கான கல்வி நடவடிக்கைகளை ஆரம்பிப்பதற்கு அரசு தீர்மானித்துள்ளதுடன் அதற்கான சுகாதாரப் பரிந்துரைகளும் சுகாதாரப் பிரிவினரால் வழங்கப்பட்டுள்ளது.**

கோவிட் தொற்றுப் பரவல் காரணமாக, பாடசாலை மாணவர்களின் கல்வி பெருமளவில் பாதிக்கப்பட்டுள்ளதால், அது தொடர்பில் அவதானம் செலுத்தி, கல்விப் பொதுத் தராதர சாதாரண தரம் மற்றும் உயர்தரங்களுக்கான பாடசாலைக் கல்வி நடவடிக்கைகளை ஆரம்பிப்பதற்கான சுகாதாரப் பரிந்துரைகள் கிடைக்கப் பெற்றுள்ளன.

இது தொடர்பில், பாடசாலை அதிபர்களுக்கு அறிவுறுத்தி, கல்வி நடவடிக்கைகளை விரைவில் ஆரம்பிப்பதற்கான ஏற்பாடுகளைச் செய்யுமாறு, ஜனாதிபதி நேற்று இடம்பெற்ற கோவிட் தொற்றொழிப்பு செயலணிக் கூட்டத்திக் தெரிவித்தார்.

அத்துடன், பல்கலைக்கழக முதலாம் ஆண்டு மாணவர்களுக்கான கல்வி நடவடிக்கைகளை ஆரம்பிப்பது தொடர்பில் விரைவில் ஆராயுமாறும், சுகாதார மற்றும் கல்வி அதிகாரிகளுக்கு ஜனாதிபதி அறிவுறுத்தினார். (அ)

# இலங்கைக்கு மேலும் 2 மில்லியன் யூரோ நிதியை வழங்கிய ஐரோப்பிய ஒன்றியம்

கொழும்பு, ஒக். 30

தொற்றுநோயை நிர்வகிப்பதற்கான அதன் முயற்சிகளில் இலங்கைக்கு உதவ ஐரோப்பிய ஒன்றியம் மேலும் 2 மில்லியன் யூரோ நிதியை வழங்கியுள்ளது.

ஐரோப்பிய ஒன்றியத்தின் மனிதாபிமான அலுவலகமான எக்கோ வழங்கும் இந்த மானியம், உலக சுகாதார அமைப்பு மற்றும் இலங்கையில் உள்ள வேள்ட் விஷன் மூலம் வழங்கப்படும் என ஐரோப்பிய ஒன்றியம் ஓர் அறிக்கையில் தெரிவித்துள்ளது.

இந்த வளங்கள் கோவிட் -19 மற்றும் இலங்கையில் அதன் சமூகப் பொருளாதார விளைவுகளை எதிர்த்துப் போராடுவதற்கான தற்போதைய ஐரோப்பிய ஒன்றிய ஆதரவை நிறைவு செய்கின்றன என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த புதிய உதவித்தொகையானது கொரோனா வைரஸ் தொற்றுநோய்க்கு ஐரோப்பிய ஒன்றியத்தின் உலகளாவிய பிரதிபலிப்பின் ஒரு பகுதியாகும் என்றும் இது இலங்கையில் உலக சுகாதார அமைப்புடனான தற்போதைய பங்காளித்துவத்தை நிறைவு செய்கிறது என்றும் இலங்கைக்கான ஐரோப்பிய ஒன்றியத் தூதுவர் டெனிஸ் சாய்பி கூறியுள்ளார்.

# மோட்டார் போக்குவரத்து திணைக்கள செயல்பாடுகள் நேற்று முதல் ஆரம்பம்

கொழும்பு, ஒக். 30

கொரோனா காரணமாக இடைநிறுத்தப்பட்டிருந்த மோட்டார் வாகன போக்குவரத்து திணைக்களத்தின் அனைத்து காரியாலயங்களின் செயல்பாடுகளும் நேற்று முதல் மீள ஆரம்பமாகியுள்ளன.

அதன்படி, முன்பதிவு செய்துக்கொண்டு தமக்கான நேரத்தை ஒதுக்கிக்கொள்பவர்களுக்கு மாத்திரமே சேவையை பெற்றுக்கொள்ள முடியும் என மோட்டார் போக்குவரத்து திணைக்களம் தெரிவித்துள்ளது.

இதற்கமைய, முன்பதிவு செய்து கொள்வதற்காக 211 7116 என்ற தொலைபேசி இலக்கம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

அனைத்து மாவட்டங்களில் உள்ளவர்களும் தமது மாவட்டத்துக்கான தொலைபேசி குறியீட்டு எண்ணை மேற்குறிப்பிட்ட எண்ணுக்கு முன்னால் உட்செலுத்தி அழைப்பை மேற்கொள்வதன் ஊடாக முன்பதிவு செய்து கொள்ள முடியும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

உதாரணமாக கொழும்பு மாவட்டத்தில் உள்ள அலுவலகத்தில் சேவையை பெற முன்பதிவு செய்துக்கொள்ள உள்ளவர்கள் 011 - 211 7116 என்றவாறு தொலைபேசி இலக்கத்தை குறிப்பிட்டு அழைக்க வேண்டும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)

# 12 வயதுக்கு மேற்பட்ட மாணவர்கள் சகலருக்கும் டிசெம்பருக்குள் தடுப்பூசி

கொழும்பு, ஒக். 30

எதிர்வரும் டிசெம்பர் இறுதிக்குள் 12 வயதுக்கு மேற்பட்ட அனைத்து பாடசாலை மாணவர்களுக்கும் கோவிட்-19 தடுப்பூசியை வழங்கப்படும் என்று அரசு தெரிவித்துள்ளது.

அதனால் 2022ஆம் ஆண்டு தொடக்கத்தில் இருந்து நாட்டை முழுமையாக திறக்க அரசு உத்தேசித்துள்ளதாக விவசாய அமைச்சர் மஹிந்தானந்த அளுத்கமகே தெரிவித்துள்ளார்.

நாவலப்பிட்டியில் நேற்று இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

கோவிட் -19 தொற்றினால் நாட்டில் சுற்றுலா உள்ளிட்ட கைத்தொழில்கள் முற்றாக முடங்கியுள்ளதால் நாட்டின் வருமான மட்டம் வீழ்ச்சியடைந்துள்ளதாகவும் விவசாய அமைச்சர் கூறினார். (அ)

## இந்திய மீனவர்களை யாழ். சிறைச்சாலைக்கு மாற்றுவதற்கு அனுமதி!

வடமராட்சி, ஒக். 30

இந்திய மீனவர்கள் 23 பேரையும் யாழ்ப்பாணம் சிறைச்சாலைக்கு மாற்றவும், அவர்களிடம் நீரியல் வளத்துறை அதிகாரிகள் வாக்குமூலம் பெறவும் பருத்தித்துறை நீதிவான் நீதிமன்றம் நேற்று அனுமதி வழங்கியுள்ளது.

இதற்கான நகர்த்தல் பத்திரம் நீரியல் வளத் திணைக்கள அதிகாரிகளால் பருத்தித்துறை நீதிமன்றில் சமர்ப்பிக்கப்பட்டது. இது தொடர்பில் நேற்றைய தினம் விசாரித்த பருத்தித்துறை நீதிவான் கிரிசாந்தன் பொன்னுத்துரை அதற்கு அனுமதி வழங்கினார்.

கடந்த 14 ஆம் திகதி கடற்படையால் கைது செய்யப்பட்ட இந்திய மீனவர்கள் 23 பேருக்குமான வழக்கு நேற்று முன்தினம் வியாழக்கிழமை பருத்தித்துறை நீதிமன்றில் இடம்பெற்றது. இதன்போது அவர்களை கரைநகர் கடற்படை முகாமில் அடுத்தமாதம் 11 ஆம் திகதி வரை தொடந்து தடுத்து வைக்குமாறு நீதிமன்று உத்தரவிட்டமை குறிப்பிடத்தக்கது. (ஐ-02)

### கல்வி tv CHANNEL-1

**30.10.2021**
**சனிக்கிழமை**

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 05.15 | தரம்-06 | கணிதம் |
| 06.00 | தரம்-07 | கணிதம் |
| 06.45 | தரம்-08 | விஞ்ஞானம் |
| 07.30 | தரம்-09 | கணிதம் |
| 08.15 | தரம்-10 | தமிழ் |
| 09.00 | மாணவர்களுக்கானது | ஆலோசனை |
| 09.15 | க.பொ.த.உயர்தரம் | ஊடகம் |
| 10.15 | க.பொ.த.உயர்தரம் | கணக்கீடு |
| 11.15 | க.பொ.த.உயர்தரம் | கணிதம் |
| 12.15 | General knowledge | General knowledge |
| 12.30 | 06 TO சாதாரணதரம் | English |
| 01.15 | க.பொ.த. சா.தரம் | மனைப்பொருளியல் |
| 02.00 | க.பொ.த. சா.தரம் | சித்திரம் |
| 02.45 | க.பொ.த. சா.தரம் | தமிழ் இலக்கியம் |
| 03.30 | க.பொ.த சா.தரம் | கத்தோலிக்கம் |
| 04.15 | க.பொ.த. சா.தரம் | புவியியல் |
| 05.00 | A/Lவினாத்தாள் | Live Telecast வணிகப்பிரிவு |
| 06.00 | தரம்-05 | புலமைப்பரிசில் சிங்களம் |
| 07.00 | A/Lவினாத்தாள் | மறு ஒளிபரப்பு |
| 08.00 | தரம்-05 | புலமைப்பரிசில் மறு ஒளிபரப்பு அனைத்துப் பாடங்களும் |
| 09.00 | க.பொ.த.உயர்தரம் | ஊடகம் |
| 10.00 | க.பொ.த.உயர்தரம் | கணக்கீடு |
| 11.00 | க.பொ.த.உயர்தரம் | கணிதம் |
| 12.00 | 06 TO Learning English | English |
| 12.45 | க.பொ.தா சா.தரம் | மனைப்பொருளியல் |
| 01.30 | க.பொ.தா சா.தரம் | சித்திரம் |
| 02.15 | க.பொ.தா சா.தரம் | தமிழ்இலக்கியம் |
| 03.00 | க.பொ.தா சா.தரம் | கத்தோலிக்கம் |
| 03.45 | க.பொ.தா சா.தரம் | புவியியல் |
| 04.30 | தரம்-10 | தமிழ் |

### கல்வி tv CHANNEL - 2

**30.10.2021**
**சனிக்கிழமை**

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 06.00 | பஞ்சபுராணம் | பஞ்சபுராணம் |
| 06.15 | நற்கருணை | நற்கருணை |
| 06.30 | திருக்குறள் பொருள | நாள் ஒரு திருக்குறள் |
| 06.45 | PLAY GROUP | பாட்டு |
| 07.30 | முன்பள்ளி | அழகியல் |
| 08.15 | தரம்-01 | அழகியல் |
| 09.00 | தரம்-02 | கதை |
| 09.45 | தரம்-03 | கிறிஸ்தவம் |
| 10.30 | தரம்-03 | சைவசமயம் |
| 11.15 | தரம்-04 | Computer |
| 12.30 | தரம்-04 | கிறிஸ்தவம் |
| 01.15 | தரம்-05 | Computer |
| 02.00 | தரம்-05 | கிறிஸ்தவம் |
| 02.45 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 03.30 | PLAY GROUP | பாட்டு |
| 04.15 | முன்பள்ளி | அழகியல் |
| 05.00 | தரம்-01 | English Cartoom |
| 05.15 | தரம்-02 | கதை |
| 06.00 | தரம்-03 | கிறிஸ்தவம் |
| 06.45 | தரம்-03 | சைவசமயம் |
| 07.30 | தரம்-04 | Computer |
| 08.15 | தரம்-04 | கிறிஸ்தவம் |
| 09.00 | தரம்-05 | Computer |
| 09.45 | தரம்-05 | கிறிஸ்தவம் |
| 10.30 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 11.15 | தரம்-03 | கிறிஸ்தவம் |
| 12.30 | தரம்-03 | சைவசமயம் |
| 01.15 | தரம்-04 | Computer |
| 02.00 | தரம்-04 | கிறிஸ்தவம் |
| 02.45 | தரம்-05 | Computer |
| 03.30 | தரம்-05 | கிறிஸ்தவம் |
| 04.15 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 05.00 | English | CARTOON |
| 05.30 | English | பாட்டு |

ஈழநாடு
Eelanadu
30.10.2021 சனிக்கிழமை
பிலவ வருடம், ஐப்பசி 13

**"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்**
**உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"**
- யோகர் சுவாமிகள்.

E-mail: editor@eelanadu.lk,
news@eelanadu.lk
தொலைபேசி : 021 730 1370

## சீனாவின் மறைமுக எச்சரிக்கை?

சீன அரசு, இலங்கை மக்கள் வங்கியை கறுப்பு பட்டியலில் இட்டுள்ளது. கொடுக்கல் - வாங்கல் தொடர்பில் உரியமுறையில் பதிலளிக்கவில்லை என்னும் குற்றச்சாட்டின் அடிப்படையிலேயே இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. சீனாவிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட உரம் தரமற்றது என்னும் அடிப்படையில் அண்மையில் அரசாங்கம் அதனை நிராகரித்திருந்தது. இதனைத் தொடர்ந்து இந்தியாவிலிருந்து நைதரசன் உரம் இறக்குமதி செய்யப்பட்டது.

எனினும், தமது உரத்தை மீளவும் சோதனைக்கு உட்படுத்துமாறு சீனத் தூதரகம் வேண்டுகோள் விடுத்திருந்தது. இதில், அரசாங்கத்திற்கும் சீனாவிற்கும் இடையில் ஓர் இழுபறி ஏற்பட்டது. இவ்வாறானதொரு பின்புலத்தில்தான் தற்போது இலங்கை மக்கள் வங்கியை சீன அரசு கறுப்பு பட்டியலில் இணைத்திருக்கின்றது. இலங்கை அரசாங்கத்திற்கு சொந்தமான வங்கி ஒன்றை கறுப்பு பட்டியலில் இடுவதானது, இலங்கையின் வங்கி நடவடிக்கைகள்மீதான ஒரு கறையாகும். அதேவேளை நிதியமைச்சரான பஸில் ராஜபக்ஷவிற்கும் இது ஓர் இழுக்காகும்.

அண்மைக்காலமாக குறிப்பாக பஸில் ராஜபக்ஷ மீளவும் அரசியலில் பிரவேசித்ததன் பின்னர், இந்தியா மற்றும் அமெரிக்காவுடனான உறவுகளை பலப்படுத்தும் சில நடவடிக்கைகளை அரசாங்கம் முன்னெடுத்து வருகின்றது. கொழும்பு துறைமுகத்தின் மேற்கு கொள்கலன் முனையத்தை இந்தியாவுக்கு வழங்கும் ஒப்பந்தத்தை அவசரமாக முடிவுக்குக் கொண்டுவந்தது. அதேவேளை, கெரவலப்பிட்டி மின் நிலையத்தின் 40 விகிதமான பங்குகளை அமெரிக்க நிறுவனம் ஒன்றிற்கு வழங்கும் உடன்பாட்டிலும் அரசாங்கம் அவசரமாகக் கையெழுத்திட்டது. இது தொடர்பில் பங்காளிக் கட்சிகளுடன் கலந்துரையாடப்படவில்லை. இந்த பின்புலத்தில்தான் அவர்கள் தற்போது இதற்கு எதிராக போர் கொடி உயர்த்தியிருக்கின்றனர்.

இதன்மூலம் கொழும்பு சீனாவுடனான உறவில் நெருக்கடிகளை ஏற்படுத்தினால், அதற்கு சீனாவால் பல்வேறு வழிகளில் பதிலளிக்க முடியும் என்பதே, இதன் மூலம் தெளிவாகின்றது. ஏற்கனவே, இலங்கை சீனாவின் கடன்பொறிக்குள் சிக்குண்டிருக்கின்றது. கடன் பொறியிலிருந்து மீளமுடியாமல்தான் ரணில் - மைத்திரி அரசாங்கம் அம்பாந்தோட்டை துறைமுகத்தை 99 வருட குத்தகைக்கு வழங்கும் முடிவை எடுத்தது. இதிலிருந்து பிறிதொரு விடயமும் தெளிவாகின்றது. கொழும்பு அதன் முதல் தெரிவாக சீனாவை கருத்தில் கொள்ளாதபோது, சீனாவும் இலங்கையின்மீதான பிடிகளை இறுக்கலாம்.

ஏனெனில், தாங்கள் அனுப்பிய உரத்தை தரமற்றது என்று கூறுவதை சீனாவால் ஏற்றுக்கொள்ள முடியவில்லை. இது தங்களின் உலகளாவிய வர்த்தகத்தில் பாதிப்பை ஏற்படுத்துவதாக சீனா கருதுவதற்கு நிச்சயம் இடமுண்டு. சீனாவைப் பொறுத்தவரையில் பல்வேறு வழிகளில் இலங்கைக்கு உதவி வருகின்றது. மேற்குலக நாடுகள் மனித உரிமைகள் சார்ந்து கொடுக்கும் அழுத்தங்களின் போதும் சீனாவே சர்வதேச அரங்குகளில் இலங்கைக்கான கவசமாக தொழில்படுகின்றது. இந்த நிலையில் இலங்கையில் தாங்களே முதன்மையான தெரிவாக இருக்க வேண்டுமென்று சீனா கருதினால், அதனை கொழும்பால் சாதாரணமாகக் கடந்துசொல்ல முடியாது.

இலங்கை அரசாங்கம் ஒரே நேரத்தில் - சீனா, இந்தியா, அமெரிக்கா ஆகிய முத்தரப்புக்களை சமாளிக்க வேண்டிய நெருக்கடிக்குள் அகப்பட்டிருக்கின்றது. அரசாங்கத்தினால் இதனை வெற்றிகரமாக சமாளிக்க முடியுமா? ஒன்றுடன் ஒன்று முரண்பாடுள்ள சீனாவையும் அதற்கு எதிர்நிலையிருக்கும் அமெரிக்க - இந்திய கூட்டையும், ஒரே நேரத்தில் கையாளும் ஆடுபுலியாட்டம் ஒன்றுக்குள் இலங்கைத் தீவு அகப்பட்டிருக்கின்றது. இதில் எவரை விரோதித்தாலும் இறுதியில் பாதிக்கப்போவது இலங்கையாகவே இருக்கும்.

# ஆர்ப்பாட்டங்களால் அதிரப்போகும் தலைநகர்!

- அலசுவது இராஜதந்திரி -

*இன்றைய ஆட்சியாளர்கள்மீது அரசாங்கத்தில் அங்கம் பெறுகின்ற பங்காளிக் கட்சிகள் மட்டுமல்ல. நாடளாவிய ரீதியில் பல்வேறு தொழில்சங்கங்களும் ஆர்ப்பாட்டங்களை நடத்த ஆயத்தமாகி வருகின்றன.*

*சில தொழில்சங்கங்கள் ஏற்கனவே தலைநகர் கொழும்பில் ஆர்ப்பாட்டங்களை நடத்தியிருந்தன. அத்துடன், கல்வித்துறையின் அதிபர்கள், ஆசிரியர்கள் ஆகியோரை உள்ளடக்கிய தொழில்சங்கமொன்று சில தினங்களுக்கு முன்னர் கொழும்பு கோட்டை ரயில் நிலையத்திலிருந்து ஜனாதிபதி செயலகம் வரை தமது சம்பளப் பிரச்னைகள் தொடர்பாக ஆர்ப்பாட்ட ஊர்வலமொன்றை நடத்தியிருந்தது.*

*இன்றைய அரசில் அங்கம் வகிக்கும் பங்காளிக் கட்சிகளே ஆட்சியதிகார விடயங்களில் அதிருப்தி கொண்டவைகளாக இருக்கின்றன. அத்துடன், பங்காளிக்கட்சிகளின் பிரதிநிதிகளான அமைச்சர்கள் தினேஷ் குணவர்த்தன, வாசுதேவ நாணயக்கார, விமல் வீரவன்ஸ மற்றும் உதய கம்மன்பில ஆகியோர் தாழ்வு நிலையிலிருக்கும் அரசை பாதுகாக்க போராடுகிறோமே தவிர அரசைக் கவிழ்ப்பதற்காகவல்ல என்று தெரிவித்துள்ளனர்.*

*இன்றைய அரசை பதவியலமர்த்துவதில் பங்காளிக்கட்சிகளே முக்கிய பங்காற்றியிருந்தன. அத்துடன், வாசுதேவ நாணயக்கார, தினேஷ் குணவர்த்தன, விமல் வீரவன்ஸ, உதய கம்மன்பில ஆகியோர் பங்காளிக்கட்சிகளின் 'பிரசாரப் பீரங்கிகள்' என்று கூறப்படுமளவுக்கு மிகத்தீவிரமாக ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, பிரதம மந்திரி மஹிந்த ராஜபக்ஷ ஆகியோர் தலைமையிலான ஆட்சியை நாட்டில் ஏற்படுத்தும் விதத்தில் கடுமையாக உழைத்திருந்தனர்.*

*பங்காளிக் கட்சிகளின் பிரதிநிதிகள் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவுக்கு மிக நெருக்கமானவர்களாக இருக்கின்றனர். இந்நிலையில் அரசுக்குள்ளேயே இன்றைய ஆட்சியாளர்கள் தொடர்பாக அதிருப்தி ஏற்பட்டுள்ளதையும் பங்காளிக் கட்சிகளிலிருப்போர் அரசை பாதுகாக்கவே போராடுகின்றோம் என்று தெரிவித்திருப்பதன் மூலம் அறிய முடிகின்றது.*

*இதுதவிர, மூத்த அரசியல்வாதியான பிரதம மந்திரி மஹிந்த ராஜபக்ஷகூட ஜனாதிபதியான தமது சகோதரரின் சில ஆட்சியதிகார நடவடிக்கைகள் தொடர்பாக அதிருப்தி கொண்டுள்ளார் எனவும் அவருக்கு நெருக்கமானவர்கள் மூலமாக அறிய முடிகின்றது.*

*எனவே, அரசுக்குள்ளேயே ஆட்சியதிகார விடயங்கள் தொடர்பாக முரண்பட்ட போக்கு காணப்படுகின்ற நிலையில், எவ்வளவு தூரம் பொதுமக்கள் இன்றைய ஆட்சியாளர்கள்மீது அதிருப்தி கொண்டுள்ளார்கள் என்பதை வெளிப்படுத்துவதாகவே தலைநகரில் இடம்பெறும் தொழில்சங்க போராட்டங்கள் விளங்குகின்றன. இத்தொழில்சங்க போராட்டங்கள் மேலும் நாடளாவிய ரீதியில் விரிவடையும் அறிகுறிகளே பலமாகத் தென்படுகின்றன.*

*கடந்த சில தினங்களுக்கு முன்னர் அதிபர்கள், ஆசிரியர்கள் ஆகியோர் சம்பள முரண்பாடு தொடர்பில் தொழில்சங்க போராட்டங்களில் குதித்திருந்தனர். இதைத் தொடர்ந்து, விவசாயிகளும் தமது பிரச்னைகள் தொடர்பில் சரியான போராட்டத்தில் குதிக்கவுள்ளனர் என்பதை அறிய முடிகின்றது.*

*மேலும் எதிர்வரும் நவம்பர் மாதம் நாடளாவிய ரீதியில் மாபெரும் போராட்டங்களை விவ சாயிகள் முன்னெடுக்கவுள்ளனர் என்று தெரி விக்கப்படுகின்றது. ஏற்கனவே, விவசாயத் துறை அமைச்சர் மஹிந்தானந்த அளுத்கமகேவுக்கு எதிராக நாட்டின் பல்வேறு பாகங்களிலும் விவசாயிகள் போர்க்கொடி தூக்க ஆரம்பித்துள்ளனர்.*

*அத்துடன், விவசாய அமைச்சரின் கொடும்பாவிகளும் விவசாயிகளினால் நாட்டின் பல்வேறு பகுதிகளிலும் தீயிட்டுக் கொழுத்தப்பட்டுள்ளன. விவசாயத்துறை நிபுணர்களின் கருத்துப்படி உலகில் எந்தவொரு நாட்டிலும் இரசாயன உரப்பாவனை முற்று முழுதாக தடை செய்யப்படவில்லை எனவும், ஆனால், இலங்கையில் இரசாயன உரப் பாவனையின் தடையினால் விவசாயத் துறைக்கு பாதிப்பு ஏற்படுவதோடு மட்டுமல்லாது பொருளாதார ரீதியாகவும் பாதிப்புகள் ஏற்படும் சூழ்நிலைகளே ஏற்படுமெனவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. ஏனெனில், இலங்கைக்கு அந்நியச் செலாவணியை ஈட்டித்தருகின்ற பெருந்தோட்ட பயிர்களுக்கு இரசாயன உரங்கள் மிக அத்தியாவசியமாக தேவைப்படுகின்றன.*

*பெருந்தோட்டப் பயிர்களுக்கு மட்டுமல்ல. ஏனைய விவசாயப் பயிர்களுக்கும் குறிப்பிட்டளவில் இரசாயன உரம் தேவைப்படுவதாகவே இருக்கின்றது. குறிப்பாக உருளைக்கிழங்கு, மற்றும் மலைநாட்டு மரக்கறி வகைகளுக்கும் இரசாயன உரவகைகள் பெரிதும் தேவைப்படுகின்றன. எனவே, அவற்றின் பாவனையை தடுக்கும் பட்சத்தில் விவசாயிகள் பாதிக்கப்படும் சூழல்களே பலமடையும் என்றே கருதமுடியும்.*

*இரசாயன உரப்பாவனை தடுக்கப்பட்டு விவசாயப் பொருட்களின் ஏற்றுமதி பாதிக்கப்படுமேயானால் விவசாய ஏற்றுமதிப் பண்டங்கள் மூலமாக விவசாயிகளுக்கு கிடைக்கக்கூடிய 2,400 மில்லியன் டொலர் வருவாய் கிடைக்காது போகக்கூடிய நிலைமையே ஏற்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.*

*இந்நிலையில் அரசுக்கு எதிராக ஆர்ப்பாட்டங்கள் முளைவிட ஆரம்பித்துள்ள நிலையில் தலைநகர் எதிர்வரும் நாட்களில் ஆர்ப்பாட்டங்களால் அதிரப்போகும் அறிகுறிகளே பலமாக இருப்பதையும் இந்த ஆர்ப்பாட்டங் கள் நாடளாவிய ரீதியல் விரிவடையும் சூழ்நிலைகளும் அதிகரித்து வருவதையே உணரமுடிகின்றது.*

## அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'






**மேடம்**

பயணங்களால் நன்மை ஏற்படும். மனதில் பரபரப்பு கூடும் நீண்ட நாளாக தாமதம் ஏற்பட்டுக் கொண்டிருந்த பண வரவு கிடைக்கும். வியாபாரிகள் முன்னேற்றமான நிலையை அடைவீர்கள்.

**இடபம்**

பணியிடத்தில் கவனமாக இருந்து பிரச்னையில் இருந்து தப்புவீர்கள். நெருக்கமற்றவர்களிடம் உங்களது மனக்குறைகளை சொல்ல வேண்டாம். தவறுகளை திருத்திக் கொள்வீர்கள்.

**மிதுனம்**

மனதிற்கு இனிய அன்பர்களுக்கு உதவி செய்வீர்கள். கலைத்துறையினருக்கு வெற்றியும், விருதும் கிடைக்கும் அன்பை வெளிப்படுத்தும் விதத்தால் பிறரது மனங்களை வெல்வீர்கள்.

**கடகம்**

மனதில் இருந்து வந்த மந்தநிலை மாறும். தொழிலில் இலாபம் அதிகரிக்கும். புதிய விஷயங்களை கற்றுக்கொண்டு பிறருக்கும் கற்றுத் தருவீர்கள்.

**சிம்மம்**

மனதுக்கு நெருக்கமானவர் செய்யும் நல்ல செயல் உங்களை மகிழ்விக்கும். சிறு உடல் உபாதைகளை பெரிதுபடுத்தி கவலை கொள்ளாதீர்கள். வெளிநாடு செல்லும் யோகம் எதிர்பார்த்தபடி கைகூடும்.

**கன்னி**

பொறுமை காரணமாக நல்ல விஷயம் ஒன்றை அடைவீர்கள். புதிய திட்டங்களில் தடைகள், தாமதங்கள் ஏற்படலாம். பணியிடத்தில் ஏற்பட்ட சில இடையூறுகள் விலகும்.

**துலாம்**

நண்பர்களுக்கு சில நன்மைகளை செய்து மகிழ்வீர்கள். தியாகம் செய்யும் மனப்பான்மை காரணமாக வெல்வீர்கள். சிறு மனமாற்றம் ஏற்படும். உடல் நிலை சரியாகும்.

**விருட்சிகம்**

போட்டியில் வெல்வீர்கள். பேச்சில் கவனமாக இருக்க வேண்டும். கூடுதலாக உழைத்து வெற்றி பெறக்கூடிய நாள். வெளிநாடு செல்ல வாய்ப்புகள் கிடைக்கும். சிறு சலசலப்பை சமாளிப்பீர்கள்.

**தனுசு**

பணியிடமாற்றம் குறித்து இப்போதைக்கு எந்த முயற்சியும் எடுக்க வேண்டாம். குழந்தைகளின் செயல்பாடுகள் உங்களுக்கு மகிழ்ச்சியை கொடுக்கும். குழந்தைகளுடன் மனம் விட்டுப் பேசுவது நல்லது.

**மகரம்**

நிதி நிலையில் இருந்த தேக்க நிலை மாறும். பிறருடன் இருந்த கருத்து வேறு பாடுகள் குறையும். சுபச்செய்தி வரும். குழந்தை பாக்கியத்திற்காக காத்திருப்போருக்கு நல்ல செய்தி உண்டு.

**கும்பம்**

நண்பர்கள் இடையே பரஸ்பர உதவி செய்து கொள்வீர்கள். உங்களின் முயற்சி காரணமாக குடும்பத்தில் சுமூக நிலை காணப்படும். இளைஞர்கள் தங்களின் செயல்பாட்டில் கவனமாக இருக்க வேண்டும்.

**மீனம்**

விருந்து, விசேஷங்களுக்கு செல்வீர்கள். குதூகலம் அதிகரிக்கும். மனக்குழப்பத்தால் முக்கிய முடிவுகள் எடுப்பதில் தடுமாறுவீர்கள். பயணங்களை தவிர்க்கவும். வாகன மாற்றம் செய்வீர்கள்.

# தமிழகத்திலுள்ள ஈழத் தமிழரின் நலன் காக்க ஆலோசனைக்குழு

## தமிழக முதலமைச்சர் ஸ்டாலின் அமைத்தார்



சென்னை, ஒக். 30,

சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமி ழர் நலத்துறை அமைச்சர் செஞ்சி கே.எஸ்.மஸ்தான் தலை மையில் இலங்கை தமிழர்களின் நலனுக்கான ஆலோசனைக் குழுவை அமைத்து தமிழ்நாடு அரசு அரசாணை வெளியிட்டுள்ளது.

நடந்து முடிந்த தமிழக சட்டப்பேரவை கூட்டத் தொடரில் இலங்கை தமிழர்களின் நலன் காக்கும் பல்வேறு முக்கிய திட்டங்களையும், சலுகைகளையும் வெளியிட்ட தமிழக முதல்வர் மு.க. ஸ்டாலின் இலங் கைத் தமிழர்களின் நலனுக்கான ஆலோசனை குழு ஒன்று அமைக்கப்படும் என்று உறுதியளித்தார்.

மேலும், இலங்கை தமிழர் கள் அனாதைகள் அல்லர். அவர்களுக்கு உறுதுணையாக எப்போதும் நாம் இருக்கி றோம். அவர்களுக்கு நாம் இருக்கிறோம் என்ற உணர்வை வெளிப்படுத்துவதன் அடை யாளமாக இனி, இலங்கைத் தமிழர்கள் அகதிகள் முகாம் என்று அழைக்கப்படாமல், இலங்கை தமிழர்கள் மறு வாழ்வு முகாம் என்று அழைக்கப்படும் என்று முதல்வர் ஆணை பிறப்பித்தார்.

இந்நிலையில், சட்டப்பேரவையில் அறிவித்த அறிவிப்பை செயல்படுத்தும் விதமாக இலங்கை தமிழர்களின் நலனுக்கான ஆலோசனை குழுவை அமைத்து முதல்வர் மு.க.ஸ்டாலின் நேற்று முன்தினம் வியாழக்கிழமை உத்தரவிட்டுள்ளார்.

வெளிநாடு வாழ் தமிழர் நலத்துறை அமைச்சர் செஞ்சி கே.எஸ். மஸ்தான் தலைமையில் அமைக்கப்பட்ட குழுவில், துணைத் தலைவராக பாராளுமன்ற உறுப்பினர் கலாநிதி வீராசாமி மற்றும் சட்ட வல்லு நர் மனுராஜ் சண்முகசுந்தரம், மூத்த பத்திரிகையாளர் கோவி லெனின் உள்ளிட்ட 20 பேர் உள்ளனர்.

இக்குழுவானது இலங்கை தமிழர்கள் வசிக்கும் முகாம்களின் உட்கட்டமைப்பு, அடிப் படை வசதிகளை மேம்படுத்துதல், குடிநீர் மற்றும் சுகாதார வசதிகளை மேம்படுத்துவது, இலங்கை தமிழர்களின் வாழ்க்கை தரத்தை மேம்படுத்துவதற்கான கல்வி, சமூக பாதுகாப்பு பலன்கள், குறைகளை களைவது, திறன் மேம்பட்டு வளர்ச்சி திட்டம் மற்றும் வேலை வாய்ப்பு ஆகிய வற்றிற்கு வழிவகை செய்யும்.

மேலும் குடியுரிமை பொறுத்தவரை இலங்கைக்கு செல்ல விருப்பப்பட்டால் அவர்களுக்கான தீர்வுகள் சட்ட பூர்வமாக எடுக்கக்கூடிய நடவடிக்கைகளுக்கும் இந்த குழு வழிவகைகளை செய்யும் என்று தமிழ்நாடு அரசு தெரிவித்துள்ளது.

# அ.தி.மு.கவின் நிலைமை வருத்தமளிக்கிறது! சசிகலா குறித்து மக்களே முடிவு செய்வார்கள்

## திருநாவுக்கரசர் பேட்டி

புதுக்கோட்டை, ஒக். 30,

"அதிமுகவுக்காக ஆரம்ப காலத்தில் உழைத்தவன் என்ற முறையில் அக்கட்சியின் தற்போதைய நிலை வருத்தமளிக்கிறது" என திருநாவுக்கரசர் தெரிவித்துள்ளார்.

புதுக்கோட்டையில் காங்கிரஸ் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் திருநாவுக்கரசர் செய்தியாளர்கள் சந்திப்பில் கூறியதாவது:-

பெகாசஸ் விவகாரத்தில் உயர் நீதிமன்ற தீர்ப்பு வரவேற்கத்தக்கது, இது காங்கிரஸ் கட்சிக்கு கிடைத்த வெற்றி.

ஆளுநருக்கு அறிக்கை அளிக்கும் விவகாரத்தில் தமிழக ஆளுநர் எல்லைதாண்டி




செயல்படக்கூடாது அதிகார வரம்புகளை தாண்டி அவர் செயல்படுவது ஜனநாயகத்திற்கு உகந்ததல்ல, ஜனநாயகத்திற்கு முரணானது, பாஜகவுக்கு ஒத்துழைக்காத தேசிய கட்சியோ மாநில கட்சிகள் ஆளுகின்ற மாநிலத்தில் அரசை கலைக்கவோ பழிவாங்கவோ ஆளுநரை பயன்படுத்துவது சட்டத்திற்கு முரணானது.

ஆளுநர் எல்லை தாண்டி செல்லக்கூடாது அதுதான் ஜனநாயகத்திற்கு நல்லது. அ.தி.மு.க.வுக்காக ஆரம்ப காலத்தில் உழைத்தவன் என்ற முறையில் அக்கட்சியின் தற்போதைய நிலை வருத்தமளிக்கிறது, சசிகலாவின் அரசியல் பயணம் குறித்து மக்கள் தான் முடிவு செய்வார்கள்." இவ்வாறு அவர் கூறினார்.

# வழமையான பரிசோதனைக்காகவே ரஜினி மருத்துவமனையில் அனுமதி

## குடும்பத்தினர் தகவல்



சென்னை, ஒக். 30

சென்னை, காவேரி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ள தமிழகத்தின் பிரபல நடிகர் ரஜினிகாந்த் நலமுடன் இருக்கிறார் எனவும் வழமையான மருத்துவ பரிசோதனைக்காகவே அவர் மருத்துவமனை சென்றார் எனவும் குடும்பத்தினர் தெரிவித்தனர்.

அவருக்கு மருத்துவர்கள் தீவிர பரிசோதனை மேற்கொண்டு வருகின்றனர். அவர் மருத்துவ கண்காணிப்பில் இருக்கிறார். ரஜினிகாந்தின் உடல்நிலை கவலைப்படும்படியாக இல்லை என்று தெரிவித்தனர்.

ஆண்டுக்கு ஒருமுறை செய்யப்படும் வழக்கமான பரிசோதனைக்காகவே ரஜினிகாந்த் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார் என அவரது மனைவி லதா ரஜினிகாந்த் கூறியுள்ளார்.

இந்த நிலையில், ரஜினியின் உடல்நலம் குறித்து மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் சென்னையில் பேட்டி அளித்துள்ளார். அப்போது அவர் கூறியதாவது:-

வழக்கமான பரிசோதனைக்காகத்தான் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டடிருக்கிறார் என ரஜினியின் மனைவி தெரிவித்துள்ளார். மருத்துவமனை நிர்வாகத்துடன் நாங்களும் பேசினோம். அவரது உடல்நிலை சீராகவும் நலமுடனும் இருப்பதாக தெரிவித்துள்ளனர்" என கூறினார்.

# கரு ஜயசூரிய தலைமையில் புதியதொரு அரசியல் கூட்டு!

## முக்கிய புள்ளிகள் இணைவு



கொழும்பு, ஒக். 30

**முன்னாள் சபாநாயகர் கரு ஜயசூரிய தலைமையில் புதியதொரு அரசியல் கூட்டணி அமையவுள்ளதாகவும், இதற்கான ஏற்பாடுகள் திரைமறைவில் இடம்பெற்றுவருவதாகவும் அரசியல் வட்டாரங்களில் இருந்து அறியமுடிகின்றது.**

ஆளுங்கட்சியிலுள்ள முக்கிய சில அரசியல் பிரமுகர்கள் இணைந்தே இதற்கான நடவடிக்கையை முன்னெடுத்து வருகின்றனர் எனவும் தெரியவருகின்றது.

இதன்பிரகாரம் ஆளுங்கட்சியில் உள்ள முக்கிய புள்ளிகள் வெளியேறக்கூடும் எனவும், கருவின் தலைமைத்துவத்துக்கு ரணிலும் பச்சைக்கொடி காட்டியுள்ளார் எனவும் தகவல்கள் வெளியாகியுள்ளன. (அ)

# திருமலையில் 450 ஏக்கர் காணிகளை விடுவித்தது வனவள திணைக்களம்!

திருகோணமலை, ஒக். 30

திருகோணமலை - மூதூர் பிரதேச செயலாளர் பிரிவில் இறால்குழி பகுதியிலுள்ள சுமார் 450 ஏக்கர் காணி வனஜீவராசிகள் திணைக்களத்தினால் விடுவிக்கப்பட்டுள்ளது.

முதல்கட்டமாக 250 ஏக்கர் காணியை பொதுமக்களுக்கு விவசாயம் செய்வதற்காக வழங்கும் நிகழ்வும் நெல் விதைப்பு விழாவும் மூதூர் பிரதேச செயலாளர் எம். பீ. எம். முபாரக் தலைமையில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் திருகோணமலை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் கபில நுவன் அத்துகோரல, மாவட்ட அரசாங்க அதிபர் சமன் தர்ஷன பாண்டிகோரல உள்ளிட்ட பலரும் கலந்துகொண்டனர்.

40 ஆண்டுகளுக்கு முன்னர் குறித்த பிரதேசத்திலுள்ள விவசாயிகளால் விவசாயம் செய்யப்பட்டதாக தெரிவிக்கப்படும் குறித்த காணி, யுத்த காலத்தில் வனஜீவராசிகள் திணைக்கள அதிகாரிகளின் கட்டுப்பாட்டில் இருந்தது.

யுத்தம் முடிவுக்கு கொண்டுவரப்பட்டு 10 ஆண்டுகள் கடந்த நிலையில் இறால்குழியில் வாழும் மக்கள் தமது காணிகளை விவசாயத்தின் பொருட்டு விடுவிக்குமாறு கோரியமைக்கு அமைய முதற்கட்டத்தின் கீழ் 250 ஏக்கர் காணி விடுவிக்கப்பட்டுள்ளது.

எதிர்வரும் நாட்களில் மேலும் 200 ஏக்கர் காணி விவசாயம் மேற்கொள்வதற்காக விடுவிக்கப்படவுள்ளதாக வனஜீவராசிகள் திணைக்களம் தெரிவித்துள்ளது.

# யுகதனவி அமைச்சரவை பத்திரத்துக்கு அவதானிப்புக்களை முன்வைக்கலாம்

## ஆளும் கட்சி தலைவர்கள் கூட்டத்தில் முடிவு

கொழும்பு, ஒக். 30

யுகதனவி அனல் மின் நிலையம் தொடர்பில் சமர்ப்பிக்கப்பட்டுள்ள அமைச்சரவைப் பத்திரத்துக்கு அவதானிப்புகளை முன்வைப்பதற்கு ஜனாதிபதி, பிரதமர் தலைமையில் நேற்று முன்தினம் கூடிய ஆளும் கட்சித் தலைவர்கள் மத்தியில் ஒப்புதல் எட்டப்பட்டுள்ளது.

சிறிலங்கா சுதந்திர பொதுஜன கூட்டணியின் கட்சித் தலைவர்களின் பங்கேற்புடன் அலரி மாளிகையில் இடம்பெற்ற சந்திப்பின்போதே இது தொடர்பில் கலந்துரையாடப்பட்டது.

அதற்கு மேலதிகமாக கோவிட்-19 தொற்று நிலைமை மற்றும் அதிபர் - ஆசிரியர் சம்பள பிரச்னையின் தற்போதைய நிலை, கோவிட்-19 தொற்றுக்கு மத்தியில் சுற்றுலாத்துறை எதிர்நோக்கியுள்ள பிரச்னைகள், இலங்கை துறைமுக அதிகாரசபையின் மேற்கு மற்றும் கிழக்கு முனைய அபிவிருத்தி, அரசாங்கத்தின் அபிவிருத்தி நடவடிக்கைகளை கண்காணித்தல், பொருள்களின் விலையேற்றம் மற்றும் இயற்கை விவசாயம் மற்றும் உரம் ஆகிய விடயங்கள் தொடர்பிலும் கட்சித் தலைவர்கள் கவனம் செலுத்தினர்.

இந்த சந்திப்பில் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ, முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, அமைச்சர்களான பசில் ராஜபக்ஷ, தினேஷ் குணவர்தன, ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ, வாசுதேவ நாணயக்கார, விமல் வீரவன்ஸ, உதய கம்மன்பில, டக்ளஸ் தேவானந்தா, காமினி லொக்குகே, பந்துல குணவர்தன, பிரசன்ன ரணதுங்க, மஹிந்தானந்த அளுத்கமகே, ரோஹித அபேகுணவர்தன, கெஹலிய ரம்புக்வெல, நாமல் ராஜபக்ஷ மற்றும் இராஜாங்க அமைச்சர்களான தயாசிறி ஜயசேகர, ஜீவன் தொண்டமான், பாராளுமன்ற உறுப்பினர்களான சாகர காரியவசம், பேராசிரியர் திஸ்ஸ விதாரண, ஏ.எல்.எம்.அதாவுல்லா, டிரான் அலஸ், வீரசுமண வீரசிங்க, கெவிந்து குமாரதுங்க உள்ளிட்ட கட்சிப் பிரதிநிதிகள் கலந்து கொண்டனர். (அ)

# நாட்டரிசி 98 ரூபாய்!

கொழும்பு, ஒக். 30

இந்தியாவிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட நாட்டரிசி ஒரு கிலோகிராம் 98 ரூபாய்க்கு நேற்று முதல் சந்தைக்கு விநியோகிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

சதொச நிறுவனத்தின் தலைவர் ஓய்வுபெற்ற ரியர் அட்மிரல் ஆனந்த பீரிஸ் இதனை தெரிவித்தார். சுங்கத்தின் சோதனை நடவடிக்கைகளின் பின்னர் இதுவரை நாட்டரிசி அடங்கிய 09 கொள்கலன்கள் தமது நிறுவனத்துக்கு கிடைத்துள்ளதாக அவர் குறிப்பிட்டார். இதனூடாக நுகர்வோருக்கு நியாயமான விலையில் அரிசியை விற்பனை செய்யும் நடவடிக்கைகள் மேலும் விஸ்தரிக்கப்பட்டுள்ளதாக சதொச தலைவர் கூறினார்.

இதனிடையே, கொழும்புத் துறைமுகத்தில் காணப்பட்ட சீனி அடங்கிய 81 கொள்கலன்களும் சதொச நிறுவனத்துக்கு விடுவிக்கப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார். குறித்த சீனியை அரசாங்கத்தின் கட்டுப்பாட்டு விலையின் கீழ், சதொச கிளைகளூடாக மக்களுக்கு வழங்கவுள்ளதாக ஆனந்த பீரிஸ் மேலும் கூறினார்.

# நயினாதீவில் அதிகூடிய மழை!

யாழ்ப்பாணம், ஒக். 30

நேற்று காலையுடன் முடிந்த கடந்த 24 மணி நேரத்தில் யாழ்ப்பாண மாவட்டத்தில் நயினாதீவில் அதிகூடிய மழைவீழ்ச்சி பதிவாகியுள்ளதாக யாழ்.மாவட்ட அனர்த்த முகாமைத்துவப் பிரிவின் உதவிப் பணிப்பாளர் என்.சூரியராஜா தெரிவித்தார்.

யாழ்.மாவட்ட செயலகத்தில் நேற்று நடத்திய ஊடக சந்திப்பின்போது அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

கடந்த 24 மணி நேரத்தில் யாழ்ப்பாணத்தில் 20.6 மில்லிமீற்றர் மழைவீழ்ச்சி பதிவாகியுள்ளது. அதிகூடிய மழைவீழ்ச்சியாக நயினாதீவுப் பகுதியில் மில்லிமீற்றர் மழை வீழ்ச்சி கிடைக்கப் பெற்றுள்ளது. எனினும் இதுவரை பாதிப்புகள் தொடர்பான விவரங்கள் எதுவும் கிடைக்கவில்லை.

வங்காள விரிகுடாவின் தென்பகுதியில் ஏற்பட்டுள்ள தாழமுக்கத்தின் காரணமாக மழையுடன் கூடிய காலநிலை காணப்படுவதோடு மின்னல் தாக்கம் ஏற்படக்கூடிய வாய்ப்பு காணப்படுகின்றது.



எனவே பொதுமக்கள் தங்களையும் தங்களது உடைமைகளையும் குறித்த காலப் பகுதியில் பாதுகாக்க உரிய நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றார்கள்.

குறிப்பாக கரையோரப் பகுதிகளில் காற்றின் வேகம் மணிக்கு 60- 65 கிலோமீற்றர் வரை வீசும் என எதிர்பார்க்கப் படுவதால் அந்த காலப்பகுதியில் கடல் கொந்தளிப்பாக காணப்படுவதால் குறிப்பாக கரையோரப் பகுதி மக்கள் மற்றும் மீனவர்கள் கடலுக்கு செல்வதைத் தவிர்க்குமாறு கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளனர்.

மேலும் குறித்த காலப்பகுதியில் மக்கள் மிகுந்த அவதானத்துடன் இருக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்-என்றார். (அ)

# தமிழ்கார்டியன் இன்ஸ்ட்ராகிராம் முடக்கம் ருவிற்றர் பக்கத்தையும் முடக்க முயற்சி!

லண்டன், ஒக். 30

தமிழ் மக்கள் விவகாரங்களை சர்வதேச அளவில் வெளிப்படுத்திவரும் தமிழ் கார்டியன் ஆங்கில செய்தி இணையத்தளத்தின் இன்ஸ்ட்ராகிராம் பக்கம் முடக்கப்பட்டுள்ள நிலையில் அந்த இணையத்தளத்தின் ருவிற்றர் பக்கத்தையும் முடக்குமாறு இலங்கை குற்றப் புலனாய்வு பொலிஸார் கோரிக்கை முன்வைத்துள்ளனர் என தமிழ் கார்டியன் தெரிவித்துள்ளது.

தமது பக்கத்தை முடக்கும் பேஸ்புக் இணை நிறுவனமான இன்ஸ்ட்ராகிராமின் இந்த செயற்பாடு அவசியமற்ற, ஆபத்தான இணைய தணிக்கைக்கு நிகரான நடவடிக்கை என தமிழ் கார்டியன் குறிப்பிட்டுள்ளது.

இது தொடர்பில் பேஸ்புக் மற்றும் இன்ஸ்ட்ராகிராமை தொடர்பு கொள்வதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டபோதிலும் பக்கம் தொடர்ந்து முடக்கப்பட்டுள்ளமை அறிக்கையிடும் எங்கள் முயற்சிகளுக்கு பெரும் தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளதாகவும் தமிழ் கார்டியன் சுட்டிக்காட்டியுள்ளது.

பெரும் தளமொன்றை சேர்ந்தவர்களுக்கான எங்கள் பணியை இது மௌனமாக்கியுள்ளது. இதன்மூலம் ஒடுக்குமுறை, தணிக்கை, அநீதிக்கு இன்ஸ்டாகிராம் துணைபோகின்றதா? எனவும் தமிழ் கார்டியன் கேள்வி எழுப்பியுள்ளது.

19,000 பின்தொடர்வோரைக் கொண்ட முடக்கப்பட்ட தமிழ்கார்டியன் - இன்ஸ்டாகிராம் பக்கத்தை உடனடியாக மீட்டெடுக்கவும், அது ஏன் முடக்கப்பட்டது? என்பதற்கான முழு விளக்கத்தை அளிக்கவும் இன்ஸ்டாகிராமுக்குச் சொந்தமான பேஸ்புக் நிறுவனத்துக்கு தமிழ் கார்டியன் அழைப்பு விடுத்துள்ளது.

தமிழ் கார்டியன் மற்றும் பிற தமிழ் மக்கள் சார்பான குரல்களை ஒடுக்கி, மௌனிக்கச் செய்ய வழிவகுத்த கொள்கைகளை மறுபரிசீலனை செய்யவேண்டும் எனக் கோரியுள்ள தமிழ் கார்டியன், அடக்குமுறை மற்றும் தணிக்கை இல்லாத ஊடக சூழலுக்கு நாங்கள் ஆதரவாக நிற்கிறோம்


Twitter has received a request from Sri Lanka's Criminal Investigation Department regarding your Twitter account, @TamilGuardian, that claims the following content violates the law(s) of Sri Lanka.

எனவும் தெரிவித்துள்ளது.

இந்நிலையில் கடந்த ஆண்டு தமிழ் கார்டியன் இணையத்தளத்தில் ருவிற்றர் சமூக வலைத்தளப் பக்கத்தை முடக்குமாறு ருவிட்டரிடம் இலங்கை குற்றப் புலனாய்வுத்துறை கோரிக்கை விடுத்துள்ளதாக தமிழ் கார்டியன் தெரிவித்துள்ளது.

இலங்கை சட்டங்களை மீறும் வகையில் அதன் உள்ளடக்கங்கள் இருப்பதாகக் குறிப்பிட்டு இந்தக் கோரிக்கை விடுக்கப்பட்டதாக ருவிற்றர் நிறுவனம் தெரிவித்திருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

எனினும் தமிழ் கார்டியன் இணையத்தளம், சமூக வலைத்தளங்களாக பேஸ்புக் மற்றும் ருவிற்றர் பக்கங்கள் தொடர்ந்து செயற்படும் நிலையில் இன்ஸ்டாகிராம் நேற்று முன்தினம் முதல் முடக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, தமிழ்கார்டியன் இன்ஸ்டாகிராம் முடக்கப்பட்டமை கருத்து வெளிப்பாட்டுச் சுதந்திரத்துக்கான தடை என பிரிட்டன் மற்றும் கனேடிய எம்.பிக்கள் பலர் கண்டனம் தெரிவித்துள்ளனர்.

பிரிட்டன் எம்.பிக்களான சாம் டாரி, கரேத் தோமஸ், வெஸ் ஸ்ட்ரீடிங், கனேடிய பாராளுமன்ற உறுப்பினர் ஹரி ஆனந்தசங்கரி, கனடா பிறம்டன் நகரை மேயர் பற்றிக் பிரவுன் உள்ளிட்டோர் இதற்கு தமது கடும் எதிர்ப்பை வெளியிட்டுள்ளனர். (அ)

# இலங்கையின் மக்கள் வங்கியை கறுப்பு பட்டியலில் சேர்த்த சீனா!

கொழும்பு, ஒக். 30

இலங்கை அரச வங்கியான மக்கள் வங்கியை கறுப்புப் பட்டியலில் இணைப்பதற்கு சீனா நடவடிக்கை எடுத்துள்ளது.

இரு தரப்பினருக்கும் இடையிலான ஒப்பந்தத்தை மீறி - கடன் சான்று பத்திரத்துக்கான கொடுப்பனவை செலுத்தாமையால், சீனத் தூதரகத்தின் பொருளாதார மற்றும் வர்த்தக செயலகத்தினால் இதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இதன்பிரகாரம் இலங்கையுடனான சர்வதேச கொடுக்கல் வாங்கலின்போது , மக்கள் வங்கியினால் வெளியிடப்படும் கடன் சான்றுப் பத்திரத்தை ஏற்றுக்கொள்வதைத் தவிர்க்குமாறும், எச்சரிக்கையுடனான நிர்வாகத்தை முன்னெடுக்குமாறும் அனைத்து சீன முதலீட்டாளர்களுக்கும் அறிவிப்பதாகவும் சீனத் தூதரகம் தெரிவித்துள்ளது.

உரக் கொடுக்கல் வாங்கல் தொடர்பில் இரு தரப்பினரிடையே ஏற்படுத்திக்கொண்ட இணக்கப்பாட்டுக்கு அமைய வெளியிடப்பட்ட கடன் சான்றுப் பத்திரத்துக்கான கொடுப்பனவை செலுத்துமாறு சீனாவின் சிந்தாவோ சீவிங் பயோரெக் நிறுவனம் , மக்கள் வங்கியிடம் கோரிக்கை விடுத்துள்ளதாக சீனத் தூதரகம் தெரிவித்துள்ளது.

வர்த்தக சட்ட திட்டங்கள் மற்றும் சர்வதேச வர்த்தக கொள்கைக்கு அமைய மக்கள் வங்கி செயற்படாது கடன் சான்று பத்திரத்துக்கான கொடுப்பனவை செலுத்தாமையால் சீன நிறுவனத்துக்கு பாரிய நட்டத்தை ஏற்படுத்தியுள்ளதாக இலங்கைக்கான சீனத் தூதரகம் சுட்டிக்காட்டியுள்ளது. (அ)

# சீன தூதரகத்துக்கு மக்கள் வங்கி பதில்

கொழும்பு, ஒக். 30

நீதிமன்ற உத்தரவு மீளப்பெறப்பட்டதன் பின்னர் உரிய கொடுப்பனவை செலுத்த நடவடிக்கை எடுக்கப்படும் என மக்கள் வங்கி தெரிவித்துள்ளது.

இரு தரப்பினருக்கு இடையில் நிலவிய உடன்படிக்கையை மீறி நாணயக் கடிதத்துக்கான கொடுப்பனவை செலுத்தாததன் காரணமாக இலங்கையின் மக்கள் வங்கியை கறுப்புப் பட்டியலில் உள்ளடக்கியுள்ளதாக இலங்கைக்கான சீனத் தூதரகம் தெரிவித்துள்ளது.

சீனத் தூதரகத்தின் தீர்மானத்துக்கு பதிலளிக்கும் வகையில் மக்கள் வங்கி விடுத்துள்ள அறிக்கையொன்றில் இந்த விடயம் குறிப்பிடப்பட்டுள்ளது.



# மகாநாயக்கதேரரிடம் ஆசி பெற்றார் சஜித்

கொழும்பு, ஒக். 30

கண்டி, மல்வத்து மகா விகாரைக்கு நேற்று சென்றிருந்த எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ, மல்வத்து பீடத்தின் மகாநாயக்க தேரர் வணக்கத்துக்குரிய திப்பட்டுவாவே ஸ்ரீ சித்தார்த்த சுமங்கல தேரரை சந்தித்து ஆசிபெற்றுக் கொண்டார்.

அத்துடன், இதன்போது நாட்டில் நிலவும் பிரச்னைகள் தொடர்பிலும் கலந்துரையாடப்பட்டது.




# மின்சாரசபை ஊழியர்கள் நேற்று யாழ்ப்பாணத்தில் ஆர்ப்பாட்டம்!

## கெரவலப்பிட்டி மின் நிலையத்தை அமெரிக்காவுக்கு விற்றமைக்கு எதிராக

யாழ்ப்பாணம், ஒக். 30

**கெரவலப்பிட்டி மின் நிலையத்தை அமெரிக்காவுக்கு விற்பனை செய்தமைக்கு எதிராக யாழ். மின்சார சபை தலைமையகத்துக்கு முன்னால் நேற்று கவனவீர்ப்புப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டதோடு கையெழுத்து போராட்டமும் இடம்பெற்றது.**

கெரவலப்பிட்டி மின் நிலையத்தின் 40 வீத பங்குகளை அமெரிக்காவுக்கு விற்பனை செய்தமைக்கு எதிர்ப்பு தெரிவித்து இலங்கை மின்சார சபையின் ஒன்றிணைந்த தொழிற்சங்கக் கூட்டணியின் ஏற்பாட்டில் இலங்கையின் அனைத்து இடங்களிலும் இலங்கை மின்சார சபையின் தலைமை அலுவலகங்களுக்கு முன்னால் நேற்று மதியம் கையெழுத்துப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

இந்நிலையில், யாழ்ப்பாணம், பழைய பூங்காவி வீதியில் உள்ள இலங்கை மின்சார சபையின் தலைமை அலுவலக முன்றலில் இலங்கை மின்சார சபை ஒன்றிணைந்த தொழிற்சங்க கூட்டமைப்பினரின் ஏற்பாட்டில் கையெழுத்துப் போராட்டம் இடம்பெற்றதோடு கவனவீர்ப்புப் போராட்டமும் முன்னெடுக்கப்பட்டது. (அ-03)

## பஸ் குடை சாய்ந்து விபத்து; மாத்தளையில் 14 பேர் காயம்

கொழும்பு, ஒக். 30

மாத்தளையில் இருந்து குருணாகல் நோக்கி பயணித்த பஸ் ஒன்று களுபாலத்துக்கு அருகில் வீதியை விட்டு விலகி குடைசாய்ந்து விபத்துக்குள்ளானதில் 14 பேர் காயமடைந்துள்ளனர்.

இந்தச் சம்பவத்தில், பஸ் வீதியை விட்டு விலகி வயல் நிலம் ஒன்றில் குடைசாய்ந்ததாக தெரிவிக்கப்பட்டது.

விபத்து இடம்பெற்ற சந்தர்ப்பத்தில் பஸ்ஸில் 35 பேர் இருந்தனர் எனவும் அவர்களில் 14 பேர் காயங்களுக்கு உள்ளாகி மாத்தளை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர் எனவும் தெரிவிக்கப்பட்டது.

சம்பவம் தொடர்பில் பஸ்ஸின் சாரதி கைது செய்யப்பட்டுள்ளார். (அ)

## தொழில்சங்க நடவடிக்கையில் ஈடுபட சுகாதார துறையினரும் தீர்மானம்!

கொழும்பு, ஒக். 30

எதிர்வரும் 9 ஆம் சம்பளக் கோரிக்கை உட்பட சில கோரிக்கைகளை முன்வைத்து சுகாதார விடுமுறை எடுக்கவுள்ளதாக சுகாதாரப் பிரிவு தொழில்சங்கங்கள் தெரிவித்துள்ளன.

குறித்த தொழில்சங்க நடவடிக்கையில் 16 சுகாதாரப் பிரிவு தொழில்சங்கங்கள் கலந்து கொள்ளவுள்ளனவென அரச தாதியர்கள் சங்கத்தின் தலைவர் சமன் ரத்னபிரிய தெரிவித்துள்ளார்.

தனிப்பட்ட நோக்கங்களை நிறைவேற்றிக் கொள்வது தங்களது தொழிற்சங்க நடவடிக்கையில் குறிக்கோள் இல்லை என பொது சுகாதாரப் பரிசோதகர்கள் சங்கத்தின் தலைவர் உபுல் ரோஹண தெரிவித்தார்.

# அரச, தனியார் துறையினருக்கு ரூ. 10,000 சம்பள உயர்வு தேவை!

## தொழில்சங்கங்கள் வலியுறுத்தல்

கொழும்பு, ஒக். 30

அரச, தனியார்துறையினருக்கு 10 ஆயிரம் ரூபாய் வேதன அதிகரிப்பு அவசியமாகும் என்று சம்பந்தப்பட்ட தொழிற்சங்கங்கள் வலியுறுத்தியுள்ளன.

கொழும்பில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடக சந்திப்பில், அனைத்து நிறுவனங்களின் ஊழியர்கள் சங்கத்தின் தலைவர் வசந்த சமரசிங்க, அகில இலங்கை வைத்திய அதிகாரிகள் சங்கத்தின் செயலாளர் வைத்தியர் ஜயந்த பண்டார மற்றும் ஜே.வி.பியின் நிர்வாக செயலாளர் கே.டி. லால்காந்த ஆகியோர் இது தொடர்பில் கருத்து தெரிவித்தனர்.

வாழ்க்கைச் செலவு அதிகரிப்பு காரணமாக, அரச மற்றும் தனியார் துறை ஊழியர்களின் வேதனத்தை அதிகரிப்பதற்கு அவசியமான நடவடிக்கையை அரசாங்கம் உடனடியாக மேற்கொள்ளவேண்டும் எனவும் வலியுறுத்தியுள்ளன.

அடுத்த பாதீட்டில் வேதன அதிகரிப்பு இடம்பெறாவிட்டால், எதிர்ப்பு நடவடிக்கையை முன்னெடுக்க உள்ளதாகவும் குறித்த தொழிற்சங்கங்கள் எச்சரித்துள்ளன. ஆட்சியாளர்கள் தங்களுடன் பேச்சு நடத்த நடவடிக்கை எடுத்தால் தாங்களும் அதற்கு தயார் என தொழிற்சங்கங்கள் அறிவித்துள்ளன.

# அரசியல் பழிவாங்கல் ஆணைக்குழுவின் இறுதி அறிக்கைக்கு மேலும் கால அவகாசம்

கொழும்பு, ஒக். 30

அரசியல் பழிவாங்கல்கள் தொடர்பான ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழுவின் இறுதி அறிக்கையை சமர்ப்பிக்க மேலும் ஆறு மாத கால அவகாசம் வழங்கப்பட்டுள்ளது.

இந்தக் கால நீடிப்புத் தொடர்பில் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் கையொப்பத்துடன் அதிசிறப்பு வர்த்தமானி வெளியிடப்பட்டுள்ளது.

இதன்படி, நேற்று முன்தினம் முடிவடையவிருந்த உரிய கால அவகாசம் 2022 ஏப்ரல் மாதம் 22ஆம் திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளதாக வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ளது.

கடந்த அரசின் ஆட்சியின் போது இடம்பெற்றதாக கூறப்படும் அரசியல் பழிவாங்கல்கள் தொடர்பில் ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழுவின் அறிக்கையை நடைமுறைப்படுத்துவதற்கு செய்வதற்காக இந்த வருடம் ஜனவரி மாதம் 28ஆம் திகதி ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழு நியமிக்கப்பட்டது. (அ)



# விடைபெறும் அமெரிக்க தூதர் ஜனாதிபதியை சந்தித்து பேச்சு

கொழும்பு, ஒக். 30

தனது சேவைக் காலத்தை முடித்துக்கொண்டு நாடு திரும்பவுள்ள இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் அலைனா ரெப்லிட்ஸ் அம்மையார், ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவை நேற்று முன்தினம் முற்பகல் ஜனாதிபதி அலுவலகத்தில் சந்தித்தார்.

அமெரிக்காவுக்கும் இலங்கைக்கும் இடையிலான ஒத்துழைப்புகளை அதிகரித்துக் கொள்வதற்காக அலைனா அம்மையார் வழங்கிய ஒத்துழைப்புகளைப் பாராட்டிய ஜனாதிபதி , கோவிட் தொற்றுப் பரவலைத் தடுப்பதற்கான தடுப்பூசி ஏற்றல், மருத்துவ உபகரணங்களை விநியோகித்தல் உள்ளிட்ட நடவடிக்கைகளுக்கு அமெரிக்கா வழங்கிய உதவிகளுக்கும், ஜனாதிபதி நன்றி தெரிவித்தார்.

தடுப்பூசி ஏற்றல் மற்றும் கோவிட் தொற்றொழிப்புச் செயல்பாடுகளில் இலங்கை அடைந்துள்ள முன்னேற்றங்களுக்கு மகிழ்ச்சி தெரிவித்த தூதுவர், தனது சேவையைச் சிறப்பாக முன்னெடுக்க இலங்கையிலிருந்து கிடைக்கப்பெற்ற ஒத்துழைப்புக்காக, நன்றி தெரிவித்தார்.

அலைனா ரெப்லிட்ஸ் அம்மையாரின் எதிர்காலச் செயல்பாடுகள் சிறப்புப் பெற, ஜனாதிபதி இதன்போது தனது வாழ்த்துகளையும் தெரிவித்துக்கொண்டார்.

ஜனாதிபதியின் செயலாளர் பி.பீ.ஜயசுந்தர, இலங்கைக்கான அமெரிக்காவின் பிரதித் தூதுவர் மார்டின் கெலி , அரசியல் மற்றும் பொருளாதார ஆலோசகர் சூசான் வல்கே ஆகியோரும் இந்தச் சந்திப்பில் கலந்துகொண்டிருந்தனர்.

# பெற்றோர்களின் பங்களிப்புடன் நவ. 3 கவனவீர்ப்பு போராட்டம்!

## இலங்கை ஆசிரியர் சேவை சங்கம் அறிவிப்பு

கொழும்பு, ஒக். 30

**ஆசிரியர்-அதிபர் போராட்டம் குறித்து பெற்றோருக்கு தெளிவுபடுத்த அடுத்த மூன்று நாள்களில் முன்னுரிமை வழங்கப்படும் என இலங்கை ஆசிரியர் சேவை சங்கம் தெரிவித்துள்ளது.**

நேற்று காலை சமூக வலைத்தளங்களில் கருத்து வெளியிடும் போதே சங்கத்தின் பொதுச் செயலாளர் மஹிந்த ஜயசிங்க இதனைத் தெரிவித்தார்.

அத்துடன், எதிர்வரும் நவம்பர் 3ஆம் திகதி நாட்டிலுள்ள அனைத்து பாடசாலைகளுக்கு முன்பாகவும் பெற்றோர்களின் பங்களிப்புடன் தொடர் கவனயீர்ப்புப் போராட்டம் நடத்தத் திட்டமிடப்பட்டுள்ளதாகவும் அவர் கூறினார்.

மேலும், ஆசிரியர் - அதிபர் போராட்டத்தில் ஏனைய தொழிற்சங்கங்களின் பங்கேற்புடன் வரவு-செலவுத் திட்டத்துக்கு முன்னர் பாரிய போராட்டமொன்றை முன்னெடுக்கத் தயார் எனவும் மஹிந்த ஜயசிங்க சுட்டிக்காட்டினார். (அ)

# 60 ஆயிரம் கடவுச்சீட்டுகள் 14 நாள்களில் விநியோகம்

கொழும்பு, ஒக். 30

கடந்த 14 நாள்களில் கடவுச்சீட்டுக்களை பெற்றுக் கொள்வதற்காக வருகைத் தந்தவர்களின் எண்ணிக்கை 60 ஆயிரத்தை கடந்துள்ளதாக குடிவரவு மற்றும் குடியகல்வுத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

கடவுச்சீட்டு பெறுவதற்கு வருகைத் தருவோரின் எண்ணிக்கை அதேபோல காணப்படுவதாக அந்தத் திணைக்களத்தின் கடவுச்சீட்டு கட்டுப்பாட்டாளர் எச்.பி.சந்திரபால தெரிவித்தார்.

கடந்த 5ஆம் திகதி முதல் 26ஆம் திகதி வரை 14 அலுவலக நாள்களில் கடவுச் சீட்டுக்களுக்கான விண்ணப்பங்கள் பெறப்பட்டுள்ளன.

தற்போதைய நெரிசலைக் குறைக்கும் வகையில் அலுவலகப் பணிகள் காலை 6 மணிக்கு ஆரம்பிக்க வேண்டியுள்ளதாகவும், இம்மாதத்துக்கு பின்னர் இந்நிலைமை படிப்படியாக குறையுமெனவும் குடிவரவு மற்றும் குடியகல்வு திணைக்களம் அறிவித்துள்ளது. (அ)

# செயலணியின் தலைமையை முறையாக முன்னெடுப்பேன்!

## கூறுகிறார் ஞானசார தேரர்


கொழும்பு, ஒக். 30

தனக்கு கிடைத்த பதவிக்கான கடமைகளை முறையாக முன்னெடுப்பேன் என்றும், இது எதிர்பார்த்த விடயமென்றும் பொதுபல சேன அமைப்பின் பொதுச் செயலாளர் கலகொட அத்தே ஞானசார தேரர் தெரிவித்துள்ளார்.

ஒரே நாடு ஒரே சட்டத்தை உருவாக்குவதற்கான ஜனாதிபதி செயலணியின் தலைவராக ஞானசார தேரர் நியமிக்கப்பட்டமை தொடர்பில் விளக்கமளிக்கும்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

நாட்டில் ஒரு சட்டத்தை நடைமுறைப்படுத்துவது



அடர்ந்த காட்டை சுத்தம் செய்வது போன்ற செயல்பாடாகும். தனது அடுத்த கட்ட நடவடிக்கைகள் எதிர்காலத்தில் சமர்ப்பிக்கப்படும். அதற்கான நடவடிக்கைகள் இடம்பெற்று வருகின்றன. இந்த செயலணிக்கு நியமிக்கப்பட்டுள்ளவர்களுடன் முதலில் கலந்துரையாடியதன் பின்னர் அந்த நடவடிக்கைகள் முடிந்தளவு முன்னெடுப்பதற்கு எதிர்பார்க்கிறேன். இந்த பதவி தொடர்பில் நான் முதலில் கற்றுக் கொள்ளவேண்டும். நியமித்த குழுவினருடன் கலந்துரையாடியதன் பின்னர் எதிர்காலத்தில் தெளிவாக அறிவிக்கப்படும்- என்றார். (அ)

# அரிசி, சீனி, சிமெந்துக்கு சந்தையில் தட்டுப்பாடு

கொழும்பு, ஒக். 30

சந்தையில் அரிசி, சீனி, சிமெந்து உட்பட பல அத்தியாவசிய பொருள்களுக்கு தட்டுப்பாடு நிலவுவதாக நுகர்வோர் உரிமைகளை பாதுகாக்கும் சங்கத்தின் தலைவர் ரஞ்சித் விதானகே தெரிவித்துள்ளார்.

சில வர்த்தக நிலையங்களில் அரிசி, சீனி உட்பட அத்தியாவசிய பொருள்கள் கையிருப்பில் இருந்தபோதிலும் விலைகள் அதிகரிக்கப்பட்டுள்ளதால், அளவீடு முறையில் பொருள்களை வழங்குவதாக மக்கள் தமது சங்கத்திடம் கூறியுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

சந்தையில் சிமெந்து தட்டுப்பாடும் நிலவி வருவதுடன் சில வர்த்தகர் சிமெந்து பொதி ஒன்றை 1500 ரூபாவுக்கு விற்பனை செய்து வருகின்றனர் எனவும் கூறப்படுகிறது.

இதனால், அதற்கு பதிலாக மாற்றுப் பொருளை கொள்வனவு செய்யும் நிலை மக்களுக்கு ஏற்பட்டுள்ளது.

குறிப்பாக விலைகள் நிர்ணயிக்கப்படவில்லை என்பதால், காலையில் ஒரு விலைக்கு வாங்கும் பொருளை மாலையில் மற்றுமொரு விலைக்கு வாங்கும் நிலைமை நுகர்வோருக்கு ஏற்பட்டுள்ளதாக மக்கள் கூறுவதாகவும் ரஞ்சித் விதானகே மேலும் கூறினார்.

# மூடிய அறைக்குள் நடந்த சந்திப்பை பங்காளிகள் பகிரங்கப்படுத்தினரா?

## பெரமுன தரப்பு கொதிப்பு

கொழும்பு, ஒக். 30

கெரவலப்பிட்டி யுகதனவி மின் உற்பத்தி நிலையத்தின் பங்குகளை அமெரிக்க நிறுவன மொன்றுக்கு வழங்குவதற்கு எடுக்கப்பட்டுள்ள தீர்மானம் தொடர்பில் ஆலோசிப்பதற்காக நேற்று முன்தினம் இரவு அலரிமாளிகையில் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தலைமையில் நடைபெற்ற அரசாங்கக் கட்சித் தலைவர்களின் கூட்டத்தில் சூடான வாதப்பிரதிவாதங்கள் இடம்பெற்றுள்ளன.

இந்த சந்திப்பில் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ, முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, அமைச்சர்களான பஸில் ராஜபக்ஷ, தினேஷ் குணவர்த்தன, ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ, வாசுதேவ நாணயக்கார, விமல் வீரவன்ஸ, உதய கம்மன்பில, டக்ளஸ் தேவானந்தா, காமினி லொக்குகே, பந்துல குணவர்தன, பிரசன்ன ரணதுங்க, மஹிந்தானந்த அளுத்கமகே, ரோஹித அபேகுணவர்த்தன, கெஹலிய ரம்புக்வெல, நாமல் ராஜபக்ஷ மற்றும் இராஜாங்க அமைச்சர்களான தயாசிறி ஜயசேகர, ஜீவன் தொண்டமான், பாராளுமன்ற உறுப்பினர்களான சாகர காரியவசம், பேராசிரியர் திஸ்ஸ விதாரண, ஏ.எல்.எம்.அதாவுல்லா, டிரான் அலஸ், வீரசுமன வீரசிங்க, கெவிந்து குமாரதுங்க உள்ளிட்ட கட்சிப் பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.

அத்துரலிய ரத்ன தேரர், விமல் வீரவன்ஸ, உதய கம்மன்பில, வாசுதேவ நாணயக்கார ஆகியோர் யுகதனவி மின் உற்பத்தி நிலையத்தின் பங்குகளை வழங்கும் தீர்மானம் குறித்து தொடர்ச்சியாக கேள்வி எழுப்பினர் எனவும், அதற்கு நிதியமைச்சர் பசில் ராஜபக்ஷ பதிலளித்தார் என்றும் தகவல்கள் தெரிவித்தன.

அரசாங்கத்துக்குள்ளே இருக்கும் பிரச்னைகளை வெளியில் கொண்டு செல்ல வேண்டாம் என ஜனாதிபதி கோட்டாபய கூட்டுக் கட்சிகளின் தலைவர்களிடம் கோரிக்கை விடுத்தார் எனத் தெரிவிக்கப்பட்டது.

நேற்றுமுன்தினம் மாலை 5.30 மணியளவில் ஆரம்பமான கூட்டம் இரவு 10 மணிவரை நான்கரை மணித்தியாலங்கள் நீடித்த போதிலும் இறுதி உடன்பாடு எட்டப்படவில்லை எனத் தகவல்கள் தெரிவித்தன.

இதேவேளை, யுகதனவி மின் உற்பத்தி நிலையத்தின் பங்குகளை மாற்றுவதற்கு எடுக்கப்பட்டுள்ள தீர்மானம் தொடர்பில் எழுத்து மூலம் கருத்துக்களையும் ஆலோசனைகளையும் சமர்ப்பிக்குமாறு கூட்டுக் கட்சிகளின் தலைவர்களிடம் நிதி அமைச்சர் பஸில் ராஜபக்ஷ கோரியுள்ளார்.

இந்த கலந்துரையாடலில் பேசப்பட்ட விடயங்கள் உடனடியாக ஊடகங்களிடம் கசிந்துள்ளன. திட்டத்தை எதிர்க்கும் தரப்பினர் தொலைபேசியை இயக்கி, மறுமுனையில் சில ஊடகவியலாளர்கள் அதை கேட்கும் வகையில் நடந்து கொண்டனர் என பெரமுன தரப்பினர் குற்றம்சாட்ட ஆரம்பித்துள்ளனர். (அ)

# வெலிக்கடை சிறை கைதிகளின் போராட்டத்தால் ரூ. 1 கோடி நட்டம்

கொழும்பு, ஒக். 30

வெலிக்கடை சிறைச்சாலையில் சிறைக்கைதிகள் சிலரின் எதிர்ப்பு நடவடிக்கை காரணமாக செப்பல் பிரிவின் கூரைக்கு விளைவிக்கப்பட்ட சேதத்தால் சுமார் ஒரு கோடி ரூபா அளவில் நட்டம் ஏற்பட்டுள்ளதாகச் சிறைச்சாலைகள் பொறியியலாளர் பிரிவு தெரிவித்துள்ளது.

பொருள் சேதத்தை விளைவித்தமை தொடர்பில் சிறைக் கைதிகளுக்கு எதிராக பொதுச் சொத்துக்கள் சட்டத்தின் கீழ் வழக்கு தொடர நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக சிறைச்சாலைகள் ஊடகப் பேச்சாளர் தெரிவித்தார்.

கடந்த ஒரு மாதத்துக்கும் அதிகமாகக் கூரையின் மீது ஏறி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டிருந்த சிறைக்கைதிகளை, கூரையிலிருந்து கீழ் இறக்குவதற்கு சிறைச்சாலை அதிகாரிகள் நடவடிக்கை எடுத்திருந்தனர்.

ஆயுள் தண்டனை விதிக்கப்பட்டிருந்த 10 கைதிகள், தங்களின் தண்டனைக் காலத்தைக் குறைக்குமாறு வலியுறுத்தி வெலிக்கடை சிறைச்சாலையில் செப்பல் பிரிவின் கூரையின் மீது ஏறி உணவு தவிர்ப்புப் போராட்டத்தை முன்னெடுத்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (அ)

# இலங்கையின் ஆதிக்குடிகள் யார்?

## மரபணு ஆய்வின்படியான கண்ணோட்டம்



**த.மனோகரன்**

இலங்கையில் வாழும் மக்களில் தமிழர்கள் திராவிடர் என்றும், சிங்களவர் ஆரியரென்றும் கூறப்பட்டு வருகின்றது. ஆரியர்கள் வட இந்திய வம்சாவளி என்றும், திராவிடர்கள் தென் இந்திய வம்சாவளியினர் என்றும் கூறப்படுகின்றது. இது உண்மையா? சரியான உறுதியான ஆதாரங்களுடன் நிரூபிக்கப்பட்டதா என்பதை எவரும் கவனத்தில், கருத்தில் கொள்ளாது எழுந்தமானமாக தொடர்ந்து கூறிவருகின்றனர்.

இக்கூற்று முற்றிலும் தவறானது என்பதைப் பல ஆய்வுகள் எடுத்துக் கூறுகின்றன. ஆய்வின் முடிவில் இலங்கைவாழ் மக்களில் தமிழர்கள், சிங்களவர்கள் ஆகிய இரு சமூகங்களும் ஒரே இனத்தவர்கள் என்றும், காலப்போக்கில் பௌத்த சமயத்தை தழுவிய ஒரு பிரிவினரிடையே பாளி மற்றும் பிராகிருதச் செல்வாக்கால் சிங்கள மொழி தோற்றம் பெற்றது என்றும் கூறுகின்றனர்.

கிறிஸ்தவ சமயத்தை தழுவியவர்களிடம் எவ்வாறு ஆங்கில மொழி செல்வாக்கு பெற்றதோ அவ்வாறே பௌத்த சமயத்தைத் தழுவியவர்களிடம் சிங்களம் செல்வாக்குப் பெற்றது. நாட்டில் வழக்கிலிருந்த மொழியுடன் பௌத்த ஊடுருவலின் பின்னால் புகுந்த பாளி மற்றும் பிராகிருத மொழியும் கலந்து புதியதோர் மொழியாகச் சிங்கள மொழி உருவானது. பௌத்த சமயத்துடன் சேர்ந்ததாக புதிதாக உருவாக்கிய சிங்கள மொழி செல்வாக்குப் பெற்றது. புதிய மொழியாக சிங்கள மொழியைப் பேசியவர்கள் சிங்களவர் எனப் பட்டனர் - எனப்படுகின்றனர் என்பதே ஆய்வுகளின் முடிவாகக் கூறப்பட்டுள்ளது. பலநூறு ஆண்டுகளுக்கு முன் இடம்பெற்ற இந்நிகழ்வை ஏற்றுக்கொள்ளத் தயக்கமும் வரலாம். ஆனால், ஆய்வுகளின் முடிவுகளை முற்றாகப் புறந்தள்ள முடியாது. மூடிமறக்கவும் முடியாது. அவ்வாறு செய்வது மனித வரலாற்றை இன, மொழி, சமூக, சமய வரலாறுகளைப் புறந்தள்ளுவதும் மூடிமறைப்பதுமாகிவிடும்.

இன்று உலகில் பல்வேறு துறைகள் தொடர்பான ஆய்வுகள் நடைப்பெற்று வருகின்றன. அவற்றிலே டீ.என்.ஏ ஆய்வு முக்கியத்துவம் பெறும் ஒன்றாகவுள்ளது.

உலகில் மனித இடம்பெயர்வுகள் தொடர்பான வரலாற்றை விஞ்ஞான ரீதியாக நிலைநாட்ட, உறுதிப் படுத்த குறித்த டீ.என்,ஏ ஆய்வு உதவியாயுள்ளது. 21ம் நூற்றாண்டின் விஞ்ஞான ரீதியான தொல்பொருள், புதைபொருள் ஆராய்ச்சியில் இது முக்கியத்துவம் பெறுகின்றது. டீ.என்.ஏ ஆய்வு தமிழில் மரபணு ஆய்வு என்று கூறப்படுகின்றது.

மனிதனின் உடலில் எப்பாகத்திலிருந்தும் ஒரு தூசு அளவு வழுக்கை கிடைத்தால் அதை ஆதாரமாகக் கொண்டு குறித்த ஆய்வினை நடத்த முடியும் என்பது விஞ்ஞானிகளின் முடிவாகும். உலகில் வாழும் சகல மனிதர்களும் ஒரு நடமாடும் சுவடுகள் ஆவார்கள். ஒவ்வொருவரும் தமது மூதாதையரின் சுவடுகளை சுமந்து கொண்டவர்களாகவே இருக்கின்றார்கள்.

ஒவ்வொரு மனிதனுக்கும் இரண்டு பெற்றோர் (தாய், தந்தை), நான்கு பாட்டன், பாட்டிகள், எட்டு பூட்டன், பூட்டிகள் காணப்படுவர். அதேபோல் மேலும் பின்னோக்கி பார்க்கும் போது எட்டு பதினாறாகவும், பதினாறு முப்பத்திரண்டாகவும் இரட்டித்துக் கொண்டே போவதை அவதானிக்கலாம். குறித்த மரபணு ஆய்வு எனப்படும் டீ.என்.ஏ ஆய்வைச் செய்யும் போது வரலாற்று ரீதியான பல உண்மைகள் வெளிவரும் என்பர்.

மேற்படி ஆய்வின் மூலம் உலகிலே வாழும் சகல பிரதேசங்களிலுமுள்ள மனிதர்களின் இடம்பெயர்வு தொடர்பான வரலாறு பற்றிய வரைபடம் ஒன்றைத் தயாரிக்கும் முயற்சி இன்று சர்வதேச ரீதியில் முக்கியத்துவம் பெற்று வருகின்றது. இதன் ஆரம்பகட்ட முயற்சியாக வடஅமெரிக்காவில் வாழும் செவ்விந்தியர்கள் தொடர்பான தேடல் ஆரம்பமாகியது.

குறித்த தேடலின் முன் முப்பதாயிரம் ஆண்டுகளுக்கு முன் பூமியைச் சூழவிருந்து சமுத்திரங்கள் உறைந்த நிலையில் காணப்பட்ட பனிக்கட்டி யுகத்தில் வடசீனா மற்றும் வடஜப்பான் போன்ற பிரதேசங்களிலிருந்து கால்நடையாக அலஸ்காவின் பெரிங்கோடு கடல் வழியாக வந்து வடஅமெரிக்கா, கனடா போன்ற பகுதிகளில் தங்கியவர்களின் சந்ததியினரே குறித்த செவ்விந்தியர் என்பதை ஆய்வுகளில் கண்டறிந்தனர். தற்கால ஆய்வுகளின்படி குறித்த செவ்விந்தியர்களின் சந்ததியினர் இன்றும் வடசீனா மற்றும் ஜப்பானிய பகுதிகளில் வாழ்வதாக அடையாளம் காணப்பட்டுள்ளனர். மரபணு ஆய்வுக்கு கிடைத்த முதல் வெற்றியாக அது கொள்ளப்படுகின்றது.

இந்நிலையிலே நமது இலங்கை மக்களின் வம்சம் எது என்பதை நோக்குவோம். இலங்கையில் மரபணு ரீதியாக நோக்கும் போது மாறுபட்ட இரு சந்ததியினர் உள்ளனரா? கவனமாக ஆராய வேண்டிய ஒன்றாக இது உள்ளது.

இலங்கையில் வாழும் சிங்களவர்கள் தாங்கள் ஆரிய இனத்தவர்கள் என்றும், வட இந்தியாவிலிருந்து வந்தவர்களென்றும் வாதிக்கின்றனர், நம்புகின்றனர். ஆரியர் என்பதும், திராவிடர் என்பதும் இனக்குழுக்களைப் பிரதிபலிக்கும், வெளிப்படுத்தும் பதங்களல்ல என்பதை முதலில் புரிந்துகொள்ள வேண்டும். இவையிரண்டும் மொழிக் குடும்பங்களைக் குறிக்கம் சொற்பதங்களாகும். இலங்கை தொடர்பாக வெளிவந்துள்ள மரபணு ஆய்வுகள் இலங்கையர் மத்தியிலே நிலவிவரும் தமது இனக்குழுமம் பற்றிய நம்பிக்கையைத் தகர்ப்ப தாயுள்ளமையும் வெளிப்பட்டுள்ளது.

1976 இல் பீ.எல்.கிங்க் என்பவர் மேற்கொண்ட ஆய்வு (American Journal Of Physical Anthropology volume 45 p.po.91-100y; The Legend of Prince Vijaya A Study of Sinhalese Origin) அமெரிக்கன் ஜேர்னல் ஒப் அன்த்ரோ போலஜி என்ற நூலின் 45ஆம் அத்தியாயத்தில் 91 முதல் 100 வரையான பக்கங்களில் இளவரசன் விஜயனின் பண்டைய வரலாறு சிங்களவரின் தோற்றம் பற்றிய ஆய்வு என்னும் தலைப்பில் வெளிவந்துள்ளது.

அதில் சிங்களவர்கள் வடஇந்தியர் அல்லவென்றும், அவர்கள் தென்னிந்தியர் குறிப்பாகத் தமிழ்நாடு, கேரளம் ஆகிய பகுதிகளைச் சேர்ந்தவர்களின் பரம்பரையினரென்றும், ஒரு சிறு தொகையினர் மற்றும் வங்காளத் தொடர்பு கொண்டவர்கள் என்றும் கூறப்பட்டுள்ளது. வடஇந்தியப் பகுதியிலிருந்து இலங்கையில் கரையொதுங்கிய விஜயனும், அவர்களது நண்பர்களும்



தூண் தாங்கு கற்கள்

பாண்டிய நாட்டிலிருந்து தமிழ் பெண்களை வரவழைத்துத் திருமணம் செய்துகொண்டதான வரலாறு இதை மெய்ப்பிக்கின்றது. இன்றைய இந்தியத் தமிழ்நாட்டில் அன்றைய சோழ பாண்டிய நாடுகள் அடங்கியுள்ளதுடன், சேரத் தமிழ்நாடு இன்று கேரளமாகக் குறிப்பிடப் படுவதுடம் கவனத்தில் கொள்ளப்பட வேண்டிய ஒன்றாகும்.

குறித்த ஆய்வுக் கட்டுரையில் சில (டி.என்.ஏ) மரபணுச் சான்றுகள் மற்றும் வரலாற்றுச் சான்றுகளும் முக்கியத்துவம் கொடுத்து ஆராயப்பட்டுள்ளதாகக் கூறப்பட்டுள்ளது.

குறித்த ஆய்வினைத் தொடர்ந்து 1988இல் வெளிவந்த அமெரிக்கன் ஜேர்னல் ஒப் அன்த்ரோ போலகி என்ற வெளியீட்டின் 75ஆம் அத்தியாயத்தின் 217 முதல் 225 ஆம் பக்கங்களில் நஸ்க்ஷா (Nsha) என்பவர் முன்பு கிங்க் எழுதிய கட்டுரையிலிருந்து அதிகளவான மரபணுச் சான்றுகளைப் பயன்படுத்தி ஒரு கட்டுரை எழுதியுள்ளார். இலங்கை மக்களின் இரத்த மூலக்கூற்று அடையாளங்கள் இளவரசன் விஜயனின் பண்டைய வரலாறு ஒரு மீளாய்வு என்ற தலைப்பில் அக்கட்டுரை அமைந்திருந்தது.

அதில் இலங்கை, தமிழ்நாடு, கேரளம், வங்காளம், வடஇந்தியா போன்ற பிரதேசங்களிலிருந்து பெறப்பட்ட இரத்த மூலக்கூறுகளை அடிப்படையாகக் கொண்டு மரபணுத் தொடர்புகள் ஆராயப்பட்டுள்ளன. 1976ஆம் ஆண்டில் வெளியான ஆய்வுகளை உறுதிப் படுத்துவதாக 1988இல் வெளியான ஆய்வுக் கட்டுரை அமைந்துள்ளது

**ஒவ்வொரு மனிதனுக்கும் இரண்டு பெற்றோர் (தாய், தந்தை), நான்கு பாட்டன், பாட்டிகள், எட்டு பூட்டன், பூட்டிகள் காணப்படுவர். அதேபோல் மேலும் பின்னோக்கி பார்க்கும் போது எட்டு பதினாறாகவும், பதினாறு முப்பத்திரண்டாகவும் இரட்டித்துக்கொண்டே போவதை அவதானிக்கலாம். குறித்த மரபணு ஆய்வு எனப்படும் டீ.என்.ஏ ஆய்வைச் செய்யும் போது வரலாற்று ரீதியான பல உண்மைகள் வெளிவரும் என்பர்.**

அதாவது இலங்கை மக்களும், தென்னிந்தியாவில் வாழ்ந்தவர்களும் ஒரே இனக்குழுமத்தைச் சேர்ந்தவர்களென்பதுடன், மிகச் சிறிய அளவினரே வங்காளத்துடன் தொடர்புடையவர்க்ள என்பது மீண்டும் வலியுறுத்தப்பட்டுள்ளது,

இதைத் தொடர்ந்து 1996இல் மேலுமொரு மரபணு தொடர்பான கட்டுரை வெளியிடப்பட்டது. 'மானுட வரலாறு' என்பது குறித்த கட்டுரை வெளிவந்த சஞ்சிகையாகும். Human History எனும் குறித்த சஞ்சிகையின் 5ஆம் அத்தியாயத்தில் 707 முதல் 737 வரையான பக்கங்களில் இலங்கை மக்களின் மரபணு தொடர்பான கட்டுரை இடம்பெற்றுள்ளது. குறித்த ஆய்வு கட்டுரை 'இலங்கை மக்களின் மரபணு வேறுபாடுகள்' (Genetical Variations in Srilankan Population) எனும் தலைப்பில் வெளியானது. இவ்வாய்வுக் கட்டுரையில் இடம்பெற்ற ஆய்வாளர்களான எஸ்.எஸ்.பினா, எஸ்.எஸ்.மொஸ்தான மற்றும் எச்.ஜயசேகர (S.S.Papina, S.S.Mostana, H.Jayasehara) ஆகியோரின் கருத்துக்களும் அடங்கியுள்ளன. குறிப்பிட்ட மூவரது கருத்துகள் மிகவும் முக்கியத்துவம் பெற்றுள்ளன.

மேற்குறித்தவர்களின் ஆய்வின் முடிவில் இலங்கை வாழ் மக்களில் தமிழர்களும், சிங்களவர்களும் ஒரே இனத்தவர்கள் என்பதும், காலப்போக்கில் பௌத்த சமயத்தை தழுவிய ஒரு பிரிவினர் பாளி போன்ற மொழிகளின் செல்வாக்கால் உருவான புதிய மொழியான சிங்கள மொழி பேசுபவர்களாக சிங்களவர் என்று கூறப்படும் நிலைக்கு மாற்றமடைந்தனர் என்றும் வெளியிடப்பட்டுள்ளது. ஆனால், ஆதிமொழியான தமிழ் மொழி மாற்றமின்றி தொடர்ந்துள்ளமையும், தமிழ் மொழியைத் தாய்மொழியாகக் கொண்டவர்கள் தமிழர்களாகத் தொடர்ந்து இருப்பதையும் நாம் ஊகித்திருக்கலாம். பௌத்த மதமும், பாளி மொழியும் இந்நாட்டிற்குள் ஊடுருவியதன் பிரதிபலனாக சிங்கள மொழியும், அதைப் பேசும் சிங்களவர்களும் உருவானதாகவே ஆய்வுகள் வெளிப்படுத்துகின்றன. இலங்கையில் ஆட்சி செய்த தேவநம்பியதீஸன் காலத்தில் இலங்கைக்குள் வந்து புத்த சமயத்தை போதிக்க முற்பட்ட அசோக சக்கரவர்த்தியின் மகனான மகிந்தன் சிங்கள மொழி உருவாகாத நிலையில் எந்த மொழியில் அரசனுடன் உரையாடி தர்மபோதனை செய்தான் என்பதை இது வரை எவரும் ஆராயவில்லை. கண்டுகொள்ளாமலேயே உள்ளனர்.

(மறு பக்கம் பார்க்க)

# இரு தடுப்பூசி செலுத்தி கொண்டவர்கள் கூட கொரோனா வைரஸை பரப்பலாம்!

■ மிஷெல் ராபர்ட்ஸ்

இரண்டு டோஸ் கொரோனா தடுப்பூசி செலுத்திக் கொண்டவர்களுக்குக்கூட கொரோனா தொற்று ஏற்பட்டு, அவர்களுடன் இருப்பவர்களுக்கு பரவுவதாக பிரிட்டன் நிபுணர்கள் எச்சரித்துள்ளனர். தடுப்பூசி செலுத்திக் கொள்ளாதவர்கள் எப்படி கொரோனாவை பரப்புகிறார்களோ, அதே போல இரு டோஸ் தடுப்பூசி செலுத்திக் கொண்டவர்களும் பரப்புகிறார்கள்.


அவர்களுக்கு எந்தவித கொரோனா அறிகுறிகளும் இல்லை என்றாலும் அல்லது குறைவான கொரோனா அறிகுறிகள் இருந்தாலும், அவர்களுடன் வீட்டில் இருப்பவர்கள் தடுப்பூசி செலுத்திக் கொள்ளாதவர்களாக இருந்தால், அவர்களில் ஐந்தில் இரு பகுதியினருக்கு அல்லது 38 சதவீதத்தினருக்கு வைரஸை பரப்புகிறார்கள்.

ஒருவேளை வீட்டில் உள்ள அனைவரும் முழுமையாக தடுப்பூசி செலுத்திக் கொண்டவர்களாக இருந்தால், இந்த எண்ணிக்கை நான்கில் ஒரு பங்காக அல்லது 25 சதவீதமாக குறைகிறது. ஏன் நிறைய மக்கள் கொரோனா தடுப்பூசி செலுத்திக் கொள்ள வேண்டும், பாதுகாப்பாக இருக்க வேண்டியது அவசியமென "தி லேன்செட்" என்கிற மருத்துவ சஞ்சிகை தன் கட்டுரையில் கூறியுள்ளது.

தடுப்பூசி செலுத்திக் கொள்ளாதவர்கள், தங்களைச் சுற்றியுள்ளவர்கள் கொரோனா தடுப்பூசி செலுத்திக் கொண்டார்கள் என்பதாலேயே அவர்கள் தொற்றை பரப்பமாட்டார்கள் என்று நம்ப முடியாது என அந்தக் கட்டுரை எச்சரிக்கிறது.

கொரோனா தடுப்பூசிகள் கொரோனா தொற்றின் தீவிரத்தன்மை மற்றும் மரணங்களைத் வெகு சிறப்பாக தவிர்த்துள்ளன. ஆனால் கொரோனா நோய் பரவலைத் தடுப்பதில், குறிப்பாக அதிகம் பரவக் கூடிய கொரோனாவின் டெல்டா திரிபுக்குப் பிறகு அத்தனை சிறப்பாக செயல்படவில்லை.

மேலும் காலப் போக்கில் கொரோனா தடுப்பூசிகளால் கிடைக்கும் பதுகாப்பும் குறைகிறது, புதிய பூஸ்டர் டோஸ்கள் தேவைப்படுகின்றன. வீட்டில் குடும்பங்கள் வழியாகத்தான் பெரும்பாலும் கொரோனா தொற்று பரவுகிறது. எனவே, கொரோனா தடுப்பூசி செலுத்திக் கொள்ள தகுதியான, குடும்ப உறுப்பினர்கள் அனைவரும் சரியாக தடுப்பூசி செலுத்திக் கொள்வது அர்த்தமுள்ளதாக இருக்கும் என நிபுணர்கள் கூறுகின்றனர்.



## ஆய்வு சொல்வதென்ன?

செப்ரெம்பர் 2020 முதல் செப்ரெம்பர் 2021 வரை ஆய்வு நடத்தப்பட்டது. அதில் லண்டன் மற்றும் போல்டன் பகுதியில் உள்ள 440 குடும்பங்களும் சேர்க்கப்பட்டு பி. சி.ஆர் கொரோனா பரிசோதனை செய்தபோது: தடுப்பூசி செலுத்திக் கொள்ளாதவர்களோடு ஒப்பிடும் போது, இரு டோஸ் தடுப்பூசி செலுத்திக் கொண்டவர்களுக்கு டெல்டா திரிபு கொரோனா தொற்று ஏற்படும் வாய்ப்பு குறைவு என்றாலும், குறிப்பிடும் வகையில் உள்ளது. அது வெறுமனே ஒருதொற்று போலத்தான் தெரிகிறது.

தடுப்பூசி செலுத்திக் கொண்டவர்கள், தொற்றிலிருந்து விரைவாக குணமடைகிறார்கள், ஆனால் அவர்களின் வைரல் லோட், தடுப்பூசி செலுத்திக் கொள்ளாதவர்களுக்கு இணையாகவே உள்ளது. எனவே, தடுப்பூசி செலுத்திக் கொண்டவர்கள் கூட, வீட்டில் உள்ளவர்களுக்கு கொரோனாவை பரப்ப முடியும் என்பதை இது விளக்குகிறது.

"தடுப்பூசி செலுத்திக் கொண்டவர்களால் கொரோனா பரவுவதைக் காணும் போது, தடுப்பூசி செலுத்திக் கொள்ளாதவர்கள், தடுப்பூசி செலுத்திக் கொண்டு தங்களைத் தாங்களே தொற்றிலிருந்தும், நோயின் தீவிரத்தன்மையிலிருந்தும் பாதுகாத்துக் கொள்ள வேண்டும். குறிப்பாக குளிர் காலத்தில் பலரும் வீட்டுக்குள் நிறைய நேரத்தை நெருக்கமாக செலவழிக்க இருக்கும் போது இது அவசியமாகிறது" என ஆய்வை இணைந்து தலைமை தாங்கி நடத்திய லண்டனின் இம்பீரியல் கல்லூரியைச் சேர்ந்த பேராசிரியர் அஜீத் லால்வானி கூறுகிறார்.

"தடுப்பூசியின் இரண்டாவது டோஸ் செலுத்திக் கொண்ட சில மாதங்களுக்குப் பிறகு, கொரோனா தொற்றால் பாதிக்கப்படும் வாய்ப்பு அதிகரித்திருப்பதை நாங்கள் கண்டுபிடித்தோம். எனவே பூஸ்டர் தடுப்பூசி செலுத்திக் கொள்ள தகுதியானவர்கள் முறையாக செலுத்திக் கொள்ள வேண்டும்" என்றார்.

இந்த ஆய்வை இணைந்து நடத்திய இம்பீரியல் கல்லூரியைச் சேர்ந்த அனிகா சிங்கநாயகம் "புதிய கொரோனா திரிபுகளை எதிர்கொண்டு வரும் இந்த நேரத்தில் எங்கள் கண்டுபிடிப்புகள் தடுப்பூசியின் தாக்கம் குறித்த முக்கிய விவரங்களை வழங்குகிறது, அதிகம் பேர் கொரோனா தடுப்பூசி செலுத்திக் கொண்ட நாடுகளில்கூட, குறிப்பாக உலக அளவில் ஏன் டெல்டா திரிபால் அதிக எண்ணிக்கையிலான நபர்கள் பாதிக்கப்பட்டு வருகிறார்கள் என்கிற விவரங்களை வழங்குகிறது.

தடுப்பூசி செலுத்திக் கொண்டவர்கள் கூட, கொரோனா பரவலைத் தடுக்க முகக்கவசம் அணிவது, சமூக இடைவெளியை கடைபிடிப்பது, பரிசோதனைகளை மேற்கொள்வது போன்ற பொது சுகாதார மற்றும் சமூக நடவடிக்கைகளை கடைபிடிப்பது தொடர்ந்து அவசியமாகிறது" என அவர் கூறினார். ■

# இலங்கையின் ஆதிக்குடிகள்...

(08ஆம் பக்கத் தொடர்ச்சி)

தென்னிந்தியாவில் வளம்பெற்ற மொழியாக அக் காலத்தில் தமிழ்மொழி இருந்ததென்பது பதிவாகியுள்ளது. இலங்கையில் இந்நாளில் வாழ்ந்தவர்கள் தமிழர்கள் என்பதையும், தமிழ் மொழியும், இந்து சமயமும் இந்நாட்டில் செல்வாக்குடன் இருந்தன என்பதற்கு விஜயன் காலத்தில் பாண்டிய நாட்டிலிருந்து வந்த இளவரசியும், அவளது தோழியரும், படையினரும் சான்றாகின்றனர். மொழியறிவு மூலமான புரிந்துணர்வின் அடிப்படையிலே பாண்டிய தமிழ் மன்னன் விருப்புடன் தனது மகளை இலங்கையின் அரசன் விஜயனுக்கு விவாகம் செய்ய சம்மதித்திருப்பான் என்பதும் மறுக்கமுடியாத ஒன்றாகும்.

ஒட்டுமொத்தமாக நோக்கும்போது நவீன ஆய்வுகளின் அடிப்படையில். மரபணு ஆய்வின் அடிப்படையில் இலங்கை வாழ் தமிழர்களும், சிங்களவர்களும் தென்னிந்தியாவுடன் தொடர்புபட்ட தமிழ் இனக்குழுமத்தைச் சார்ந்தவர்களேயன்றி தற்போது கூறப்படுவது போன்று வடஇந்திய வம்சாவளியினர் அல்ல என்பது வெளிப்படுத்தப்பட்டுள்ளது.

ஆதியிலே ஓர் இனத்தவர்களாகவிருந்த அதாவது தமிழர்களாக வாழ்ந்து வந்த இலங்கைக் குடிமக்களில் ஒரு சாரார் புதிதாக வரிந்துகொண்ட புதத்சமயத்தினூடாகத் தமது பாரம்பரிய மொழியான தமிழுடன் பாளி போன்ற பிறமொழிச் சொற்களையும் இணைத்துக் கொண்டு புதிய மொழியினராக புதிதாக உருவான சிங்கள மொழி பேசுபவர்களாக மாற்றம் அடைந்துள்ளனர். அதன் மூலம் சமூக, பொருளாதார, கலாசார மாற்றங்களையும் கண்டு பிளவுபட்டுள்ளனர். இலங்கையில் தமிழர்கள், சிங்களவர்கள் என இரு தேசிய இனங்கள் தோற்றம்பெற புத்த சமய செல்வாக்கு முக்கிய காரணியாக அமைந்தது என்பது புரிந்துகொள்ளகூடிய ஒன்றாகும்.

இலங்கையின் மேற்குக் கரையில் சிலாபம், நீர்கொழும்பு உள்ளிட்ட பகுதிகளில் வாழ்ந்த இந்துத் தமிழர்கள் கிருஸ்தவ சமயத்தவராக மாறியபின், தமிழர்கள் என்று தம்மை அடையாளப்படுத்துவதைக் கைவிட்டு சிங்களவர்களாகத் தம்மை அடையாளப் படுத்த முற்பட்டமையும் வரலாற்றுப் பதிவாகும். அரசியல் அழுத்தத்தினால் இலங்கையின் மேற்குக் கரையில் இயங்கிய றோமன் கத்தோலிக்க தமிழ்ப் பாடசாலைகளெல்லாம் இரவோடு இரவாக றோமன் கத்தோலிக்க சிங்களப் பாடசாலைகளாக மாற்றப்பட்டமை கடந்த நூற்றாண்டின் மத்தியில் இடம்பெற்ற நிகழ்வுகள் என்பதை இலங்கை வரலாறு சரியாகவே பதிவு செய்துள்ளது.

ஆரம்பத்தில் புத்த சமயத்தவராகி மொழிமாறிய தமிழர்கள் அண்மைக் காலத்தில் அதாவது ஒரு நூற்றாண்டுகூட நிறைவடையாத காலத்தில் கிறிஸ்தவ மதத்தவர்களாகி சிங்கள மொழியினர் என்று தம்மை அடையாளப்படுத்த வேண்டிய நிலைக்கு ஆளாகிவிட்டனர்., ஆளாக்கப்பட்டனர்.

மதம் மாறி பேசும் மொழி மாறினால் தமது பாரம்பரிய மரபை மாற்றிக்கொள்ள முடியாது என்பதற்கு மரபணு ஆய்வுகள் சான்றாயமைகின்றன. இலங்கையின் தமிழ்மொழிப் பேசுவோரின், அதாவது தாய்மொழியைக் கொண்டோரின் எண்ணிக்கை வீழ்ச்சிக்கு காலத்திற்கு காலம் இலங்கைக்குள் ஊடுருவிய சமயங்களே காரணிகளாயின. இந்து சமயத்தவரின் இருப்பு அளவின் வீழ்ச்சிக்கும் அதுவே காரணியாக அமைந்துவிட்டது.

எவ்வாறாயினும் நவீன ஆய்வான மரபணு ஆய்வுகள் மூலம் வெளிப்பட்டுள்ள ஆதாரங்களை, விடயங்களைக் கொண்டு இலங்கையின் ஆதிக்குடிகள் பேசும் மொழியால் தமிழர்களாகவும், பின்பற்றிய மதத்தால் இந்துக்களாகவும் இருந்துள்ளனர் என்பதைப் பகிரங்கப்படுத்தக் கூடியதாகவுள்ளது. அறிந்துகொள்ளவும் முடிகின்றது.

எது எப்படியிருப்பினும் இலங்கையில் இனத்தால் வேறுபட்டிருப்பின் பேசும் மொழியால் தமிழர்களும், முஸ்லிம்களும் ஒன்றுபட்டவர்கள் என்று கூறப்படுகின்றது. அதேபோல் பேசும் மொழியால் தமிழரும் சிங்களவரும் வேறுபட்டிருந்தாலும் கூட மரபணு ஆய்வுகளின் முடிவுகளின்படி தமிழரும், சிங்களவர்களும் ஒரே இனத்தவர்கள் என்று கூறலாமல்லவா? உண்மையும் அவ்வாறு நிரூபணமாகியுள்ளது அல்லவா?

இனவாத நோக்கில் சிந்தனை செய்யும் இலங்கையருக்கு இது கசப்பான விடயமாக இருப்பினும், ஏற்றுக் கொள்ள முடியாததாக இருப்பினும் புறந்தள்ள முடியாத, மூடிமறைக்க முடியாத உண்மை அதுவாகத் தானேயுள்ளது. ■

# புலமைச் சிகரம்

## தரம் 5 புலமைப் பரிசில் மாணவர்களுக்கான வழிகாட்டி

மாதிரிப் பரீட்சை
வினாத்தாள் - II

நேரம் : 1 மணித்தியாலம் 15 நிமிடம்

www.lkedu.lk

ii) பின்வரும் கருத்தினைத் தரும் பழமொழியை எழுதுக.
"காலம் மாறிமாறிவரும்"

……………………………………………………………

7. பின்வரும் தொடர்மொழிக்குப் பொருத்தமான தனிச் சொல்லை எழுதுக.
கடவுள் இல்லை எனக் கூறுபவன்.

……………………………………………………………

8. பின்வரும் பாடலைப் பூரணப்படுத்துக.
வளர்ந்து பின்னர் நீயுமே
………………………… அடைந்ததும்
………………………… உழைத்திடு
தக்க வாழ்வு கிடைக்குமே

9. பின்வரும் பிராணியின் தொனிக்குரிய மரபுச் சொல்லை எழுதுக.
தவளை கத்தும் என்பது போல பல்லி ……………………………

10. சரியான விடையைத் தெரிந்து கோடிடுக.
i) "ஓடிச் சென்ற கந்தன் கால் தடுக்கிக் கீழே விழுந்தான்", என்ற வாக்கியத்தில் உள்ள இடையின மெய் எழுத்துக்கள் எத்தனை?
1) 3　　2) 1　　3) 2

ii) பலத்த சூறாவளியால் மரக்கிளைகள்………………… என முறிந்து விழுந்தன.
1) சடசட　　2) மளமள　　3) வெடுவெடு


iii) ஒரு சொல்லில் நிதமும் இருப்பவை
1) எழுத்தும் கருத்தும்
2) குறிலும் நெடிலும்
3) மெய்யெழுத்துக்களும் உயிரெழுத்துக்களும்

iv) கோபம் என்பதன் எதிர்க்கருத்து
1) சினம்　　2) சீற்றம்　　3) சாந்தம்

11. தரப்பட்டுள்ள ஆங்கிலச் சொற்களுக்கு உரிய **தமிழ்ச்** சொற்களை எழுதுக.
1) Waterfall……………………　　2) Rainbow……………………

12. பின்வரும் படத்திற்குரிய ஆங்கிலச் சொல்லை ஆங்கில எழுத்துக்களில் எழுதுக.

1) 
……………………

2) 
……………………

13. இடைவெளிக்குப் பொருத்தமான சொல்லைத் தெரிவு செய்து எழுதுக.
1) What ………… you like? (is, do, are)
2) How many flowers ………… there? (are, is, have)

14. சிங்களச் சொல்லின் கருத்தை தமிழில் எழுதுக.
1) பதாதா　-　……………………

15. பின்வரும் வாக்கியம் சிங்களத்தில் கூறப்படும் விதத்தை தமிழில் எழுதுக.
i) உங்களுக்கு மாம்பழம் வேண்டுமா?
……………………………………………………………


16. "எண்பத்தையாயிரத்து எண்பத்தெட்டு" என்பதற்கு முன்னால் உள்ள எண்ணினை எழுதுக.
……………………………………………………………

17.

| | |
|---|---|
| 6 | 9 |
| 0 | 7 |


கட்டத்தில் உள்ள இலக்கங்களைக் கொண்டு ஆக்கக்கூடிய மிகப் பெரிய எண்ணிற்கும் மிகச் சிறிய எண்ணிற்கும் இடையிலான வித்தியாசம் யாது? ……………………

18. தரப்பட்டுள்ள ஒவ்வோர் எண் கோலத்திலும் உள்ள இடைவெளிக்குப் பொருத்தமான எண்ணை எழுதுக.
i) XIX, XVII, XV, ……………
ii) 15, 9, 18, 18, 21, 36 ……………

19. 

உருவில் $\frac{1}{4}$ பங்கிற்கு நிறம் தீட்டப்பட்டுள்ளது.
நிறம் தீட்டப்படாத கட்டங்களில் 0.5 பங்கிற்கு நிறந்தீட்டிக் காட்டுக.

20. 810 புத்தகங்களை ஒரு பெட்டிக்கு 8 வீதம் பொதி செய்ய வேண்டியுள்ளது.
i) செய்யப்பட்ட பொதிகள் எத்தனை? ……………………
ii) பொதி செய்த பின்னர் எத்தனை புத்தகங்கள் மீதியாக இருக்கும்? ……………………

21. 

i) இவ்வடிவத்தினைக் கொண்டு அமைக்கக்கூடிய திண்ம உருவின் பெயர் யாது?
……………………………………………………………
ii) உச்சிகளினதும், விளிம்புகளினதும் கூட்டுத் தொகை யாது?
……………………………………………………………

22. மு.ப 10.25 **இற்கு ஆரம்பித்த சிரமதானம் பி.ப** 1.20 **இற்கு நிறைவடைந்தது.**

i) சிரமதானத்திற்குச் செலவாகிய நேரம் யாது?
………………… மணித்தியாலம் ………… நிமிடங்கள்

ii) சிரமதானம் ஆரம்பித்த நேரத்தினை இருபத்துநான்கு மணித்தியாலயக் கடிகாரத்திற்கேற்ப எழுதுக. ……………………………………………………………

# மாகாண சபை தேர்தலுக்கு எதிரான விமல், கம்மன்பில, வீரசேகர எங்கே?

## ஐக்கிய மக்கள் சக்தி கேள்வி

கொழும்பு, ஒக். 30

"மாகாண சபைத் தேர்தல் நடத்தப்படாது, மாகாண சபை முறைமை ஒழிக்கப்படும் என் றெல்லாம் அமைச்சர்களான விமல் வீரசன்ஸ, உதய கம்மன் பில, சரத் வீரசேகர ஆகியோர் சூளுரைத்தனர். ஆனால், இந் தியாவின் அழுத்தத்தால் அரசு தேர்தலை நடத்த தயாரா கின்றது. இது தொடர்பில் அமைச்சர்கள் மூவரினதும் நிலைப்பாடு என்ன?"

- இவ்வாறு ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப் பினர் ஹர்ஷன ராஜகருண கேள்வி எழுப்பியுள்ளார்.

இது தொடர்பில் ஊடகங்க ளிடம் அவர் மேலும் கூறியதாவது: -

"மாகாண சபை முறைமை எமது நாட்டுக்கு பொருத்த மற்றது, அந்த முறைமையை ஒழிக்க வேண்டும், புதிய அரச மைப்பு ஊடாக இது நடக்கும் என அமைச்சர்களான விமல் வீரசன்ச, உதய கம்மன்பில, சரத் வீரசேகர ஆகியோர் தெரிவித்து வந்தனர்.

ஆனால், இந்தியாவின் இரா ஜாதந்திரிகள் வந்துசென்ற நிலையில், அவசர அவசரமாக



தேர்தலை நடத்துவதற்கு அரசு தயாராகின்றது. ஆரம்பத்தில் எதிர்ப்பு வெளியிட்ட அமைச் சர்கள் மௌனம் காக்கின்றனர். இது தொடர்பில் அவர்களின் நிலைப்பாடு என்ன?

தேர்தல் நடைபெறுவதை நாம் எதிர்க்கவில்லை. பாராளு மன்றத் தேர்தலைக் கூட எதிர் கொள்வதற்கு தயார். ஆனால், பிற நாடுகளில் அழுத்தத்தால் தேர்தல் நடைபெறுவதையும், உள்ளக விடயங்கள் மாற்றப் படுவதையும் நாம் விரும்ப வில்லை. சர்வதேச அழுத்தங் களுக்கு இந்த அரசுதான் வழி வகுத்துள்ளது" - என்றார். (இ)

# விவசாயிகளை தூண்டிவிட்டு அரசியல் செய்கின்றது எதிரணி

## இராஜாங்க அமைச்சர் அருந்திக்க குற்றச்சாட்டு

கொழும்பு, ஒக். 30

"விவசாயிகளைத் தூண்டி விட்டு, அவர்களை வீதியில் இறக்கி அதன்மூலம் அரசியல் பிழைப்பு நடத்தி வருகின்றது ஐக்கிய மக்கள் சக்தி."

- இவ்வாறு குற்றஞ்சாட் டியுள்ளார் இராஜாங்க அமைச் சர் அருந்திக்க பெர்னாண்டோ.

இது தொடர்பில் ஊடகங்க ளிடம் அவர் மேலும் கூறிய தாவது: -

"இரசாயன உரப் பயன் பாட்டை கைவிட்டு, சேதன பசளை மூலமான விவசாயத்தை நோக்கி உலக நாடுகள் பயணிக் கின்றன. இரசாயன உரம் என் பது நஞ்சு. எமது மக்களைக் காக்க நாமும் இயற்கை விவசா யத்தை நோக்கி நகர்கின்றோம். அதற்காகவே உர இறக்குமதிக் குத் தடை விதிக்கப்பட்டது.

விவசாயிகளுக்குத் தேவை யான உரத்தை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வரு கின்றது. நிலைமை இவ்வாறிருக் கையில் விவசாயிகளைத் தூண் டிவிட்டு ஐக்கிய மக்கள் சக்தி உள்ளிட்ட எதிரணிகள் அவர்க ளின் போராட்டங்கள் ஊடாக வும் அரசியல் செய்கின்றன.

மேற்படி கட்சிகளும் இர சாயன உரத்துக்கு எதிர்ப்பு. ஆனால், எதற்காக தற்போது இரசாயன உரத்துக்குக் குரல் கொடுக்கின்றனர் எனத் தெரிய வில்லை" - என்றார். (இ)

# ஐ.தே.க. தலைமையில் அரசுக்கு எதிராக பெரும் போராட்டங்கள்

## வியூகம் வகுக்கின்றார் ரணில்

கொழும்பு, ஒக். 30

**ஐக்கிய தேசியக் கட்சியுடன் தொடர்புடைய தொழிற்சங்கங்கள் உள்ளிட்ட வலையமைப்புக்களை வலுப்படுத்தும் அதேவேளை, கட்சி யின் தனித்துவத்தின் கீழ் அரசுக்கு எதிரான எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்களை ஆரம்பிப்பதற்கான புதிய வேலைத்திட்டங்களையும் எதிர்காலத்தில் நடைமுறைப்படுத்துமாறு ஐ.தே.க. தலைவர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.**

இது குறித்து ஐக்கிய தேசி யக் கட்சியுடன் தொடர்புடைய சகல வலையமைப்புக்களையும் வலுப்படுத்துவதற்கான நடவ டிக்கைகளை துரிதமாக ஆரம் பிக்குமாறு ரணில் விக்கிரம சிங்க ஆலோசனை வழங்கியுள் ளார் என்று கட்சியின் பொதுச் செயலாளர் பாலித ரங்கே பண் டார குறிப்பிட்டார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் உறுப்புரிமையைப் பெற்றுக் கொள்ளாத, அரசுக்கு எதிராக வுள்ள சகல தரப்பினரையும் ஒன்றிணைத்து ரணில் விக்கிரம சிங்கவின் ஆலோசனைக்கமைய வலையமைப்புக்களை வலுப் படுத்தத் திட்டமிடப்பட் டுள்ளது.

ஐக்கிய தேசிய கட்சியின்



பிரதித் தலைவர் ருவன் விஜே வர்தன, உப தலைவர் அகில விராஜ் காரியவசம் உள்ளிட்ட வர்களின் கண்காணிப்பின் கீழ், கொரோனா நிலைமைக்கு ஏற்றவாறு மேற்குறித்த வலைய மைப்புக்களை ஆரம்பிக்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

தொழிற்துறையினர் அமைப்பு, பல்கலைக்கழக பேராசிரியர் மன்றம், அரச மற் றும் தனியார் தொழிற்சங்கள் உள்ளிட்ட சகல அமைப்புக்க ளையும் ரணில் விக்கிரமசிங் கவால் வழங்கப்பட்டுள்ள ஆலோ சனைக்கமைய துரிதமாக வலுப் படுத்துமாறு ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச் செயலாளர் பாலித ரங்கே பண்டார தெரி வித்தார்.

தொழிற்சங்கங்கள் உள் ளிட்ட வலையமைப்புக்களை வலுப்படுத்தும் அதேவேளை, கட்சியின் தனித்துவத்தின் கீழ் அரசுக்கு எதிரான எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்களை ஆரம்பிப் பதற்கான புதிய வேலைத்திட் டங்களையும் எதிர்காலத்தில் நடைமுறைப்படுத்துமாறும் பொதுச்செயலாளர் பாலித ரங்கே பண்டார மேலும் கூறி னார். (இ)

# கடற்கரையிலிருந்து ஆணின் சடலம் மீட்பு

நீர்கொழும்பு, ஒக். 30

நீர்கொழும்பு - துன்கல்பிட்டி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கெப்பும்கொட படகு தரிப் பிடத்தை அண்மித்த கடற்கரை யில் ஆண் ஒருவரின் சடலம் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

சடலமாக மீட்கப்பட்ட நபர் 30 முதல் 35 வயதுக்கு இடைப் பட்டவர் எனப் பொலிஸாரால் அடையாளம்காணப்பட்டுள்ளார்.

நீர்கொழும்பு நீதிவானின் விசாரணைகளையடுத்து, பிரேத பரிசோதனைக்காக நீர்கொழும்பு வைத்தியசாலைக்குச் சடலம் கொண்டு செல்லப்பட்டுள்ளது.

இது தொடர்பில் துன்கல் பிட்டி பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (இ)

# விவசாயிகளுக்கு இழப்பீடு உறுதி; ஆர்ப்பாட்டங்களை கைவிடுங்கள்

## அமைச்சர் மஹிந்தானந்த கோரிக்கை

கொழும்பு, ஒக். 30

"நனோ- நைதரசன் திரவ உரத்தைப் பயன்படுத்தி குறை வான விளைச்சலை பெறும் விவ சாயிகளுக்கு நட்டஈடு வழங்கும் சுற்றறிக்கை எதிர்வரும் வாரம் வெளியிடப்படும். பெரும் போக விவசாய நடவடிக்கை களுக்குத் தேவையான உரம் விவ சாயிகளுக்கு முழுமையாக வழங் கப்பட்டுள்ளன. ஆகவே, விவசா யிகள் போராட்டத்தைக் கைவிட்டு விவசாய நடவடிக் கைகளில் ஈடுபட வேண்டும்."

- இவ்வாறு விவசாயத்துறை அமைச்சர் மஹிந்தானந்த அளுத்கமகே தெரிவித்தார்.

ஜனாதிபதி ஊடகப்பிரிவு மத்திய நிலையத்தில் நடை பெற்ற இணையவழி முறைமை ஊடாக ஊடகவியலாளர் சந் திப்பில் கலந்து கொண்டு கருத் துரைக்கையிலேயே அவர் மேற் கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக் கையில்,

"இறக்குமதி செய்யப்படும் உரமானது, அவசியம் என உறு திப்படுத்தப்பட்ட பயிர்ச்செய் கைகளுக்குத் தேவையான உரம் மற்றும் கிருமிநாசினிகளை மூன்று அமைச்சுக்கள் ஊடாக இறக்குமதி செய்ய விவசாயத் துறை அமைச்சு அனுமதி வழங்கியுள்ளது.

அதற்கமைய தேயிலை மற்றும் தெங்கு உட்பட பெருந் தோட்டப் பயிர்ச்செய்கைக்குத் தேவையான உரத்தைப் பெற் றுக்கொள்வதற்கான அறிவு றுத்தல் மற்றும் அனுமதிபத் திரம் வழங்கும் பொறுப்பு பெருந்தோட்ட அமைச்சுக்கு வழங்கப்பட்டுள்ளது.

சுற்றுலாத்துறை சேவை கைத்தொழிலுக்கு அவசியமான பூக்கள் உட்பட்ட அதனுடன் தொடர்புடைய பயிர்ச்செய்கைக் குத் தேவையான அனுமதிப் பத்திரத்தை விநியோகிக்கும் அதிகாரம் சுற்றுலாத்துறை அமைச்சுக்கு வழங்கப்பட் டுள்ளது.

நீர் மூலமான பயிர்ச்செய்கை, இடைவெளியை அடிப்படை யாகக் கொண்ட பயிர்ச்செய்கை ஆகியவற்றுக்குத் தேவையான உரம் இறக்குமதிக்கான அனு மதிப்பத்திரம் விவசாயத்துறை அமைச்சின் ஊடாக விநியோ கிக்கப்படும்.

பெரும்போகத்துக்குத் தேவை யான சேதன பசளை உரம் மற் றும் நனோ நைதரசன் கிருமி நாசினிகள் நாடு தழுவிய ரீதி யில் உள்ள அனைத்து விவசாய திணைக்களங்களுக்கும் பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளன.

ஆகவே, விவசாயிகள் பெரும்போக விவசாய நடவ டிக்கைகளில் ஈடுபடுவது அவசி யமாகும்" - என்றார். (இ)

# வாகன விபத்தில் இளைஞர் மரணம்

மட்டக்களப்பு, ஒக். 30

மட்டக்களப்பு - காத்தான் குடி, குட்வின் சந்தியில் இடம் பெற்ற விபத்தில் இளைஞர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

கார் ஒன்றுடன் மோட்டார் சைக்கிள் மோதி இந்த விபத்து இடம்பெற்றுள்ளது எனப் பொலிஸார் கூறினர்.

இதன்போது படுகாயம டைந்த 20 வயதான இளைஞர் வைத்தியசாலையில் சேர்க்கப் பட்ட நிலையில் உயிரிழந் துள்ளார்.

இந்த விபத்தில் படுகாயம டைந்த மற்றுமொரு இளைஞர் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றார்.

விபத்துடன் தொடர்பு டைய காரின் சாரதி கைதுசெய் யப்பட்டுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

காத்தான்குடி பொலிஸார் விபத்து தொடர்பில் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (இ)

# வெடிபொருட்கள் மீட்பு!

புதுக்குடியிருப்பு, ஒக். 30

முல்லைத்தீவு - புதுக்குடியி ருப்பு, உடையார்கட்டு காட்டுப் பகுதியிலிருந்து ஒரு தொகை வெடிபொருட்கள் பொலிஸ் விசேட அதிரடிப்படையின ரால் மீட்கப்பட்டுள்ளன.

நேற்றுமுன்தினம் இரவு இடம்பெற்ற சோதனை நட வடிக்கைகளையடுத்து குறித்த வெடிபொருட்கள் மீட்கப்பட் டுள்ளன.

இதன்போது, இனங்காணப் படாத 21 குண்டுகள் மற்றும் 60 மில்லிமீற்றர் ரக மோட்டார் குண்டுகள் மீட்கப்பட்டுள்ளன என்று பொலிஸ் ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

குறித்த வெடிபொருட்கள் போர்க்காலத்தில் விடுதலைப் புலிகளால் மறைத்து வைக்கப் பட்டிருக்கலாம் என்று பொலி ஸார் தெரிவித்துள்ளனர். (இ)

# ஐ. எஸ். அமைப்புக்கு எதிராக அறிவிக்காத போரில் தலிபான்!



காபூல், ஒக். 30

ஐ. எஸ். அமைப்புக்கு எதிராக அறிவிக்கப்படாத போரில் ஆப்கானிஸ்தானில் தலிபான்கள் ஈடுபட்டுள்ளனர் என்று கூறப்படுகின்றது.

ஐ. எஸ். அமைப்பினர் அதிகம் உள்ளனர் என்று கூறப்படும் கிழக்கு ஆப்கானிஸ்தானின் ஜலலாபாத் நகரின் - புறநகர் பகுதிகளில் சில நாட்களுக்கு ஒருமுறை சடலங்கள் காணப்படுகின்றன. சிலர் சுடப்பட்டனர் அல்லது தூக்கிலிடப்பட்டனர் அல்லது தலை துண்டிக்கப்பட்டுள்ளனர். அவ்வாறு கொல்லப்பட்டவர்கள் பைகளில் அடைக்கப்பட்டு இஸ்லாமிய அரசின் ஆப்கானிஸ்தான் கிளை உறுப்பினர்கள் கைகளால் எழுதப்பட்ட குறிப்புகளும் உள்ளன.

கொடூரமான - நீதிக்குப் புறம்பான கொலைகளுக்கு யாரும் பொறுப்பேற்கவில்லை. ஆனால், தலிபான்கள்தான் பொறுப்பு என்று பரவலாகக் கருதப்படுகின்றது.

ஆப்கானிஸ்தான் காபூல் விமான நிலையத்தில் கடந்த ஒகஸ்ட் மாதம் ஐ. எஸ். அமைப்பினர் நடத்திய குண்டுத் தாக்குதலில் 150இற்கும் மேற்பட்டோர் கொல்லப்பட்டனர்.

மேலும், இது இரு அமைப்புகளிடையேயும் கடும் போட்டியையும் உருவாக்கியுள்ளது. இந்த குழு மோதலில் ஜலலாபாத் நகர் முன்னணியில் உள்ளது. ஆப்கானிஸ்தான் தலிபான்களின் கட்டுப்பாட்டின் கீழ் வந்துள்ளதைத் தொடர்ந்து பொதுவாக அமைதி நிலவினாலும், ஜலலாபாத் நகரில் தினசரி தலிபான்கள் மீது தாக்குதல்கள் நடத்தப்பட்டு வருகின்றன என்பதும் குறிப்பிடத்தக்கது.

ஐ. எஸ். அமைப்பினர் தலிபான்களை விசுவாச துரோகிகள் என்று குற்றஞ்சாட்டுகிறது. அதே சமயம் தலிபான்கள் ஐ. எஸ். அமைப்பினரை மத வெறி தீவிரவாதிகள் என்று ஒதுக்குகிறார்கள் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)




# 'பேஸ்புக்'கின் தாய்நிறுவனம் 'மெட்டா' என பெயர்மாற்றம்!

நியூயோர்க், ஒக். 30

'பேஸ்புக்' என்ற பெயரின் கீழ் இயங்கும் அனைத்து சமூக வலைத்தளங்களின் தாய் நிறுவனத்தின் பெயர் மெட்டா என்று மாற்றப்பட்டுள்ளது. இது எதிர்காலத்துக்கான மெய்நிகர் உலகத்தை உருவாக்க மெட்டா முயற்சிக்கும் என்று பேஸ்புக் நிறுவனத்தின் தலைமை நிர்வாக அதிகாரி மார்க் சூகர்பெர்க் அறிவித்துள்ளார்.

பேஸ்புக் நிறுவனத்தின் மாநாட்டில் நேற்றுமுன்தினம் மார்க் சூகர்பெர்க் இந்த அறிவிப்பை வெளியிட்டார். பேஸ்புக் நிறுவனத்தின் சார்பில் காணொலி மூலம் நடந்த மாநாட்டில் தலைமை நிர்வாக அதிகாரி மார்க் சூகர்பெர்க் பேசியதாவது:

பேஸ்புக் நிறுவனத்தின் பெயர் மீள் வர்த்தக நாமமாக மாற்றப்பட்டுள்ளது. மெட்டா பிளாட்போர்ம் என்று அழைக்கப்படும் அதாவது சுருக்கமாக மெட்டா என்று அழைக்கப்படும். அதிவேகமாக டிஜிற்றல் உலகத்தை உருவாக்குவதற்கான உறுதிப்பாட்டை மெட்டா வர்ஸ் உருவாக்கும்.

மெட்டா எனும் புதிய பெயர் சமூக ஊடக சேவையை விட மெட்டாவர்ஸில் முதலீடு செய்வதைதான் பிரதிபலிக்கிறது. நெருக்கமான தளங்களில் வாழ்ந்து, சமூகப் பிரச்னைகளுடன் போராடி நாங்கள் நிறைய கற்றுக்கொண்டோம். இப்போது நாம் கற்றுக்கொண்ட அனைத்தையும் எடுத்து அடுத்த அத்தியாயத்தை உருவாக்கவும் உதவவும் நேரம் வந்திருக்கிறது.

மக்களை ஒன்றாக இணைத்தல் எனும் நம்முடைய இலக்குகள் ஒரே மாதிரியானவைதான். நம்முடைய நிறுவனத்தின் செயலிகள், அதன் வர்த்தக பெயர்கள் மாற்றம் செய்யப்படாது. அடுத்த 10 ஆண்டுகளில் மெட்டாவெர்ஸ் 100 கோடி மக்களைச் சென்றடையும். இதன் மூலம் இலட்சக்கணக்கான வேலைவாய்ப்புகளை உருவாக்கும் என நம்புகிறேன் - என்றார்.

மெட்டாவெர்ஸ் என்ற வார்த்தை கிரேக்க வார்த்தையிலிருந்து உருவானது. ஆங்கிலத்தில் (Beyond) என்ற வார்த்தையைக் குறிக்கும். கடந்த 1992ஆம் ஆண்டு நீல் ஸ்ரீபன்சன் என்ற ஆங்கில எழுத்தாளர் "ஸ்னோ கிராஷ்" நாவலில் மக்கள் அனைவரும் மெய்நிகர்(விர்ச்சுவல்) ஹெட்செற், கண்ணாடி போன்றவற்றை அணிந்து இணைந்திருத்தலையும், உரையாடுவதையும், விளையாடுவதையும் குறிப்பிட்டிருந்தார். அதைத் தழுவியே மெட்டாவெர்ஸ் உருவாக்கப்பட்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

# சிங்கப்பூரில் தொற்றாளர் உயர்வு

சிங்கப்பூர், ஒக். 30

சிங்கப்பூரில் அண்மை நாட்களாக வழக்கத்துக்கு மாறாக கொரோனா தொற்று அதிகரித்து வருகிறது.

சிங்கப்பூர் சுகாதாரத்துறை அமைச்சின் தகவலின்படி,

கடந்த சில நாட்களாக வழக்கத்துக்கு மாறாக கொரோனா தொற்று அதிகரித்து வருகிறது. நேற்று காலைவரையான கடந்த 24 மணி நேரத்தில் சிங்கப்பூரில் 5 ஆயிரத்துக்கும் அதிகமானவர்கள் கொரோனாவால் பாதிக்கப்பட்டுள்ளனர். நேற்றுமுன்தினம் மட்டும் 10 பேர் உயிரிழந்தனர். பலியானவர்கள் எண்ணிக்கை 300 ஆக அதிகரித்துள்ளது.

சிங்கப்பூரில் 80வீதத்துக்கும் அதிகமானவர்கள் கொரோனா தடுப்பூசி போட்டுள்ளனர். 12வீதம் பேர் பூஸ்டர் தடுப்பூசி போட்டுக் கொண்டுள்ளனர்" என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

கொரோனா தொற்று அதிகரிப்புக்கான காரணம் குறித்து மருத்துவ நிபுணர்களுடன் ஆலோசித்து வருவதாகவும் சுகாதாரத்துறை தெரிவித்துள்ளது. (ஐ)



# மிகப்பழைய அரண்மனையின் ஒளிப்படங்கள் வெளியாகின!

ஜெரிக்கோ, ஒக். 30

உலகின் மிகப்பெரிய பளிங்கு தரைத்தளம் கொண்ட அரண்மனையை பலஸ்தீன அதிகாரிகள் வெளியிட்டுள்ளனர். இது மேற்கு கரையின் ஜெரிகோ நகரில் அமைந்துள்ளது.

சுமார் ஆயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்ட ஹிஷாம் அரண்மனையை மீட்டெடுக்க ஐந்து ஆண்டுகள் தேவைப்பட்டன. சுமார் 12 மில்லியன் டொலர்கள் - நம் நாட்டு மதிப்பில் சுமார் 240 கோடி ரூபாய் செலவில் மீட்டெடுக்கப்பட்டுள்ளது.

ஹிஷாம் அரண்மனை 19ஆம் நூற்றாண்டில் கண்டுபிடிக்கப்பட்டது. 2016ஆம் ஆண்டு ஜப்பானின் நிதியுதவியுடன் மறுசீரமைப்பு பணிகள் தொடங்கின. இந்த அரண்மனை சாக்கடலுக்கு அருகில் சுமார் 150 ஏக்கர் பரப்பில் உள்ளது.

ஹிஷாம் அரண்மனை என்பது உம்மயாத் வம்சத்தின் இஸ்லாமிய பாலைவன கோட்டையாகும். இது கி.பி. 660 முதல் 750 ஆண்டுவரை நீடித்திருந்தது என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

# ஆசியாவின் மிகப்பெரிய போதை கடத்தல் முறியடிப்பு


வியஞ்சான், ஒக். 30

ஆசியாவிலேயே இதுவரை பதிவு செய்யப்பட்ட மிகப்பெரிய போதைப்பொருள்கள் லாவோஸ் பொலிஸாரால் கைப்பற்றப்பட் டுள்ளன

5.5 கோடி மெத்தம்பேட்டமைன் மாத்திரைகள் மற்றும் 1.5 தொன்னுக்கும் அதிகமான கிறிஸ்டல் மெத் போதைப் பொருள்கள் கைப்பற்றப்பட்டன என்று ஐக்கிய நாடுகள் அமைப்பின் குற்றப் பிரிவு முகமை கூறியுள்ளது.

இது ஆசியாவில் இதுவரை கைப்பற்றப்பட்டதிலேயே மிகப் பெரிய அளவிலான போதை மருந்து குவியல் என்று ஐக்கிய நாடுகள் அமைப்பு கூறியுள்ளது. (ஐ)

# சிறையிலிருந்து தப்பியவர் வறுமை தாங்காமல் சரண்!



சிட்னி, ஒக். 30

அவுஸ்திரேலியாவில் 29 ஆண்டுகளுக்கு முன் சிறையில் இருந்து தப்பித்த குற்றவாளி கொரோனா ஊரடங்கால் வருமானம் இன்றி வறுமையில் வாடியதால் பொலிஸில் சரணடைந்தார்.

அவுஸ்திரேலியாவின் சிட்னி நகரை சேர்ந்த டார்கோ டேசிக் என்பவர், கஞ்சா செடி வளர்த்த குற்றத்திற்காக 1992இல் கைது செய்யப்பட்டார். இவருக்கு 33 மாதங்கள் சிறைத் தண்டனை விதித்தது நீதிமன்றம்.

ஆனால், சிறையில் 19 மாதங்கள் கழித்த அவர் அங்கிருந்து தப்பித்தார். சிட்னியின் வடக்கு புறநகர பகுதியில் மறைந்து வாழ்ந்து வந்தார்.

இந்நிலையில், கொரோனா ஊரடங்கால் வறுமையில் வாடிய அவர் பட்டினியை எதிர்கொண்டார். இதையடுத்து சிறை சென்றாலாவது 3 வேளை உணவு கிடைக்கும் என்பதால் டார்கோ, பொலிஸ் நிலையம் சென்று சரணடைந்தார். அத்துடன், தனது மிகுதி சிறை தண்டனையையும் அனுபவிக்க வுள்ளதாக அவர் கூறினார்.

இதையடுத்து நீதிமன்றில் முற்படுத்தப்பட்ட அவருக்கு மீதி 14 மாத சிறைத் தண்டனையுடன், சிறையிலிருந்து தப்பித்தமைக்காக மேலும் இரு மாதங்களும் சேர்த்து 16 மாதம் சிறைத் தண்டனை அனுபவிக்க நீதிபதி உத்தரவிட்டார். (ஐ)

# பாடசாலை மாணவர்கள் 4 பேருக்கு கொரோனா

## 90 பேர் வீடுகளில் தனிமைப்படுத்தல்

அநுராதபுரம், ஒக். 30

இலங்கையில் பாடசாலைகள் ஆரம்பிக்கப்பட்டு இயங்கி வரும் நிலையில், அநுராதபுரம் - பதவி கொங்கெட்டியாவ பிரதேசத்தில் உள்ள பாடசாலையில் பயிலும் மூன்று வகுப்புகளைச் சேர்ந்த நான்கு மாணவர்களுக்குக் கொரோனா வைரஸ் தொற்றியுள்ளமை உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

இதையடுத்து சுமார் 90 மாணவர்கள் அவர்களின் வீடுகளில் தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர் என்று சுகாதாரத் துறையினர் தெரிவித்துள்ளனர்.

கொங்கெட்டியாவ பாடசாலையில் 2, 3 மற்றும் 4ஆம் தரங்களில் கல்வி பயிலும் நான்கு மாணவர்களுக்கே கொரோனாத் தொற்று ஏற்பட்டுள்ளது.

இதன் காரணமாக மாணவர்கள் எவரும் அந்தப் பாடசாலைக்குச் சமுகமளிக்கவில்லை எனவும், ஆசிரியர்கள் மாத்திரமே கடமைக்குச் செல்கின்றனர் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.(இ)

# முல்லைத்தீவில் இராணுவ வாகனத்துடன் விபத்துக்குள்ளான இளைஞர் உயிரிழப்பு

முல்லைத்தீவு, ஒக். 30

முல்லைத்தீவு - புதுக்குடியிருப்பு நகரில் நிறுத்தப்பட்டிருந்த இராணுவத்தினரின் வாகனத்துடன் மோதி இளைஞர் ஒருவர் படுகாயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு , சிகிச்சை பயனின்றி உயிரிழந்தார்.

புதுக்குடியிருப்பு - வேணாவில் பகுதியை சேர்ந்த மாரிமுத்து பவிசாந்த் (வயது21) என்ற இளைஞரே சம்பவத்தில் உயிரிழந்தார்.

நேற்றுமுன்தினம் இரவு மின்சாரம் தடைப்பட்டிருந்ததுடன், மழையும் பெய்து கொண்டிருந்த நிலையில் மோட்டார் சைக்கிளில் சென்ற இளைஞர் கட்டுப்பாட்டை இழந்து வீதியில் நிறுத்தப்பட்டிருந்த இராணுவ வாகனத்துடன் மோதி விபத்துக்குள்ளானார் என்று கூறப்படுகின்றது.

சம்பவம் தொடர்பாக புதுக்குடியிருப்பு பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (இ)



தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரியின் பரிசளிப்பு விழாவும் மகாஜன சிற்பி தெ.து. ஜயரத்தினம் நினைவுதினமும் நேற்று வெள்ளிக்கிழமை பாடசாலை மண்டபத்தில் மெய்நிகர் வழியில் இடம்பெற்றது.

# பயணத்தடை முற்றாக நீங்கினாலும் ஆபத்து இன்னும் குறையவில்லை!

## மக்களே மிக அவதானம் என்கிறார் சுதர்ஷினி

கொழும்பு, ஒக். 30

**“நாடு முழுவதிலும் அமுலில் இருந்த சகல பயணத்தடைகளும் நீக்கப்பட்டாலும் கொரோனாவின் ஆபத்து இன்னமும் குறையவில்லை. எனவே, மக்கள் அனைவரும் புதிய சுகாதார விதிமுறைகளுக்கமைய மிகவும் அவதானத்துடன் செயல்பட வேண்டும்.”**

- இவ்வாறு இராஜாங்க அமைச்சரான விசேட வைத்திய நிபுணர் சுதர்ஷினி பெர்னாண்டோபுள்ளே ஊடகங்களிடம் தெரிவித்தார்.அவர் மேலும் தெரிவித்ததாவது:-

“நாட்டில் நாளாந்தம் அடையாளம் காணப்படும் கொரோனா நோயாளர்கள் மற்றும் இறப்புகளின் எண்ணிக்கையில் குறைவு ஏற்பட்டாலும், ஆபத்து இன்னமும் குறையவில்லை. டெல்டா பிளஸ் பிறழ்வு நாட்டுக்குள் நுழையும் அபாயமுள்ளது.

ஐக்கிய இராச்சியம், அமெரிக்கா மற்றும் இஸ்ரேல் ஆகிய நாடுகளில் தடுப்பூசித் திட்டம் வெற்றிகரமாக மேற்கொள்ளப்பட்டபோதும், டெல்டா பிளஸ் பிறழ்வால் ஆபத்து மீண்டும் அதிகரித்துள்ளது. இலங்கையும் அத்தகைய ஆபத்திலேயே உள்ளது” - என்றார். (இ)

# ஈஸ்டர் தாக்குதலால் பாதிக்கப்பட்டோருக்கு அரசு என்ற ரீதியில் நீதியை வழங்குவோம்

## பிரதமர் மஹிந்த வாக்குறுதி



கொழும்பு, ஒக். 30

“உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதலில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு அரசால் நிறைவேற்ற வேண்டிய பொறுப்பை நாம் நிச்சயமாக நிறைவேற்றுவோம்.”

- இவ்வாறு பிரதமர் மஹிந்த ராஜபக்ச, கொட்டாஞ்சேனை புனித லுசியா பேராலயத்தில் வைத்து உறுதியளித்துள்ளார்

கொட்டாஞ்சேனை புனித அந்தோனியார் தேவாலயத்தின் மீது நடத்தப்பட்ட உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதலில் பாதிக்கப்பட்டவர்களுக்கு புதிய வீடுகளைப் பெற்றுக் கொடுக்கும் வேலைத்திட்டத்தின் முதலாவது கட்டத்தில் இணைந்து கொண்டிருந்த போதே அவர் இவ்வாறு உறுதியளித்துள்ளார்.

இதன்போது பிரதமர் மேலும் கூறியவை வருமாறு:-

“அன்று கொட்டாஞ்சேனை குண்டு தாக்குதலில் பாதிக்கப்பட்ட மக்களுக்காக அரசால் நிறைவேற்ற வேண்டிய பொறுப்பை நாம் நிச்சயம் நிறைவேற்றுவோம். நம்மால் தாமதிக்கப்பட்டிருப்பினும், அம்மக்களுக்கான பொறுப்பை நிச்சயமாக நிறைவேற்ற நாம் தயார்.

ஏனெனில், அவர்கள் எத்தகைய நிலையில் காணப்படுவார்கள் என்பதை நாம் அறிவோம். இதேவேளை, எதிர்காலத்தில் இதுபோன்ற சம்பவங்கள் இடம்பெறாதிருப்பதற்கு அரசு நடவடிக்கை எடுக்கும் என்பதையும் நினைவுபடுத்த விரும்புகிறேன்.

மக்களுக்கு நிம்மதியாய் வாழவும் சுதந்திரமாக பயணிக்கவும், தமது மதத்தை பின்பற்றவும் கோவிலுக்கு, பள்ளிக்கு, விகாரைக்கு சென்று வருவதற்கான உரிமை இருக்க வேண்டும்.

அந்த உரிமையைப் பாதுகாப்பது போன்றே மத சுதந்திரத்தை அனுபவிக்க, அவர்கள் பாதுகாக்கப்பட வேண்டும் மற்றும் அவர்களின் மதத்தை பின்பற்ற அனுமதிக்க வேண்டும். அவ்வாறாயின் அதற்கான அனைத்து நடவடிக்கைகளையும் முன்னெடுக்க வேண்டியது அரசின் பொறுப்பாகும்.

அதனை எமது கடமையாக நாம் கருதுகின்றோம். அதனால் இம்மக்களுக்காக எமது கடமையை நிறைவேற்றுவதற்கு போன்றே இதில் கலந்து கொள்ள கிடைத்தமை குறித்து நான் மகிழ்ச்சியடைகிறேன்.

குறிப்பாக பேராயர் மெல்கம் ரஞ்சித் ஆண்டகையைச் சந்திக்கும் அனைத்து சந்தர்ப்பங்களிலும் அவர் நினைவுபடுத்தும் ஒரு விடயம், அன்று உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதலில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு ஓர் அரசு என்ற ரீதியில் பொறுப்பை நிறைவேற்ற வேண்டும் என்பதாகும்.

எம்மால் நிறைவேற்றப்பட வேண்டிய பொறுப்பை நாம் நிச்சயம் நிறைவேற்றுவோம் என்பதை நான் மிகத் தெளிவாக கூற விரும்புகிறேன்.

அதேபோன்று அவ்வாறான தொரு நிலைமை எதிர்காலத்தில் நிகழாதிருப்பதனை உறுதிசெய்வது எமது பொறுப்பாகும். அதற்காக நாம் நடவடிக்கை மேற்கொண்டு வருகிறோம்.

அரசைப் பொறுப்பேற்றவுடன் வீடற்றவர்களுக்கு வீடுகளைப் பெற்றுக்கொடுப்பதும் எமது கடமையாகும். அதனால் அந்தப் பயனாளிகளுக்கு வீடுகளைப் பெற்றுக் கொடுக்கும் வேலைத்திட்டத்தையும் நாம் செயற்படுத்துவோம் என்பதை நினைவு படுத்துகிறேன்.

நாம் ஓர் அரசு என்ற ரீதியில் நிறைவேற்ற வேண்டிய கடமைகளை நிறைவேற்றுவோம். இந்த நாட்டில் பயங்கரவாதத்தை இல்லாதொழிக்க நடவடிக்கை எடுத்தோம். அன்றைய காலகட்டத்தில் சுமார் 27 முதல் 30 வருடங்களாக இந்த நாட்டில் பயங்கரவாதத்தால் மக்கள் எவ்வளவு பாதிக்கப்பட்டார்கள் என்பதை நாம் அறிவோம். எனவே, ஆட்சிக்கு வந்த மூன்றாண்டுகளில் பயங்கரவாதத்தை முற்றாக ஒழிக்க முடிந்தது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறோம்.

எனவே, எதிர்காலத்தில் பயங்கரவாதத்துக்கு இடமளிக்காமல் சுதந்திரமாக வாழவும், மதத்தை பின்பற்றவும் நாம் நடவடிக்கை எடுப்போம் என்பதை நாட்டு மக்களுக்கு நினைவூட்ட வேண்டும். பாதிக்கப்பட்டவர்களுக்கான இழப்பீடுகளையும், அவர்களுக்கான பிற கடமைகளையும் நிறைவேற்றுவது எமது பொறுப்பாகும். எனவே, அதனை எவ்வித சமரசமும் இன்றி நிறைவேற்றுவோம் என்பதையும் நினைவூட்டுகின்றேன்.

ஒரு நாட்டில் உள்ள அனைத்து மக்களும் மத, இன பாகுபாடின்றி செயல்படுவதை உறுதி செய்ய வேண்டும். எனவே இத்தருணத்தில் உங்களுக்கு ஏதாவது வழங்கப்பட வேண்டியிருப்பின், அதை வழங்குவது எங்கள் பொறுப்பு.

இந்தத் தேசத்துக்காக நாம் அனைவரும் ஒன்றிணைந்து உழைக்க வேண்டும். இன, மத பேதமின்றி வாழ்வதற்கான பின்னணி ஏற்படுத்தப்பட வேண்டும். அதேபோன்று நாட்டின் அபிவிருத்திக்காகவும் நாம் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்.

இன்று வடக்கு, கிழக்கு, தெற்கு, மேற்கு என்ற பாகுபாடின்றி நாடு பூராவும் சமமாக எமது அபிவிருத்தி வேலைத் திட்டத்தை முன்னெடுத்து வருகின்றோம் என்பதை புதியதாக கூற வேண்டியதில்லை. அந்த அபிவிருத்தியுடன் நாட்டு மக்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்தவும் நடவடிக்கை எடுப்போம். எங்கள் கடமையைச் செய்ய நாங்கள் எப்போதும் தயாராக இருக்கிறோம் என்பதை நினைவூட்டுவதுடன் உங்கள் அனைவருக்கும் வளமான எதிர்காலம் அமைய வாழ்த்துக்களை தெரிவித்துக்கொள்கிறேன்” - என்றார். (இ)

## காணாமல்போன பொலிஸ் அதிகாரி நீர்த்தாங்கியிலிருந்து சடலமாக மீட்பு

கம்பளை, ஒக். 30

ஒன்றரை மாதங்களுக்கு முன்னர் காணாமல்போன பொலிஸ் அதிகாரியான எஸ். இளங்கோவன், கம்பளை ஆதார வைத்திய சாலைக்கு நீர்வழங்கும் சுமார் 40 அடி உயரமான நீர்த்தாங்கியில் இருந்து சடலமாக நேற்று மீட்கப்பட்டார்.

பூண்டுலோயாவை வசிப்பிடமாகக் கொண்ட இவர், கொத்மலை பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றினார். இந்நிலையில், நெஞ்சு வலி காரணமாக செப்ரெம்பர் மாதம் 8ஆம் திகதியன்று கம்பளை ஆதார வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார்.

அவர் மறுநாள் காணாமல்போனார். அன்றிலிருந்து நேற்று வரை யிலும் அவரது மனைவி உட்பட உறவினர்கள் அவரைத் தேடிக் கொண்டே இருந்தனர். இந்நிலையில், கம்பளை ஆதார வைத்திய சாலையின் வார்ட்டுகளுக்கு விநியோகிக்கப்படும் குடிதண்ணீரில் ஒரு வகையான மணம் வீசுகின்றது என நிர்வாகத்தின் கவனத்துக்குக் கொண்டு வரப்பட்டது. அதையடுத்து, மேற்கொள்ளப்பட்ட தேடுதலின்போது, நீர்த்தாங்கியில் சடலம் மிதப்பது கண்டறியப்பட்டது. (இ)

## மரண அறிவித்தல்

பிறப்பு
31 - 10 - 1941



இறப்பு
28 - 10 - 2021

### திருமதி இராஜேஸ்வரி சோமசேகரன்

மானிப்பாய் பேரம்பலம் அவெனியூ சங்குவேலியைப் பிறப்பிடமாகவும், கொழும்பை வதிவிடமாகவும் கொண்ட இராஜேஸ்வரி சோமசேகரன் அவர்கள் 28-10-2021 வியாழக்கிழமை அன்று கொழும்பில் காலமானார்.

அன்னார், காலஞ்சென்றவர்களான பேரம்பலம்(ஆசிரியர்) - நாகரத்தினம் தம்பதியரின் புதல்வியும், வேலணை மேற்கைச் சேர்ந்த காலஞ்சென்றவர்களான வைரமுத்து(செல்லையா வாத்தியார்-தலைமை ஆசிரியர்) மனோன்மணிஅம்மா தம்பதியரின் மூத்த மருமகளும்,காலஞ்சென்ற வைரமுத்து சோமசேகரன் (ஓய்வுநிலை பிரதம எழுது வினைஞர்) அவர்களின் அன்பு மனைவியும், வைதேகி(நோர்வே), மைக்ரோ பீசி சிஸ்டம் இயக்குனர்களான ககனாந்தா, குகனானந்தா ஆகியோரின் தாயாரும், பிரபாகரன் (நோர்வே), வினோதா, கார்த்திகா ஆகியோரின் மாமியாரும், பரமேஸ்வரி, காலஞ்சென்றவர்களான யுகவதி, மகேஸ்வரி மற்றும் பரஞ்சோதிநாதன், மங்கையற்கரசி ஆகியோரின் சகோதரியும், காலஞ்சென்ற சண்முகரட்ணம் மற்றும் பொன்மயிலாம்பிகை, காலஞ்சென்ற பூரணானந்தம்பிள்ளை மற்றும் திருநிலை நாயகி(கனடா), செல்வேந்திரன்(கனடா), விஜயேந்திரன் (லண்டன்), காலஞ்சென்ற பாலேந்திரன் மற்றும் கலாமணி, காலஞ்சென்றவர்களான சண்முகரட்ணம், பாலேந்திரன் மற்றும் அமிர்தலிங்கம், உமாதேவி, விஜயசுந்தரம் ஆகியோரின் மைத்துனியும், பஜனேஸ்வரி(பிரான்ஸ்), மகாலிங்கம், காலஞ்சென்ற இராஜேஸ்வரி மற்றும் காந்தமூர்த்தி (கனடா), காலஞ்சென்ற இராஜேஸ்வரி மற்றும் மதிவதனி(லண்டன்), பிரியதர்ஷினி(பிரான்ஸ்), லோகநாதன் (முஆவு) ஆகியோரின் சகலியும்,கருணிகா(நோர்வே), தனிஷ்கா, யாதுரா, பிரதன் ஆகியோரின் பேத்தியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் அவரது இல்லத்தில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு, 31.10.2021 ஞாயிற்றுக்கிழமை அன்று மு.ப 08:00 மணியளவில் பொரளை ஜெயரட்ண மலர்ச்சாலையில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு அதனைத்தொடர்ந்து மு.ப 10:00 மணியளவில் இறுதிக்கிரியை நடைபெற்று பின்னர் தகனம் செய்யப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

வீட்டு முகவரி:
இல.115/8, டபிள்யூ ஏ சில்வா
மாவத்தை, வெள்ளவத்தை,
கொழும்பு

தொடர்புகளுக்கு:
செல்வேந்திரன் (மைத்துனர்)
+16479848446

தகவல்:
குடும்பத்தினர்.

# பொருளாதார வீழ்ச்சிக்கு குடும்ப ஆட்சியே காரணம்

### சிறீதரன் எம்.பி. குற்றச்சாட்டு



**கிளிநொச்சி, ஒக். 30**

**"ராஜபக்ஷ அரசின் குடும்ப ஆட்சி காரணமாகவே இலங்கை குட்டிச்சுவராகி பொருளாதாரத்தில் தாழ்ந்து போயுள்ளது."**

**- இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ்ப்பாணம் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் தெரிவித்தார்.**

அவர் மேலும் தெரிவிக்கையில்,

"ஆசிரியர்களின் கல்வித்தரம், அதிபர்களின் தரம் என்பவற்றுக்கு ஏற்ப சம்பளம் வழங்கப்படாமல் இன்று ஒரு போராட்டம் தொடர்கின்றது.

ராஜபக்ஷ குடும்ப ஆட்சியின் காரணமாகவே இலங்கை குட்டிச்சுவராகி பொருளாதாரத்தில் தாழ்ந்து போயுள்ளது. இதுதான் இன்று விவசாயிகளுக்கும் நடந்துள்ளது.

ஒரு இரவிலேயே அனைத்து விவசாயிகளையும் இயற்கை விவசாயத்துக்கு மாறுங்கள் என்று சொன்னால் அவர்கள் எவ்வாறு மாறமுடியும்?

குறிப்பாக உலகில் இயற்கை விவசாயம் இயற்கையான உணவு மனிதனுக்கு முக்கியமானது. இது உலக அரங்கில் தற்போது வளர்ந்து வருகின்றது.

இது இலங்கையிலும் தற்போது வளர்ந்து வருகின்றது. அதற்காக நாங்கள் குரல் கொடுத்திருக்கின்றோம்" - என்றார். (இ)

## ராஜபக்ஷ அரசுக்கு கைகொடுத்த சீனா இப்போது கன்னத்தில் அறைகின்றது

### ஐக்கிய தேசிய கட்சி தெரிவிப்பு



கொழும்பு, ஒக். 30

ராஜபக்ஷக்கள் ஆட்சிக்கு வருவதற்கு கைகொடுத்த சீனா, இப்போது அவர்களின் கன்னத்தில் அறைய ஆரம்பித்துள்ளது என்று ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச்செயலாளர் பாலித ரங்கே பண்டார தெரிவித்துள்ளார்.

இலங்கை அரச வங்கியான மக்கள் வங்கி, சீனத் தூதரகத்தால் கறுப்புப் பட்டியலில் இணைக்கப்பட்டுள்ளமை தொடர்பிலேயே பாலித ரங்கே பண்டார எம்.பி. இவ்வாறு கூறியுள்ளார்.

இந்த அரசைக் கொண்டுவருவதற்காக சீனாவின் ஒத்துழைப்பை வழங்கியதுடன், அதற்கு பிரதி உபகாரமாக இலங்கையில் தமக்குத் தேவையான இடங்களைப் பெற்றுக் கொள்ள அவர்கள் நடவடிக்கை எடுத்துள்ளனர் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இந்நிலையில், தற்போது சீனத் தூதரகம் மக்கள் வங்கியைக் கறுப்புப் பட்டியலில் சேர்த்தமையானது சீன அரசு அல்லது சர்வதேசம், ராஜபக்ஷ அரசாங்கத்தை கறுப்புப் பட்டியல் சேர்ப்பதற்கு சமமானது என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (இ)

## வடமராட்சி நபர் சடலமாக மீட்பு!

கிளிநொச்சி, ஒக். 30

வடமராட்சி கிழக்கு மாமுனையை சேர்ந்த இளம் குடும்பஸ்தர் பளையிலுள்ள தனது சகோதரியின் வீட்டில் சடலமாக மீட்கப்பட்டார்.

ஆறுமுகம் ஞானக்குமார் எனும் 38 வயதுடைய மூன்று பிள்ளைகளின் தந்தையே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டவராவார்.

நேற்று முன்தினம், தனது சகோதரியின் வீட்டுக்கு சென்றவர் நேற்று காலை சடலமாக காணப்பட்ட நிலையில் பளை பொலிஸாருக்கு அறிவிக்கப்பட்டது. பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருவது டன், சடலத்தை உடல்கூற்றுப் பகுப்பாய்வுக்கு உட்படுத்தவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (ஐ)



## பழைய விலையில் பால்மா; முண்டியடித்தனர் மக்கள்!

காரைதீவு, ஒக். 30

கிழக்கு மாகாண மக்களுக்கென 2 கோடி ரூபாய்க்கு பால்மா கொள்வனவு செய்யப்பட்டு, சகல கூட்டுறவுச் சங்கங்களினூடாக விநியோகிக்க கிழக்கு மாகாண கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளர் எ.எல்.எம்.அஸ்மியின் நடவடிக்கை எடுத்திருந்தார். அதன்படி, 400 கிராம் பால்மா 380 ரூபாய்க்கு (400 கிராம் பால்மாவின் புதிய விலை 480 ரூபாய் ஆகும்) விநியோகிக்கப்பட்டு வருகின்றது.

அதன்படி, காரைதீவு ப.நோ.கூ.சங்கத்துக்கு 1,340 பைக்கற் 400 கிராம் பால்மாவும், 53 பைக்கற் 1 கிலோகிராம் பால்மா பக்கெட்டும் கொள்வனவு செய்ததாக அச்சங்கத் தலைவர் வை.கோபிகாந் தெரிவித்தார்.

அத்தோடு, 3 கிலோகிராம் சீனி, 400 கிராம் அங்கர் பால்மா, 200 கிராம் தேயிலை, 1 உப்பு பைக்கற் அடங்கிய 1000 ரூபாய் பெறுமதியான உலருணவுப் பொதியை வழங்கவும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது.

இது மக்கள் மத்தியில் பலத்த வரவேற்பைப் பெற்றதுடன், இப்போதியைப் பெற மக்கள் முண்டியடித்தனர். (இ)

## தடுப்பூசி...

அத்துடன், பொது இடங்கள், கடைகள், உணவகங்கள் மற்றும் பிற பொது இடங்களில் தடுப்பூசி அட்டையை கட்டாயம் ஆக்குவதற்கான சாத்தியக்கூறுகள் குறித்தும் ஆராயப்பட்டுள்ளன.

கோவிட் - 19 ஒழிப்பு செயலணியின் கூட்டம் நேற்று வெள்ளிக்கிழமை ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தலைமையில் மெய்நிகர் வழியில் இடம்பெற்றது. இந்தக் கூட்டத்தில் முக்கியமான முடிவுகள் பல எடுக்கப்பட்டன.

இதன்படி,

தற்போது நீடிக்கும் மாகாணங்களுக்கு இடையேயான பயணக் கட்டுப்பாடுகள் நாளை அதிகாலை 4 மணியுடன் நீக்கப்படுகின்றன என்று அறிவிக்கப்பட்டது.

கோவிட்-19 தொற்றுநோய் காரணமாக, பாடசாலை மாணவர்களின் கல்வி கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளது. இது தொடர்பில் அதிபர்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்தி பாடசாலைகளை ஆரம்பிக்கும் செயல்பாடுகளை துரிதமாக நடைமுறைப்படுத்துமாறு ஜனாதிபதி தெரிவித்தார்.

மேலும், பல்கலைக்கழகங்களின் முதலாம் வருட மாணவர்களுக்கான கல்வி நடவடிக்கைகளை துரிதமாக ஆரம்பிக்குமாறு சுகாதார மற்றும் கல்வி அதிகாரிகளுக்கு ஜனாதிபதி பணிப்புரை விடுத்தார்.

பொது இடங்கள், கடைகள், உணவகங்கள் மற்றும் பிற பொது இடங்களில் தடுப்பூசி அட்டையை கட்டாயமாக்குவதற்கான சாத்தியக்கூறுகளை உடனடியாக ஆராயவும் முடிவு செய்யப்பட்டது.

தடுப்பூசி பெறாதவர்களுக்கு எதிராக சட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கு தனிமைப்படுத்தல் சட்டத்தின் கீழ் விதிகள் உள்ளமையை சுட்டிக்காட்டி, சட்டமா அதிபரின் ஆலோசனையை நாடியுள்ளதாக சுகாதார அதிகாரிகள் தெரிவித்தனர்.

கோவிட் -19 நோயாளிகளின் இறப்பு வீதம் மற்றும் பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கையை குறைப்பதற்கான தடுப்பூசி திட்டத்தை மேலும் வலுப்படுத்த வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்திய ஜனாதிபதி, தொலைதூர பிரதேசங்களில் தடுப்பூசி போடுவதற்காக நடமாடும் வாகனங்களை பயன்படுத்துவதன் மூலம் அனைத்து மக்களுக்கும் தடுப்பூசி போடுவதற்கான வாய்ப்பை வழங்க வேண்டும் என்று அதிகாரிகளை அறிவுறுத்தினார்.

மேலும், தடுப்பூசி தொடர்பில் பல்வேறு குழுக்களால் பொய் பிரசாரம் செய்யப்படுகின்றன என்று இதன்போது அதிகாரிகள் ஜனாதிபதிக்கு சுட்டிக்காட்டினர்.

இதையடுத்து தடுப்பூசி தொடர்பில் பொதுமக்களை அச்சுறுத்தும் வகையில் சமூக ஊடகங்கள் உட்பட பல்வேறு ஒழுங்கமைக்கப்பட்ட குழுக்களை உடனடியாக அவதானிக்குமாறு ஜனாதிபதி பொலிஸ் மா அதிபருக்கு பணிப்புரை விடுத்துள்ளார். (ஐ)

## யாழில்...

தொற்று நிலைமையானது சற்று குறைவடைந்துள்ள நிலையே காணப்படுகின்றது .

இருந்தபோதிலும் நேற்று முன்தினம் கிடைத்த பி.சி.ஆர் பரிசோதனை அடிப்படையில் யாழ்.மாவட்டத்தில் 63 பேருக்கு தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

யாழ்.மாவட்டத்தில் நேற்று வரை 17 ஆயிரத்து 664 பேர் கொரோனா தொற்றுக்குள்ளாகியுள்ளனர். நேற்று வரை 452 கொரோனா உயிரிழப்புக்கள் பதிவாகியுள்ளன. தொற்றிலிருந்து குணமடைந்தோரின் எண்ணிக்கை கணிசமாக உயர்வடைந்து காணப்படுகின்றது.

நேற்று வரை கொரோனா தொற்றுக்குள்ளாகி 17,500 பேர் குணமடைந்துள்ளனர்.

மேலும் தற்போது இயல்பு நிலைமை வழமைக்கு திரும்பியுள்ளது தனியார் கல்வி நிலையங்கள் மற்றும் ஏனைய வழிபாட்டு தலங்களுக்குமான அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

ஆகவே, மக்கள் சற்று அவதானமாக தொடர்ந்தும் சுகாதார நடைமுறையை பின்பற்றி செயற்படுவது அவசியமாகும்.

ஆரம்பப் பிரிவு பாடசாலைகள் ஆரம்பமாகி நடைபெற்று வருகின்றன. ஆரம்பப் பிரிவு பாடசாலைகள் யாழ். மாவட்டத்தில் ஆரம்பித்தபோது மாணவர்கள் எண்ணிக்கை சற்று குறைந்து காணப்பட்டது. எனினும் தற்போது அதிகரித்து காணப்படுகின்றது. எதிர்வரும் காலத்தில் கல்வி நடவடிக்கைகளை முன்னெடுத்துச் செல்வதற்கு ஏதுவாக விடயங்கள் சம்பந்தப்பட்ட தரப்பினரால் முன்னெடுக்கப்படுன்றது.

மேலும் மாகாணங்களுக்கிடையிலான போக்குவரத்து கட்டுப்பாடும் எதிர்வரும் 31ஆம் திகதி நீக்கப்படும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

மேலும், அத்தியாவசிய உணவுப் பொருட்கள் மற்றும் எரிபொருட்கள் போன்றவை பொதுமக்களுக்கு தடையின்றி கிடைப்பதற்குரிய ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

அதேபோல மக்களின் நடமாட்டம் மற்றும் ஏனைய செயற்பாடுகளும் சுகாதார வழிமுறைகளைப் போன்ற அங்கீகரிக்கப்பட்ட அளவுக்கு உட்பட்டு செயற்படவேண்டும்.

பொதுமக்கள் சுகாதாரநடைமுறையை பேணி கட்டுப்பாடுகளுடன் தமது அன்றாட செயற்பாடுகளை தொடர்ந்து முன்னெடுக்க வேண்டும்-என்றார். (அ-03)

## எல்லை...

தலைவரும், பாராளுமன்ற உறுப்பினருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவித்துள்ளார்.

வவுனியா வடக்கில் இன விகிதாசரத்தை மாற்றியமைக்கும் வகையில் இடம்பெறும் சிங்கள குடியேற்றத்திற்கு எதிர்ப்பு தெரிவித்து நேற்று வவுனியா, பழைய பேருந்து நிலையம் முன்பாக நடத்தப்பட்ட போராட்டத்திலேயே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

எல்லை நிர்ணயம் என்ற பெயரில் வவுனியா மாவட்டத்தின் இன விகிதாசாரத்தை மாற்றியமைக்க அரசாங்கம் சதி முயற்சிகளை எடுத்துள்ளது. இது தொடர்பில் எமக்கு தெரியவந்த நிலையில் கடந்த வாரம் பாராளுமன்றத்தில் சம்பந்தப்பட்ட அமைச்சர் சமல் ராஜபக்ஷவிடம் மகஜர் ஒன்றை கையளித்து இருந்தோம். அந்த நடவடிக்கையை உடனடியாக நிறுத்த வேண்டும் எனவும், அவசரமாக அமைச்சரை சந்திக்க வேண்டும் எனவும் அதில் கேட்டிருந்தோம்.

பாராளுமன்றத்தில் அங்கத்துவம் வகிக்கும் வடக்கு, கிழக்கை பிரதிநிதித்துவப்படுத்தும் தமிழ் கட்சிகளும் அந்த கடிதத்தில் கையொப்பம் இட்டார்கள். அதற்கமைய சந்திப்புக்கான நேரத்தை ஒதுக்கியிருந்தும்கூட, கடைசி நேரத்தில் அந்த சந்திப்பு இரத்து செய்யப்பட்டு இது வரை அந்த சந்திப்புக்குரிய நேரம், நாள் ஒதுக்கப்படாது அரசாங்கம் நழுவிப் போகின்றது. இதனால் நாங்கள் எதிர்ப்பு போராட்டத்தை தொடங்கியிருக்கின்றோம்.

தமிழ் பிரதேசங்களை சிங்கள மயமாக்கல் என்ற ரீதியில் இந்த நடவடிக்கை மட்டுமல்ல, மட்டக்களப்பு மாவட்டத்தில் மேய்ச்சல் தரை காணிகளை அபகரித்து சிங்கள எல்லைக் பிரதேசங்கள் மற்றும் பொலநறுவை மாவட்டம் என்பவற்றுடன் சேர்த்துக் கொள்ளும் முயற்சிகள் இடம்பெறுகின்றன. ஆகவே, திட்டமிட்ட வகையில் எல்லா கோணங்களிலும் தமிழர்களை நசுக்கி தமிழர்கள் தொடர்ந்தும் இந்த தீவில் ஒரு தேசமாக வாழ முடியாத நிலையை உருவாக்கும் நோக்கத்துடன் அதாவது ஒரு இன வழிப்பு செய்யும் நோக்கோடு இலங்கை அரசு செயல்படுகின்றது.

இந்த யதார்த்தத்தை உலகிற்கு சுட்டிக்காட்ட வேண்டி ஒரு நிலையில் நாம் இருக்கின்றோம். இந்த போராட்டத்தை நடத்துவதன் மூலம் புலம்பெயர் தமிழ் மக்களுக்கும் அவர்கள் சார்ந்திருக்கும் நாடுகளின் தலைமைகளுக்கும் இந்த விடயத்தை தெளிவாக பதிவு செய்ய விரும்புகின்றோம்- என்றார். (ஐ)

# வடக்கில் 47 பேருக்கு தொற்று

யாழ்ப்பாணம், ஒக். 30

வவுனியாவில் கொரோனாத் தொற்றுக்குள்ளான 44 பேருடன் வடக்கில் நேற்று 47 பேருக்கு கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

யாழ்.போதனா வைத்தியசாலை ஆய்வுகூடத்தில் நேற்று மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர் பரிசோதனையில் குறித்த தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

நேற்று யாழ்.போதனா வைத்தியசாலை ஆய்வுகூடத்தில் 192 பேருக்கு பி.சி.ஆர் பரிசோதனைகள் இடம்பெற்றிருந்தன.

அவற்றின் அடிப்படையில்,

வவுனியா சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் 44 பேர்,

முல்லைத்தீவு மாவட்ட வைத்தியசாலையில் 02 பேர்,

யாழ்.போதனா வைத்தியசாலையில் ஒருவர் என தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர். (அ)

# கொரோனா தொற்றால் 10 பேர் மரணம்

கொழும்பு, ஒக். 30

நாட்டில் மேலும் 10 கொரோனா மரணங்கள் உறுதிப்படுத்தப்பட்டுள்ளன.

சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகத்தின் உறுதிப்படுத்தலுடன் அரச தகவல் திணைக்களம் விடுத்துள்ள அறிக்கையில் இந்தத் தகவல் வெளியிடப்பட்டுள்ளது. இதற்கமைய நாட்டில் பதிவான கொரோனா மரணங்களின் மொத்த எண்ணிக்கை 13 ஆயிரத்து 706 ஆக அதிகரித்துள்ளது.

நேற்றுமுன்தினம் உறுதிப்படுத்தப்பட்ட 10 மரணங்களில் 3 பெண்களும், 7 ஆண்களும் உள்ளடங்குகின்றனர் என்று அரச தகவல் திணைக்களத்தின் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. (இ)

## பல்கலைக்கழக...

வெட்டுப்புள்ளிகளே நேற்று வெளியாகின.

இதனை, பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் https://www.ugc.ac.lk/என்ற இணையத்தளத்தில் பார்வையிடமுடியும். (ஐ)

## ஜனாதிபதி...

இதற்கென அங்குள்ள பிரபல ஊடகங்களிலும் பிரசாரங்கள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

கொரோனா பெருந்தொற்றுக்குப் பின்னர் ஐரோப்பாவில் நடைபெறும் மிகப் பெரிய அனைத்துலக மாநாடாகவும் அதிகளவில் உலகத்தலைவர்கள் ஒன்று கூடும் மாநாடாகவும் ஸ்கொட்லாந்தின் கிளாஸ்கோ நகரில் அடுத்த வாரம் இடம்பெறும் காலநிலை மாநாடு பதிவாக உள்ளது.

இந்தப் பின்னணியில் இந்த மாநாட்டில் பங்கேற்கவரும் இலங்கை ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுக்கு எதிராக பரப்புரைகளும் தீவிரமடைந்து வருகின்றன.

அந்தவகையில் ஜனாதிபதி கோட்டாபயவின் பிரிட்டன் பயணம் குறித்து மக்களை எச்சரிக்கும் வகையிலான முழுப்பக்க ஆக்கம் ஒன்று ஸ்கொட்லாந்தை தளமாக கொண்ட 'தி ஹெரால்ட்' பத்திரிகையில் வெளிவந்துள்ளது.

இலங்கையில் போர்க்குற்றங்கள் மற்றும் இனப்படுகொலைகளில் ஈடுபட்டதாக குற்றம் சாட்டப்பட்டுள்ள இலங்கை ஜனாதிபதி கோட்டாபய அடுத்த வாரம் கிளாஸ்கோ நகருக்கு வருவதான செய்தி ஸ்கொட்லாந்து மக்களுக்கு இன்னொரு முழுப்பக்க ஆக்கமாக 'தி ஹெரால்ட்' பத்திரிகையிலும் வெளிவந்துள்ளது.

கிளாஸ்கோ நகரில் இடம்பெறவுள்ள காலநிலை மாநாட்டின் முக்கிய விடயமாக உலகளாவிய காடழிப்புச் சிக்கல் மற்றும் அதனால் உருவாகும் பருவநிலை தாக்கங்களும் ஆய்வு செய்யப்படவுள்ள நிலையில்,இலங்கையில் தமிழர் தாயகப் பகுதிகளிலும் காடழிப்பு என்பது ஒரு சாதாரண விடயமல்ல எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தமிழ் மக்கள் பூர்வீகமாக வாழும் வடக்கு-கிழக்கில் உள்ள பொதுமக்களின் காணிகளை கைப்பற்றி, காடுகளை அழித்து அந்த பிரதேசங்களில் தென்னிலங்கை மக்களைக் குடியேற்றும் செயற்பாடுகள் முன்னெடுக்கப்படுவதாகவும் இந்த ஆக்கத்தில் விரிவாகக் கூறப்பட்டுள்ளது.

முல்லைத்தீவு, கேப்பாபிலவு பிரதேசத்தில் அமைந்துள்ள இராணுவ முகாமுக்கு முன்னால், தமது காணிகளை விடுவிக்குமாறு பொதுமக்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டுள்ள விடயத்தை சுட்டிக்காட்டி புகைப்படத்துடன் செய்தி வெளியிடப்பட்டுள்ளது.

அத்துடன் தமிழர்களின் நிலங்கள் கைப்பற்றப்படுவதை தடுப்பதற்கான நேரம் இதுவெனவும் அதில் கூறப்பட்டுள்ளது.

## சம்பந்தனுடன்...

செயலாளர் திருமதி.பானு பிரகாஷ், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளரும் பாராளுமன்ற உறுப்பினருமாகிய எம்.ஏ.சுமந்திரன் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

சம்பந்தனுக்குத் தங்கள் தீபாவளி வாழ்த்துக்களைத் தெரிவித்த இந்தியத் தூதுவர், பல முக்கிய விடயங்கள் குறித்து சம்பந்தனுடன் உரையாடினார்.

இலங்கைக்கான புதிய அரசமைப்பு, இலங்கை - இந்திய மீனவர் பிரச்னை என்பவையும் இதில் அடங்கும்.

வடக்கு-கிழக்கில் இந்திய முதலீடுகள், உதவித் திட்டங்கள் பற்றியும் இதன்போது பேசப்பட்டன.

மீண்டும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்றக் குழுவோடு இந்தியத் தூதுவர் சந்திப்பதற்கும் இணக்கம் காணப்பட்டது. (அ-02)

## 'வாழ்வகம்'...

விவகாரக் குழு தலைவருமான இ. த. ஜெயசீலன் நேற்று அனுப்பி வைத்த செய்திக் குறிப்பில்,

யாழ். மாநகராட்சி மன்ற சைவ சமய விவகார குழுவினரால் நல்லூர் உற்சவ காலத்தில் முன்னெடுக்கப்படும் நல்லைக் குமரன் மலர் வெளியீடும் யாழ் விருது வழங்கும் நிகழ்வும் ஏற்கனவே தீர்மானிக்கப்பட்டபடி தற்போதைய சூழலில் முழுமையான சுகாதார நடைமுறைகளின் கீழ் நடைபெறுவதற்கு திருவருள் கைகூடியுள்ளது.

இம்முறை யாழ் விருதானது சுன்னாகத்தில் அமைந்துள்ள வாழ்வக நிறுவனத்தின் (விழிப்புலன் வலுவிழந்தோர் இல்லம்) தலைவரும் கோப்பாய் தேசிய கல்வியியல் கல்லூரி விரிவுரையாளருமான ஆ. ரவீந்திரனுக்கு வழங்கப்படவுள்ளது - என்றுள்ளது. (ஐ)

## நில ஆக்கிரமிப்பை...

முன்னணியின் ஏற்பாட்டில் இடம்பெற்ற இந்த ஆர்ப்பாட்டத்தில் பாராளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் உட்பட அந்தக் கட்சியின் முக்கியஸ்தர்கள், வவுனியாவில் போராட்டத்தில் ஈடுபட்டு வரும் காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்கள் என பலரும் கலந்துகொண்டனர்.

இதன்போது பழைய பஸ் நிலையத்தை சூழவுள்ள வர்த்தக நிலையங்களுக்கு சென்ற பாராளுமன்ற உறுப்பினர் உட்பட குழுவினர் சிங்கள குடியேற்றங்கள் மற்றும் அதன் பாதிப்புக்களை உள்ளடக்கிய துண்டுப்பிரசுரங்களை விநியோகித்தனர்.

குறித்த ஆர்ப்பாட்டத்தில், அடங்க மறுப்பது எம் இனத்தின் குணம், எமது நிலத்தில் எம்மை நிம்மதியாக வாழ விடு, சீண்டாதே சீண்டாதே தமிழர்களை சீண்டாதே, இலங்கை அரசை குற்றவியல் நீதி மன்றத்தில் உடன் பாரப்படுத்து, மீண்டுமொரு இனவழிப்பு அரங்கேற்றமா, தமிழர் தாயகத்து நிலங்களை அபகரிப்பதை நிறுத்து போன்ற பதாதைகளை தாங்கியிருந்ததுடன் கோசங்களையும் எழுப்பினர். (அ)

ஈழநாடு
Eelanadu

## ஒரே ஓவரில் 4 சிக்ஸர்கள் பாகிஸ்தான் இலகு வெற்றி!

டுபாய், ஒக். 30

ஆசிப், ஒரு ஓவரில் 4 சிக்ஸர்களை பறக்க விட ஆப்கானிஸ்தான் அணியை 5 விக்கெட்களால் வெற்றி கொண்டது பாகிஸ்தான் அணி.

இருபது - 20 உலகக் கிண்ணத் தொடரில் சுப்பர் - 12 சுற்றில் நேற்றிரவு டுபாயில் நடந்த போட்டியில் பாகிஸ்தான் - ஆப்கானிஸ்தான் அணிகள் மோதின.

நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற ஆப்கானிஸ்தான் அணி முதலில் துடுப்பெடுத்தாடியது.

பாகிஸ்தான் பந்துவீச்சாளர்களை தாக்குப் பிடிக்க முடியாமல் ஆப்கானிஸ்தானின் முன்வரிசை வீரர்கள் மளமளவென விக்கெட்களை பறிகொடுத்தனர்.

ஆறாவது விக்கெட்டுக்காக களமிறங்கிய நஜிபுல்லா ஷட்ரன் ஓரளவு பொறுப்பாக ஆடி 22 ஓட்டங்களை எடுத்தார். எனினும், 7ஆவது விக்கெட்டுக்காக இணைந்த முஹமட் நபி, குல்பதின் நயீப் ஆகியோர் சிறப்பான இணைப்பாட்டதை ஏற்படுத்தினர். இதனால், ஆப்கானிஸ்தான் போராடக்கூடிய ஓட்ட எண்ணிக்கையைப் பெற்றது.

20 ஓவர்கள் நிறைவில் ஆப்கானிஸ்தான் 6 விக்கெட்கள் இழப்புக்கு 147 ஓட்டங்களைப் பெற்றது. இதில், முஹமட் நபி 5 பௌண்ட்ரிகளுடன் 35 ஓட்டங்களையும், நயீப் 4 பௌண்ட்ரிகள், ஒரு சிக்ஸருடன் 35 ஓட்டங்களையும் ஆட்டமிழக்காமல் பெற்றனர்.

பாகிஸ்தானின் பந்துவீச்சில் இமாட் வசீம் 2 விக்கெட்களையும், ஷா அப்ரிடி, ஹரிஸ் ரவூப், ஹசன் அலி, சதாப் கான் ஆகியோர் ஒவ்வொரு விக்கெட்டையும் கைப்பற்றினர்.

பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய பாகிஸ்தான் அணிக்கு முஹமட் ரிஸ்வான், அணித் தலைவர் பாபர் அஸாம் ஆகியோர் தொடக்கம் கொடுத்தனர்.

ரிஸ்வான் 8 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்க, அடுத்து வந்த பஹர் ஷமான் 30 ஓட்டங்களை அதிரடியாக எடுத்து ஆட்டமிழந்தார். அடுத்து, ஹபீஸ் 10 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார்.

மறுமுனையில் தொடக்கம் கொடுத்த பாபர் அஸாம் பொறுமையாக ஆடி அரைச்சதம் கடந்தார். அவர் 4 பௌண்ட்ரிகளுடன், 47 பந்துகளில் 51 ஓட்டங்களை எடுத்திருந்தார்.



சொஹைப் மலிக் 19 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்க, அடுத்து வந்த ஆசிப் 19ஆவது ஓவரில் 4 சிக்ஸர்களை பறக்கவிட்டார். இதன் மூலம் அவர் 7 பந்துகளில் 25 ஓட்டங்களை ஆட்டமிழக்காமல் பெற, பாகிஸ்தான் அணி 148 ஓட்டங்களை பெற்று 5 விக்கெட்களால் வெற்றி பெற்றது.

ஆப்கானிஸ்தானின் பந்துவீச்சில் ரசீத் கான் 2 விக்கெட்களையும், முஜீப் உர் ரஹ்மான், முஹமட் நபி, நவீன் உல் ஹக் ஆகியோர் தலா ஒவ்வொரு விக்கெட்டை கைப்பற்றினர்.

போட்டியின் நாயகனாக ஒரே ஓவரில் 4 சிக்ஸர்களை பறக்க விட்ட ஆசிப் அலி தெரிவானார். (ஐ)

### இருபது - 20 உலக கிண்ணம்:

# மேற்கிந்தியத்தீவுகள் அணி முதல் வெற்றியை பதிந்தது!





சார்ஜா, ஒக். 30

ரசிகர்களை ஆசனத்தின் விளிம்புக்கு கொண்டுவந்த விறுவிறுப்பான போட்டியில் மேற்கிந்தியத்தீவுகள் 3 ஓட்டங்களால் வெற்றி பெற்று அரையிறுதிக்கான வாய்ப்புக்கான நம்பிக்கையை தக்கவைத்துள்ளது.

இருபது - 20 உலகக் கிண்ணத் தொடரில் சுப்பர் - 12 சுற்றில் சார்ஜாவில் நேற்று நடந்த போட்டியில் மேற்கிந்தியத்தீவுகள், பங்களாதேஷ் அணிகள் மோதின. நாணயச் சுழற்சியில் வென்ற பங்களாதேஷ் அணி முதலில் களத்தடுப்பைத் தெரிவு செய்தது.

முன்னதாக துடுப்பெடுத்தாடிய மேற்கிந்தியத் தீவுகள் அணி 20 ஓவர்கள் நிறைவில் 142 ஓட்டங்களை சேர்த்தது.

143 ஓட்டங்கள் என்ற வெற்றி இலக்கை துரத்திய பங்களதேஷ் அணிக்கு இறுதி ஓவரில் 13 ஓட்டங்களே வெற்றிக்கு தேவைப்பட்டன. அது இறுதிப் பந்தில் 4 ஓட்டங்களாக குறைக்கப்பட்டது. இதனால், போட்டி விறுவிறுப்பாகி உச்சமடைந்தது.

20ஆவது ஓவரை வீசிய அந்த்ரே ரஸல் மிகவும் கட்டுக் கோப்பாக பந்தை வீசினார். அவரின் முதல் பந்தில் இரு ஓட்டங்களை அபிப் ஹூசைன் எடுத்தார். இரண்டாவது பந்தில் உதிரியாக ஓர் ஓட்டம் ஓடிப் பெறப்பட்டது. 3, 4, 5ஆவது பந்துகளில் தலா 2 ஓட்டங்களை மஹ்மதுல்லா பெற்றார்.

இதனால், ஆறாவது பந்தில் வெற்றிக்காக நான்கு ஓட்டங்கள் பெற வேண்டிய நிலை, அந்தப் பந்தை யோர்க்கர் பந்தாக வீசுகிறார் ரஸல் அதை அடிக்க முயன்ற மஹ்முதுல்லாவின் துடுப்பில் பந்து படவில்லை. எந்த ஓர் ஓட்டமும் பெறப்படவில்லை.

இதனால், 20 ஓவர்கள் நிறைவில் 5 விக்கெட்களை இழந்து 139 ஓட்டங்களையே பெற்று 3 ஓட்டங்களால் பங்களாதேஷ் தோல்வியடைந்தது.

அந்த அணிக்காக லிற்றன் டாஸ் 44 ஓட்டங்களை சேர்த்தார். அணித்தலைவர் மஹ்மதுல்லா 31 ஓட்டங்களை 2 பௌண்ட்ரிகள், ஒரு சிக்ஸருடன் சேர்த்தார்.

முன்னதாக துடுப்பெடுத்தாடிய மேற்கிந்தியத்தீவுகள் அணியில் சிம்மன்ஸ் நீக்கப்பட்டு, அவருக்கு பதிலாக றோஸ்ரன் ஷேஸ் சேர்க்கப்பட்டார். இதனால், அணியின் தொடக்க வீரராக கிறிஸ் கெயில் களமிறக்கப்பட்டார். அவர் 4 ஓட்டங்களையே பெற்றார். றோஸ்ரன் ஷேஸ் பொறுமையாக ஆடி 39 ஓட்டங்களை எடுத்தார்.

அதன் பின்னர் வந்த வீரர்கள் வேகமாக விக்கெட்களை இழந்த நிலையில் நிக்கோலஸ் பூரண் 4 சிக்ஸர்கள், ஒரு பௌண்ட்ரியுடன் 28 பந்துகளில் 40 ஓட்டங்களை சேர்த்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

பங்களாதேஷின் பந்துவீச்சில் மஹேடி ஹசன், முஸ்தபிஹூர் ரஹ்மான், சொரிபுல் இஸ்லாம் ஆகியோர் தலா இரு விக்கெட்களை வீழ்த்தினர்.

போட்டியின் நாயகனாக நிக்கோலஸ் பூரண் தெரிவானார். (ஐ)










இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 30.10.2021 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

# இன்றைய தொலைக்காட்சி நிகழ்ச்சி நிரல்

## DAN தமிழ் ஒளி

**காலை**
6.00 மணி : பக்திப்பாடல்கள்
6.30 மணி : வணக்கம் டான்



6.31 மணி : தினம் ஒரு திருக்குறள்
6.35 மணி : சமயம் சார்பான நற்சிந்தனைகள்
6.55 மணி : இன்றைய பலன்
7.05 மணி : உளவியல் கருத்து
7.15 மணி : கதைவழி அறமொழி-யோன்சன் ராஜ்குமார் ஆசிரிய ஆலோசகர் யாழ்ப்பாணம் வலயக்கல்வி
07.30 மணி : பத்திரிகைகள் ஒரு பார்வை
8.30 மணி : காலை செய்திகள்
9.00 மணி : கலாட்டா காலை-நேரலை
10.30 மணி : TIK TOK



11.00 மணி : அந்தக்காலம் இந்தக்காலம் -மறு ஒளிபரப்பு

**பகல்**
12.00 மணி : வீக் என்ட் கொண்டாட்டம் (நேரலை)
1.00 மணி : மழலைகள் நேரம்-சிறுவர் நிகழ்ச்சி
1.30 மணி : WEEK END MOVIE- அருள்
04.30 மணி : காட்டூன் தமிழ்
5.00 மணி : அந்தி மந்தாரை (நேரலை)
6.00 மணி : எது சரி? எது பிழை

**இரவு**
7.00 மணி : கொழும்பு-16- உங்களுக்கு தெரியாத கொழும்பு



7.30 மணி: மனிதனின் மறுபக்கம்
8.00 மணி : இரவுச் செய்திகள்
9.00 மணி: சொல்லாடுகளம்




10.00 மணி : நெற்றிக்கண்

## DAN COMEDY HD

**காலை**
6.00 மணி : சிரி சிரி சிரி
8.00 மணி : சிரிப்பு சரடிவெடி
10.00 மணி : ஒரு பட கொமடி
11.00 மணி : சிரிப்போ சிரிப்பு

**பகல்**
1.00 மணி : நகைச்சுவை மன்னன் கவுண்டமணி செந்தில் நடிப்பில் கலக்கல் காட்சிகள்
3.00 மணி : குண்டக்க மண்டக்க
5.00 மணி : ஒரு பட கொமடி
6.00 மணி : கொமடி கலாட்டா

**இரவு**
8.00 மணி : ஒரு படக்கொமடி
9.00 மணி : சிரிப்போ சிரிப்பு
10.00 மணி : விடிய விடிய சிரிப்பு தான்

## DAN MUSIC HD

**காலை**
6.00 மணி : பனிப்பூக்கள்
7.00 மணி : திசை எட்டும் இசை எட்டும்
8.00 மணி : வணக்கம் டான் மியூசிக்
9.00 மணி : மெல்லிசை
10.00 மணி : கேட்டாலே பரவசம் (நேரலை)

**பகல்**
12.00 மணி : ராஜா ராணி
1.00 மணி : விசை இசை
3.00 மணி : வட்ஸ் அப் (நேரலை)
4.00 மணி : டீ டைம் ராகங்கள் (நேரலை)
5.00 மணி : இனிது இனிது
6.00 மணி : என்றென்றும் இசை
7.00 மணி : ஓய்வெடு நிலவே

**இரவு**
8.00 மணி : காற்றில் வரும் கீதம்
9.00 மணி : நிலவு தூங்கும் நேரம்

## கல்வி tv CHANNEL-1

**காலை**
5.15 மணி : தரம் 06 - விஞ்ஞானம்
6.00 மணி : தரம் 07 - தமிழ்
6.45 மணி : தரம் 08 - தமிழ்
7.30 மணி : தரம் 09 - கணிதம்
8.15 மணி : தரம் 10 - கணிதம்
9.00 மணி : க.பொ.த உயர்தரம் (கலைப்பிரிவு) நாடகமும் அரங்கியலும்
10.00 மணி : க.பொ.த உயர்தரம் (வணிகப்பிரிவு) வணிகக்கல்வி
11.00 மணி : க.பொ.த உயர்தரம் (கணிதம்,விஞ்ஞானப்பிரிவு) உயிரியல்

**பகல்**
12.00 மணி : தரம் 06 - விஞ்ஞானம்
1.00 மணி : தரம் 07 - தமிழ்
2.00 மணி : தரம் 08 - தமிழ்
3.00 மணி : க.பொ.த சாதாரண தரம் சங்கீதம்
3.40 மணி : க.பொ.த சாதாரண தரம் விஞ்ஞானம்
4.20 மணி : க.பொ.த சாதாரண தரம் விஞ்ஞானம்
5.00 மணி : க.பொ.த சாதாரண தரம் சித்திரம்
5.40 மணி : க.பொ.த சாதாரண தரம் புவியியல்
6.20 மணி : க.பொ.த சாதாரண தரம் மாதிரி வினாத்தாள்

**இரவு**
7.00 மணி : க.பொ.த சாதாரண தரம் மாதிரி வினாத்தாள்

## ஓம் ரிவி

**காலை**
5.00 மணி : சிவாய மந்திரம்
6.00 மணி : சுப்ரபாதம்
6.30 மணி : சுப்ரபாதம்
07.00 மணி : இன்றைய சிந்தனை
07.05 மணி : இன்றைய நாள்
07.30 மணி : மங்கள இசை
08.00 மணி : அருளுரை
08.30 மணி : திருவாசகம்
09.00 மணி : திருவிழா-01
10.00 மணி : பாடல்கள்
10.30 மணி : பஜனை
11.00 மணி : பக்திமலர்

**பகல்**
12.00 மணி : திரையில் பக்தி
12.30 மணி : திருவிழா-02
6.00 மணி : கந்தசஷ்டி கவசம்

**இரவு**
7.00 மணி :செய்திகள்
7.30 மணி : அருளுரை

## CHANNEL HOLY MARY

**காலை**
7.00 மணி : நாளொரு நற்சிந்தனை
7.30 மணி : அன்பின் மகிழ்வு குடும்பம்
8.00 மணி : ஜெபமாலை
9.30 மணி : இறைமகன் யேசுவின் அற்புதங்கள் (மறுஒலிபரப்பு)
10.00 மணி: அன்னை மரியா
10.30மணி : திருப்பலி (யாழ்ப்பாணம்)
11.30 மணி : ஜெபங்கேளும் திருகோணமலை (சனி மறு ஒளிபரப்பு)

**பகல்**
12.00 மணி : திருப்பலி (திருகோணமலை)
01.00 மணி : திருப்பலி (மட்டக்களப்பு)
02.00 மணி : நற்கருணை ஆராதனை (திருகோணமலை)
03.00 மணி : திருப்பலி யாழ்ப்பாணம் (மறு ஒளிபரப்பு)
04.00 மணி: திருப்பலி (மட்டக்களப்பு)
05.00 மணி : திருப்பலி (திருகோணமலை)
06.00 மணி : நாளொரு நற்சிந்தனை (மறு ஒளிபரப்பு)
07.00 மணி : ஞானவழி
07.30 மணி : அன்பியம்

## Pirai Television

**காலை**
6.00 மணி : கிராத்
7.00 மணி : இறை சிந்தனை
7.30 மணி : இஸ்லாமிய பாடல்
8.00 மணி : கலந்துரையாடல்
9.00 மணி : இஸ்லாமிய சீரிஸ்
10.00 மணி : மனதோடு பேசலாம்
10.30 மணி : கண் வசண்ணம் கை வண்ணம்
11.00 மணி : சுவனப்பாதை
11.30 மணி : வரலாறு சொல்லும் வைத்தியம்

**பகல்**
12.00 மணி : லுகர் அதான்
12.30 மணி : இஸ்லாமிய வரலாறு
1.00 மணி : இஸ்லாமிய திரைப்படம்
2.00 மணி : கஸீதா
2.30 மணி : இறை சிந்தனை
3.00 மணி : பாடல்கள்
3.30 மணி : பள்ளிவாசல் ஆவணப்படம்
4.00 மணி : சிறுவர் இஸ்லமிய கார்டுன்
5.00 மணி : இறை தென்றல்
6.00 மணி : தாஜீமதுல் குர்ஆன்

**இரவு**
7.00 மணி : பிறை பிரசங்கம்
8.00 மணி : இஸ்லாமிய வரலாறு